கல்கி

KALKI 24.8.97 ரூ. 4.00

ஆழ்வார்
ஆகிறார்
பாரதியார்!



ஆடை முக்கால்!

— புதிய ஃபேஷன் குறிப்புகள்


SunLine
Super - Refined 100% Sunflower Oil
ஹா! ஹா! மெழுகுத்தன்மையிலிருந்து
எனக்கு முற்றிலும் விடுதலை!
Free from solvent extracts • Vitamin 'E' enriched • Anti-Cholesterol
SSD Oil Mills Co. Ltd., Chennai - 600 056.



பதிமூன்றாவது ஆழ்வார் பாரதியார்?

சுதந்தரப் பொன் விழா தினத் தன்று, சென்னை அடையாறிலுள்ள மத்திய கைலாஷ் கோயிலில் பாரதியார் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு, அவருக்கு பாரதி ஆழ்வார் என்ற நாம கரணம் சூட்டப்பட்டது. பாரதி ஆழ்வாருக்கு அபிஷேகம், ஆராதனையெல்லாம் உண்டு. 'விடுதலை.. விடுதலை' என்று பாடிய பாரதியை 'சாமி' ஆக்கி சன்னதியில் அடைப்பது எந்த விதத்தில் நியாயம்? மத்திய கைலாஷ் கோயிலை நிர்வகிக்கும் ஸ்ரீ ஆனந்த விநாயகர் தர்ம ஸ்தாபனத்தின் செயலாளர் எஸ்.டி. ஸ்வாமியிடம் கேட்டோம்.

"ஆழ்வார்கள் என்றால் யார்? ஸ்ரீமந் நாராயணனைத் தங்கள் பக்தி

கோவிலில் பாரதியார்!

சென்னையில் பரபரப்பு!!



''சுதந்தரப் பொன்விழா ஆண்டில் நீங்க பெருமை கொள்ளும் விஷயம்?''

''இந்த ஊழல்மயமான காலத்திலே நாமும் வாழக் கொடுத்து வைத்திருக்கிறதே என்பதுதான்!''

— கு. அருணாசலம்

மூலம் அமிழ்ந்து ஆழ்ந்து அனுபவித்தவர்கள் தான் ஆழ்வார்கள். அந்த வகையில் பார்த்தால், கண்ணனிடம் பாரதியார் காட்டிய பக்திக்கு எல்லை உண்டா? கண்ணனைத் தாயாகவும் தந்தையாகவும், தோழனாகவும், சேவகனாகவும், சீடனாகவும், சற்குருவாகவும் பாடி, தமது பக்தியைக் காட்டியிருக்கிறார் பாரதியார். கோவிந்தன் பாட்டில் 'நினைக் கண்டு நின்னோடு கலப்பதன்றோ' என்று பாடுகிறார். 'தீக்குள் விரலை வைத்தால் நினைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா' என்றார். 'தீயை' எந்தக் கண்ணோட்டத்தில் பாரதியார் பார்க்கிறார்? மனிதனின் தொட்டில் முதற் கொண்டு கடைசிப் பயணம் வரையில் அவனால் கடைப்பிடிக்கப்படும் சம்பிரதாயங்களில் சாட்சியாக நிற்பது 'அக்னி'. அந்த 'அக்னி' பகவானைத் துணைக் கொண்டு செயல்படும் போதெல்லாம் கண்ணனை உணர்கிறார் பாரதியார். பாமரர் நோக்கில் பார்க்கும் போது தீயினுள் கைவைத்தால் என்ன விளைவுகள் என்று தெரியும். ஆனால் அந்த 'அக்னி' சுட்டெரிக்கும் துன்பத்துக்கு பதிலாக, குளிர்விக்கும் இன்பமாகத் தெரிகிறது பாரதியாருக்கு. இதற்கு காரணம் அந்த பரந்தாமன் மேல் அவர் வைத்திருந்த எல்லையற்ற பக்திதானே! இப்படி நிறையவே சொல்லலாம். ஆகவே, மற்ற ஆழ்வார்களைப் போல் பாரதியாரும் பகவானை அமிழ்ந்து ஆழ்ந்து அனுபவித்தவர். ஆகையால் அவரை ஆழ்வாராகக் கொண்டாடுவதில் எந்தத் தவறும் இருக்க முடியாது.''

''ஆக பாரதியார் பதிமூன்றாவது ஆழ்வாரா?''

''வழக்கில் பன்னிரண்டு ஆழ்வார்கள் என்று சொன்னாலும், பத்து ஆழ்வார்களைத் தான் கணக்கில் கொள்ள வேண்டும். ஆண்டாள்– அவதாரம். மதுரகவியாழ்வார், நம்மாழ்வாரை ஆசார்யனாகக் கொண்டவர்... இது தவிர பரதாழ்வார், கருடாழ்வார் விபீஷணாழ்வார் ஆகியோரும் உண்டே!''

''பாரதியை ஆழ்வார் என்று கருதும் கருத்து உருவானது எப்படி?''

''சுமார் ஏழு வருடங்களுக்கு முன் கவிஞர் சுப்பு ஆறுமுகம் தான் இப்படி ஒரு புது சிந்தனையை உருவாக்கினார். பேச்சு வாக்கில் ஒரு நாள் 'பாரதியார் தொழுகுலமாயிற்றே' என்றார். எனக்குள் பொறி தட்டிற்று. ஆழ்வார்களைத் தான் தொழுகுலம் என்று சொல்வோம். அவர்கள் தொழுகுலமாக இருப்பதால் மற்றவர்கள் தொழ வேண்டிய குலமாக அல்லவா அவர்கள் இருக்கிறார்கள்! நம் கோயில்களில் ஆழ்வார்களுக்கு சன்னதிகள் உண்டே! நாங்கள் சேர்ந்து வெளிப்படுத்திய கருத்தை நிறைய பேர் பரிகாசம் செய்தார்கள். ஆனால் நாங்கள் பதில் சொல்லவில்லை. பரிகாசப் பேச்சுக்களைத் தாண்டி, எதிர்ப்புகளை சரிப்படுத்தி சிலையை பிரதிஷ்டை செய்ய, ஏழாண்டு காலம் ஆனது.''

''பாரதியாருக்குத் தனி சன்னதியா?''

''இடையாது. அபிராமி சன்னதியில் பாரதியாருக்கு ஒரு ஸ்தானம் கொடுத்திருக்கிறோம். ராஜகோபால ஸ்வாமி சன்னதிக்கு நேர் எதிரில் அபிராமி சன்னதி இருக்கிறது. ஆக பாரதியார் அந்தப் பெருமானை, நாராயணனைப் பார்த்துக் கொண்டே இருப்பார்.''

''இனி பாரதியைப் போல் சமகாலத்தில் பக்தி சிரத்தையுடன் கவிதை பாடிய பலர் ஆழ்வார்களாக கொண்டாடப்படும் வாய்ப்பு இருக்கிறதே.''

''பாரதியை நாங்கள் ஆழ்வாராக உணர்ந்தோம்; அவரைக் கொண்டாடுகிறோம். எதையும், யாரையும் தடுப்பதற்கு எங்களுக்கு உரிமை இடையாது. அவ்வளவுதான். உண்மை, சத்தியம் என்று இருக்கிறதல்லவா! அது மட்டுமே எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருக்க முடியும்.''

பாரதி ஆழ்வாருக்கு 108 பாசுரங்களை இயற்றும் பணியில் ஆர். நரசிம்மன் என்ற அன்பர் ஈடுபட்டிருக்கிறாராம்!

இது இப்படியிருக்க, பாரதியை 'ஆழ்வார்' ஆக்கியது சரியா என்று அவரது பேத்தி லலிதா பாரதியிடம் கேட்டோம். அவர் சொன்னார்: ''பாரதி தீவிர கண்ணன் பக்தர் தான், அதில் சந்தேகமில்லை. பாரதி பக்தர்கள் சிலர் இதனை முன்னிட்டு அவருக்கு சிலை வைப்பதையோ, ஆழ்வார் என்று வணங்கு வதையோ நாம் குறை சொல்ல முடியாது. அவர்களது பக்தியை அப்படி வெளிப்படுத்து கிறார்கள்; அவ்வளவுதான். மேலும், ஒரு கோவிலில் பாரதிக்கு ஒரு சன்னிதி, சிலை, வழிபாடு என இருந்தால் அவரைப்பற்றித் தெரியாதவர்கள் கூட தெரிந்து கொள்ள இயலுமே!''

— ப்ரியன்

ஆகஸ்ட் 15, 1947 அன்று பிறந்தவர்களுக்குக் கல்கி ஒரு பரிசு வழங்கவிருப்பதாக அறிவித்திருந்தோமல்லவா?

ஏராளமான வாசகர்கள் அதற்குத் தம் பிறந்த தினச் சான்றுகளை அனுப்பியிருந்தனர். கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் – இவையே வயது அறிய பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. பலர் ஜாதகம் அனுப்பியிருந்தார்கள்! ஜாதகங்கள் பரிசிலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை : ஸாரி!

பரிசுக்குத் தேர்வான பதினேழு பேரின் பட்டியல் இதோ. சுதந்தர தினத்தன்று பிறந்த இவர்களுக்கு, சுதந்தரத்தின் பொன் விழா ஆண்டுப் பரிசாக வெள்ளிப் பதக்கம் அளித்து, வாழ்த்துகிறது கல்கி.

வெள்ளிப்பதக்கம் வெல்கிறார்கள்

வெள்ளிப் பதக்கம் பெறும் வாசகர்கள் :

1. ஆர். சந்திரா ராமகிருஷ்ணன்
10, ராகவேந்திரபுரம்,
ஸ்ரீரங்கம், திருச்சி - 6.

2. என். சரோஜா,
10, ஆறுமுக நகர்,
பொள்ளாச்சி - 2.

3. க. காந்தி,
5/12 'A' இளங்கோ இல்லம்,
சூளை, மடத்துப்பாளையம் பாதை,
அவிநாசி - 641 654.

4. பி. ராதாகிருஷ்ணன்,
402, 'லக்ஷ்மி பிரகாஷ்',
7 வது தெரு,
காந்திபுரம், கோவை - 12.

5. ஆர். சாய்பாரதி,
99, ஏகாம்பர தபேதார் தெரு,
ஆலந்தூர்,
சென்னை - 16.

6. எம். நாகேந்திரன்,
11-B சுரேந்திர நகர் 5வது தெரு,
பொன்மேனி வழி,
மதுரை - 625 010.

7. கே. வி. சுப்ரமணியன்,
பிளாட் எண் 89,
அழகு சுந்தரம் நகர்,
பைகாரா, மதுரை - 625 003.

8. எம். ஆரோக்கியசாமி,
23, மெய்யப்பன் 2வது தெரு,
மதுரை - 625 016.

9. சுதந்திரா இராமச்சந்திரன்,
C/o எம். சரவணன்,
60, ஸ்ரீனிவாச நகர் 2-வது வீதி,
மச்சுவாடி,
புதுக்கோட்டை - 622 004.

10. ஆர்.வி. ஸ்வதந்திரகுமார்
14, 15 வசந்த நகர்,
தேங்காய்த் திட்டு,
புதுச்சேரி - 605 004.

11. வி.ஜி. மோகன்,
56, டி.பி. ரோடு,
பழனிப்பேட்டை அஞ்சல்,
அரக்கோணம் - 2.

12. ரகுநாதன்,
15, வெங்கடரத்தினம் தெரு,
தேனாம்பேட்டை,
சென்னை - 18.

13. சி. வரலட்சுமி,
11, கிழக்கு கரிகாலன் 2வது தெரு,
ஆதம்பாக்கம்,
சென்னை - 88.

14. ஆர். சுந்தரவல்லி
23, 4-வது மேற்கு குறுக்குத் தெரு,
வித்யா நகர்,
சேலம் - 636 003.

15. ஸ்வதந்தரலக்ஷ்மி நடராஜன்,
F-2, சௌந்தர்யா அபார்ட்மென்ட்ஸ்,
49, மாம்பலம் ஹைரோடு,
தி. நகர், சென்னை - 17.

16. எஸ். சுதந்திரா தேவி,
க/பெ. ராமமூர்த்தி,
5504-05. மார்த்தாண்டபுரம் முதல் தெரு,
புதுக்கோட்டை - 622 001.

17. வி. ஸ்ரீனிவாசன்,
8வது குறுக்கு,
ஆ-184, சிவசக்தி நகர்,
சிதம்பரம் - 608 001.

ஆகஸ்ட் 15, 1947-ல் பிறந்தவர்களுக்கு வெள்ளிப் பதக்கம்!

'கல்கி' வழங்குகிறது!

"போலோ" மெஷின் சென்னை வந்தது!





இனியாவது இந்தியா ஜெயிக்க வேண்டும்!

ஒரு ஃபாஸ்ட் போலர் ஸ்பின் போட மாட்டார். ஸ்பின்னரால் பவுன்ஸர் சாத்தியமில்லை. யார்க்கர் போடத் தெரிந்தவருக்கு கூக்ளி சாத்தியப்படாது. கூக்ளியைக் கூடத் தொடர்ந்து போட்டால் விரல் பழுத்து விடும். ஆனால், போலோ (BOLO)வுக்கு இது எல்லாமே சாத்தியம்! மணிக்கு 120 கி.மீ. வேகத்தில் போலிங் போட வேண்டுமா? லெக் ஸ்பின்னா? ஆஃப் பிரேக்கா? பவுன்ஸரா... எல்லாமே சாத்தியம். எப்படி?

'BOLO' ஓர் இயந்திரம். பந்து வீசும் இயந்திரம். கடந்த ஜூனில் இங்கிலாந்தில் வடிவமைக்கப் பட்ட இந்த இயந்திரம் இப்போது சென்னைக்கு வந்து விட்டது. வரவழைத்திருப்பது, இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம்.

போலிங் மெஷின் என்பது முன்பே இருந்ததுதான். ஆனால் அது ஒரே மாதிரி வேகப் பந்து மட்டுமே வீசும். இப்படி சகலகலா மெஷின் வடிவமைக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறை.

குருநானக்-கல்லூரி வளாகத்தில் நிறுவப்

மணிக்கு 120 கி.மீ. வேகம்!! இங்கிலாந்து அபாரம்!!!



• போலோ மெஷின்

பட்டுள்ள இந்த மெஷினைப் பற்றி பிரபல முன்னாள் கிரிக்கெட்டர் சந்திரசேகர் சொன்னார்:

"இந்த மெஷினின் சிறப்பு இதன் வேகம், மணிக்கு 120 கி.மீ. வேகம் என்பது சாதாரணமானதல்ல. உலகின் அதிவேக வீச்சாளர்களான தாம்சன், லில்லி, டொனால்டு போன்றவர்கள்கூட மணிக்கு நூறு கி.மீ. வேகத்தில் வீசுவார்கள்தாம். ஆனால் எல்லா பந்துகளும் அப்படி வரும் என்று சொல்ல முடியாது. கன்ஸிஸ்டன்ஸி இருக்காது. ஆனால் இது மிஷின் அல்லவா? நெட் பிராக்டிஸுக்கு இந்த வேகம் ரொம்ப உபயோகமாக இருக்கும்!" என்றார்.

"பொதுவாக யார்க்கர் ஆடுவதில் நம்மவர்கள் திணறுவார்கள். இந்த மெஷின் அதற்கான பயிற்சியைத் தரும்" என்றவர், மேலும் ஒரு சங்கதி சொன்னார்.


நெட் பிராக்டிஸில் ஒரு பேட்ஸ்மேனுக்கு நாலு பேர் பந்து வீசுவார்கள். இரண்டு வேகப்பந்து வீச்சாளர்கள், ஒரு லெக், ஒரு ஆஃப் ஸ்பின்னர்கள். இனி அத்தனை பேர் வேண்டாம். நாலு பேர் வேலையை இந்த மெஷினே செய்ய, பௌலர்கள் வேறு சோலி எதையாவது பார்க்கலாம்! (குறிப்பாக அவர்களும் பாட்டிங் பிராக்டிஸ் செய்து கொள்ளலாம்!)

ஸ்கொயர் கட், புல் ஷாட் என குறிப்பிட்ட ஷாட்களில் தொடர்ந்து பயிற்சி பெற இந்த மெஷின் வெகு உபயோகம். தேவைக்கேற்ப செட் பண்ணி வைத்தால் ஒரே மாதிரியான பந்துகளை வீசிக் கொண்டே இருக்கும். நாம் பயிற்சி செய்து கொண்டே இருக்கலாம்.

வழக்கமான கிரிக்கெட் பந்துகளை விடச் சற்று கனம் குறைந்த பந்துகளையே வீசும் இந்த போலோ இயந்திரத்தின் விலை இரண்டரை லட்சம் ரூபாய்!

போகிற போக்கில் ஆடுவதற்கும் ஒரு மெஷின் வந்து, அந்த மெஷினுக்கும் இந்த மெஷினுக்கும் மாட்ச் நடத்தி ஆட்டக்காரர்கள் பந்து பொறுக்கிப் போட வேண்டி வரலாம்......?!

— சங்கர சுப்பிரமணியன்.



• குண்டு வெடிப்பில் சிதறிய கார்

வடபழநி நூறடி சாலையை ஒட்டி வசிப்பவர் பெருமாள். தமிழ் சினிமாவில் துணை நடிகர். முதல் நாள் குடும்பத்துடன் பெரியபாளையம் அம்மன் கோயிலுக்குச் சென்று வந்தவுடன், டாடா சுமோ வண்டியை வழக்கம் போல மாநில தேர்தல் ஆணையம் அலுவலகத்தின் முன், நிறுத்தி வைத்துள்ளார். இரவு நல்ல தூக்கம். திடீரென பயங்கர வெடிச்சப்தம். 'ஆடி மாதம் ஆயிற்றே... அம்மன் ஊர்வலத்தில் பட்டாசு வெடித்திருப்பார்கள்' என்று தூக்கத்தைத் தொடரப் போன சமயம், பெரும் பதற்றத்துடன் வாசலில் காலிங்பெல் ஒலித்தது. திறந்தால் டிரைவர் மகேந்திரன்.

"குண்டு வெடிச்சு வண்டி நாசமாப் போயிடுச்சு" என்று அவர் சொன்ன செய்தியைக் கேட்டு ஆடிப்போய்விட்டார் பெருமாள். வண்டியை பார்க் செய்திருந்த இடத்துக்கு ஓட்டமும் நடையுமாக வந்து பார்த்தால், வண்டியின் முன்பகுதி சின்னாபின்னமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. பெருமாளின் மாமியார் பேபி அம்மாளுக்குச் சொந்தமான வண்டி அது. சில நூறு அடி தொலைவிலுள்ள கோடம்பாக்கம் போலீஸ் நிலையத்திலிருந்து போலீஸார் அதற்குள் வந்து விட்டார்கள். நூறடி சாலையில் குண்டு வெடித்த அதே சமயம் ஏழு கி.மீ. தொலைவில் கஸ்தூரி ரங்கா சாலையில் உள்ள ரஷ்ய கலாசார மையத்திலும் குண்டு வெடித்த விவகாரம் அப்போது அங்கிருப்பவர்களுக்குத் தெரியாது.

சுதந்தரப் பொன்விழாவை ஒட்டி சில தீவிரவாத குழுக்கள் அமைதியைக் குலைக்கும் நோக்கத்துடன் ஆங்காங்கே குண்டு வெடிப்புகளை நடத்தப் போவதாக மாநில அரசுக்குத் தகவல் வந்ததில் இருந்தே கொஞ்சம் பதற்றமாகவே இருந்தது போலீஸ். ஆண்டிமடம் போலீஸ் ஸ்டேஷன் ஆயுதக் கொள்ளைக்குப் பிறகு இளவரசன் குழுவினர் தலைமறைவு ஓட்டத்தில் இருந்ததால், அந்தக் குழு இது போன்ற சம்பவங்களில் ஈடுபடுமா என்ற சந்தேகம் இருந்தது. ஆனால் இளவரசன் பிடிபட்ட பிறகு அந்தக் கோபத்தில், அங்கொன்றும், இங்கொன்றுமாக சம்பவங்கள் நடக்கலாம் என்று எதிர்பார்த்தது போலீஸ். போலீஸ் அதிகாரிகள் கவலைப்பட்டது, 'குண்டு வெடிப்புகள்' அரசியல் ரீதியாக அரசுக்கு அவப்பெயரை உண்டாக்குமே என்பதற்குத்தான்.

கடலூர், பெரம்பலூர், மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள சில குழுக்கள் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டன. இது தவிர முஸ்லீம் தீவிரவாத கும்பல்களும் போலீஸின் பார்வைக்கு உள்ளாயின. இருந்தும் அனைத்தையும் மீறி சென்னையில் குண்டு வெடிப்புகள் நடந்து விட்டன!

"மக்கள் பீதி அடையத் தேவையில்லை. சம்பவங்களைத் தடுக்க ஒத்துழைப்புத் தாருங்கள்!" என்று முதல்வர் சொல்ல வேண்டியதாயிற்று. ஏனென்றால் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு சாதிக் கலவரங்களையும் சேர்த்து சிறிதும் பெரிதுமாக, கிட்டத்தட்ட ஐம்பது இடங்களில் குண்டு வெடித்திருக்கிறது. 'குண்டு கலாசாரம்' தமிழ்நாட்டில்தான் தீவிரமாகச் செயல்படுவதாக சாதாரண மக்கள் மத்தியில் பேச்சு!

சென்னை குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குப் பிறகு செங்கல்பட்டு போலீஸ் நாஞ்சில் குமரன் தலைமையில் கொஞ்சம் உஷாராகவே செயல்பட்டு, சட்ட விரோதமாக கடத்தப்பட்ட ஏராளமான வெடி மருந்துக் குச்சிகளை (ஜெலடின்)யும் அவை வெடிப்பதற்குத் தேவையான டெடனேட்டர்களையும் பறிமுதல் செய்திருக்கிறது. அதனால்தானோ என்னவோ, பயந்து கொண்டிருந்தபடி சுதந்தர தினத்தன்று எந்த குண்டு வெடிப்புகளும் இல்லை!

"ஆனால் போலீஸ் துறையின் கீழ் மட்டங்களில் இன்னமும் திறமையாகச் செயல்பட்டால் தான் போலீஸ் அதிகாரிகளின் நிம்மதி தொடரும்" என்று சொல்கிறார் ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரி ஒருவர்.

'தனித் தமிழ்நாடு கோரிக்கையைக் கைவிட்டு விட்டாலும் அதற்குரிய காரணங்கள் அப்படியே இருக்கின்றன!' என்றார் அண்ணா. அவர் சொல்லி விட்டுப் போன இந்தக் கருத்தைத் தான் சிக்கெனப் பிடித்துள்ளன தமிழ்நாட்டிலுள்ள விரல் விட்டு எண்ணக்கூடிய தீவிரவாதக் குழுக்கள். குண்டு வெடித்த இடங்களில், வீசப்பட்டிருக்கும் நோட்டீஸ்களைப் பார்த்தாலே அவர்களது நோக்கம் புரிந்துவிடும். "சுதந்தர தினப் பொன்விழா ஒரு கேடா; ஆகஸ்ட் 15 – தேசிய இனங்கள் கொல்லப்படுவதற்குத் திருவிழா, தேர்தல் பாதை திருடன் பாதை; தமிழ் இனத்துக்கு தனி தேசம்'

சென்னையில் குண்டு



போலீஸுக்குக் காத்திருக்கும் சவால்!

என்றெல்லாம் கரடுமுரடான பேப்பர்களில் எழுதிப் போட்டுவிட்டுப் போயிருப்பார்கள்.

சமீபத்தில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவம், இளவரசன் கும்பலின் கைவேலைதான் என்று முதலில் தீவிரமாக நம்பியது போலீஸ். இந்தக் கண்ணோட்டத்தின் காரணமாக, அன்று பெரம்பலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் போலீஸ் நிலையத்தில் இளவரசன் கும்பலைச் சேர்ந்த சடையன் என்பவர் தீவிரமாக விசாரிக்கப்பட்டார். (மறுநாள் போலீஸ் ஸ்டேஷன் வளாகத்தில் வேப்ப மரத்தில் அவர் தூக்குப் போட்டுக் கொண்டு தொங்கினார் என்று செய்தி வந்தது). ஆனாலும் போலீஸ் முதலில் கொஞ்சம் குழப்பம் அடைந்தது என்பதுதான் உண்மை. தமிழரசனின் இயக்கத்தின் பெயர், தமிழ்நாடு விடுதலைப் படை. குண்டு வெடித்த இடங்களில் இருந்து எடுக்கப்பட்ட நோட்டீஸ்களில் 'தமிழக மக்கள் விடுதலைப் படை' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதுபோன்ற கும்பல்கள் போலீஸை திசை திருப்புவதற்காக, பல்வேறு 'விளையாட்டுக்களில்' ஈடுபடுவார்கள் என்பது தெரிந்த விஷயம்தான்.

இப்போது, மதுரை பக்கம் உள்ள சிலம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ராஜாராமன் என்பவர் தலைமையில் செயல்படும் தமிழக மக்கள் விடுதலைப் படைதான் சென்னை குண்டு வெடிப்புகளை நடத்தியிருக்க முடியும் என்று போலீஸ் சொல்கிறது. ஆனால் இந்தக் கும்பல் பெரும்பாலும் திருச்சிக்கு இந்தப் பக்கம் தங்கள் கைவரிசையைக் காட்டுவதில்லை என்று சில 'உள்நோக்கர்கள்' சொல்கிறார்கள்.

"என்றாலும் போலீஸின் சகல மட்டங்களிலும் ஒருங்கிணைந்து செயல்பட்டு தீவிரவாத ஆயுதக் குழுக்களை ஒழித்துக் கட்ட வேண்டும்" என்றார் ஓர் ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரி. "அண்டை மாவட்டமான ஆந்திராவின் மக்கள் யுத்தக் குழு போன்ற வலுவான குழு தமிழகத்தில் இல்லை. ஆனால் போலீஸ் தீவிரமாகச் செயல்படாவிட்டால், வலுவான குழுக்கள் எதிர்காலத்தில் உருவாகலாம்!" என்கிறார் அவர்.

சுதந்தர தினத்தை அமைதியாகக் கழித்து விட்டாலும், சென்னை போலீஸுக்கு இப்போது இன்னொரு கவலை வந்து பற்றிக் கொண்டுள்ளது. இதற்குக் காரணம் வர இருக்கும் பிள்ளையார் சதுர்த்திதான். நகரெங்கும் சிறிதும், பெரிதுமாக வைக்கப்பட இருக்கிற பிள்ளையார்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் பிரச்னை திசைமாறிவிடும். இதன் காரணமாக போலீஸ் இப்போதிருந்தே முஸ்லீம் அடிப்படை + தீவிரவாதக் குழுக்களுக்கு வலை வீசத் துவங்கி விட்டதாம்!

கடந்த மார்ச் மாதம் சென்னை கொடுங்கையூரில், ஆயுதங்களும், வெடி மருந்துகளும் கைப்பற்றப்பட்டது அல்லவா! 'அல்உமா' என்ற இயக்கத்தின் பெயர் அப்போது அடிபட்டது. சில தீவிரவாத இளைஞர்கள், காஷ்மீருக்குச் சென்று வெடிகுண்டு கலையைக் கற்று வந்தவர்களாம். டிரான்ஸிஸ்டர், டிபன் பாக்ஸ், ஐஸ் பெட்டி, கடிகாரம் போன்றவற்றில் டைம்பாம் 'செட்' செய்வதில் கில்லாடிகள் இருக்கிறார்களாம்.

இவை ஒருபுறமிருக்க, சென்ற வருடம், விநாயகர் சதுர்த்தியின்போது சிலைகளைக் குறிப்பிட்ட வழியில் சென்று கடலில் விடுவதைத் தடுத்த போலீஸார் மீது இந்து முன்னணியைச் சேர்ந்த சில தீவிரவாதத் தொண்டர்களும் கோபத்துடன் இருக்கிறார்களாம். ஆக, பெரிய சவால் ஒன்று சென்னை போலீஸுக்குக் காத்திருக்கிறது.

— நமது புலனாய்வு நிருபர்கள்

வெடித்தது! பரபரப்பு!! பீதி!!!

நம்பர் - 1

வைரமுத்துவா? பழநிபாரதியா?



பிரபலங்களின் மோதல் நமக்குப் பழக்கமானதுதான். ஆனால், பிரபலங்களை முன்னிட்டு, அவர்களின் ரசிகர்கள் மோதிக் கொண்டால் எப்படியிருக்கும் எனப் பார்க்க ஆசைப்பட்ட தன் விளைவு வைரமுத்துவின் ரசிகர் சதீஷ்குமாரும், பழநி பாரதியின் ரசிகை ராணியும் இங்கே மோதுகிறார்கள். சூடான, சுவையான விவாதத்தின் தொகுப்பு இதோ:

சதீஷ்குமார்: இப்போ, எல்லாரும் முணு முணுக்கிற ஹிட் சாங் ஒண்ணு சொல்லுங்க!

ராணி: சந்தேகமென்ன? இன்னிக்கு நம்பர் ஒன் பாடலாசிரியர் பழநிபாரதியோட மாத்தாடு... மாத்தாடு... மல்லிகே...

சதீஷ்: அந்தப் பாட்டா எல்லாரும் பாடற பாட்டு? அதே அருணாச்சலம் படத்துல வர அதாண்டா... இதாண்டா.. பாட்டுதான் அதை விட பாபுலர். வைரமுத்து எழுதினது. இன்னிக்கு எந்த டாப்டென் நிகழ்ச்சியை எடுத்துக்கிட்டாலும் அதாண்டா.... இதாண்டாவுக்குத் தான் முதலிடம்...

ராணி: டாப்டென்ல வந்தா போதுமா? ரசிக்கும்படியான கவித்துவம் ஏதாவது அதுல இருக்கா?

சதீஷ்: 'மாத்தாடு'ல மட்டும் என்ன இருக்கு?

ராணி: ஒரு ஆண், பெண்ணுக்கு, விடுகதை போடற சிசுவேஷன்ல, அதுவும் கிராமத்துப் பெண்ணுக்கு விடுகதை போடுகிறபோது, எப்படி இருக்குமோ அப்படி யதார்த்தமா, அழகா பழநிபாரதி எழுதியிருக்காரு. 'ஒல்லி ஒல்லி கப்பன்தான், ஒத்த காலு கருப்பன்தான் ஒரு காலு இருந்தாலும் ஊனுறது மேடையில' என்று ஒரு விடுகதை போட்டு, ஊதுவத்தின்னு விடை சொன்னா ரசிக்க முடியுதே!

சதீஷ்: வைரமுத்து எவ்வளோ பெரிய கவிஞர்! எத்தனை வருஷமா பாட்டு எழுதிகிட்டிருக்காரு? பழநிபாரதி எழுத ஆரம்பிச்சு எத்தனை வருஷம் இருக்கும்? நீங்களே சொல்லுங்க!

ராணி: ரெண்டு, மூணு வருஷம்....

சதீஷ்: இருபது வருஷமா எழுதிக்கிட்டிருக்கிறவரையும், ரெண்டு வருஷமா எழுதிக்கிட்டிருக்கிறவரை



யும் கம்பேர் பண்ணறது நியாயமா?

ராணி: அவர் எழுத வந்து ரெண்டு வருஷம்தான் ஆகுது. ஆனாலும், அதற்குள்ளேயே யார்ரா இந்த இளைஞர்? அசத்தறாரே இப்படின்னு பேசும்படியா செஞ்சிட்டாரா இல்லையா?

சதீஷ்: ராணி! நான் சொல்லறேன்னு தப்பா எடுத்துக்கக் கூடாது. ஒரு 'அழகிய லைலா' பாட்டு இல்லைன்னா, இவருக்கு இத்தனை புகழ் கிடைத்திருக்குமா?

ராணி: கிடைச்சிருக்காதுதான். ஆனா அந்த ஒரே பாட்டுல, மொத்த சினிமா இண்டஸ்டிரியையும் ஒரு கலக்கு கலக்கிட்டாரா இல்லையா?

சதீஷ்: அந்தப் பாட்டு ஹிட்டானதற்கு உண்மையான காரணம் என்ன? தர்மசங்கடப்

சதீஷ்: பழநிபாரதி, வெறும் டூயட் பாடல்கள்தானே எழுதியிருக்கிறார்? வெரைட்டி இல்லையே!

ராணி: வெரைட்டி இல்லை என்று சொல்ல முடியாது. புதிய மன்னர்கள் என்ற படத்தில் வரும் எடுடா அந்த சூரிய மேளம் பாட்டில், பூமியை தோளில் சுமந்து செல்லலாம்; பூவுக்குள் புயலைப் பூட்டி வைக்கலாம், வானத்தில் பேரை எழுதி வைக்கலாம்; சூரியன் தொட்டு முத்தம் கேட்கலாம்'ன்னு வருகிறது. தன்னம்பிக்கை தரும் வரிகளில்லையா?

சதீஷ்: இது என்ன பிரமாதம்! மே மாதம் படத்துல சீட்டுக்கட்டு ஆடுறா மாதிரி ஒரு பாட்டு. அதுலகூட 'இது போல ஆட்டம் ஆடி இந்தியாவின் கடன் தீர்ப்பேன்' அப்படின்னு,

பழநிபாரதியின் புகழுக்கு ரம்பாதான் காரணம்!

வைரமுத்து ரசிகர் ஆவேச மோதல்!!

படாதிங்க! ரம்பாவுடைய ஸ்கர்ட் படபடக்கும் நடனம்தான் காரணம். அடுத்த காரணம் அந்தப் பாட்டினுடைய டியூன்! அதைத் தவிர அந்தப் பாட்டுல வேற என்ன இருக்கு? பழநி பாரதி, உண்மையிலேயே, தான் இன்று புகழ் பெற்றிருப்பதற்கு நன்றி சொல்லணும்னா, அந்தப் பாட்டில் டான்ஸ் ஆடிய ரம்பாவுக்குத்தான் நன்றி சொல்லணும்.

ராணி: பாட்டை ரசித்தது, ரம்பாவுக்காகன்னு நீங்க சொன்னா, அது உங்க ரசனைக் குறைவைத்தான் காட்டுகிறது. அதில் அழகான பெண்ணைப் பார்த்து, 'அடடா பூவின் மாநாடா! அழகுக்கு இவள்தான் தாய் நாடா'ன்னு வியக்கற வரியில கவிஞரின் கற்பனைவளம் தெரியலை? பூக்கள் அவளைப் பார்த்து ஆட்டோகிராப் கேட்டு கைகளை நீட்டியதோன்னு, எந்த சினிமா கவிஞராவது கற்பனை செய்திருக்கிறாரா?

சதீஷ்: வைரமுத்துவோட கற்பனை பற்றி உங்களுக்குச் சந்தேகமா? கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால், காதல் என்று அர்த்தம்; கடலை வானம் கொள்ளையடித்தால் மேகம் என்று அர்த்தம். அடாடா! என்ன அற்புதமான கற்பனை... ரோஜாவின் சின்னச் சின்ன ஆசையில் கவிஞரின் கற்பனை சிறகு விரித்துப் பறப்பதைப் பார்க்கவில்லையா?

ராணி: அந்தப் பாட்டில்கூட அழகுப் பெண்ணின் தாயாரென்றால் அத்தை என்று அர்த்தம் என்பது எத்தனை விஷ(ம)த்தனமான கற்பனை?

இந்தியாவுடைய அந்நியக் கடன் சுமை போன்ற பொருளாதார பிரச்னையைக் கூட தொட்டிருக்கிறார் வைரமுத்து. பாருங்கள்! ஹி ஈஸ் கிரேட்!

ராணி: அதே படத்துல, உன்ன கூட்டிகினு போறேன் சினிமாவுக்கு, இல்ல கொத்திகினு போவான் பொறம்போக்[illegible]னும் வரும்! தென் தமிழ்நாட்டுல [illegible] 'பொறம்



போக்கு'ன்னு சொல்ல முடியுமா? எப்படித் தான் பாட்டு எழுதறதுன்னு கணக்கில்லையா?

சதீஷ்: இன்னிக்கு, தமிழ் சினிமாவுல வாலிக்கு என்று ஒரு இடம் உள்ளது; வைர முத்துவுக்கு என்று ஒரு இடம் உள்ளது. ஆனால் பழநிபாரதிக்கு?

ராணி: வாலி சார் எத்தனை சீனியர்? பழநி பாரதி பிறக்கும் முன்பிருந்தே பாட்டு எழுதுகிறார் என்பதுகூட சாத்தியமாய் இருக்கும். கண்ணதாசன் மறைவுக்குப் பின், வாலி, வைரமுத்து தவிர எவ்வளவோ பாடலாசிரியர்கள் வந்து போய் விட்டார்கள். அவர்களால், பழநிபாரதி போல, சினிமா உலகின் கவனத்தை ஈர்க்க முடிந்ததா? இல்லையே!

சதீஷ்: பழநிபாரதியின் ஸ்டைல் என்று எதைச் சொல்ல முடியும்? நிறைய இங்கிலீஷ் வார்த்தைகளைக் கலந்து போட்டு எழுதுவதையா?

ராணி: இங்கிலீஷ் வார்த்தை என்ன எட்டிக் காயா? ஒரு சினிமாவுல பேசப்படும் வசனங்களில் எத்தனை இங்கிலீஷ் வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன? ஆனால் பாட்டில் பயன்படுத்தக் கூடாது. அப்படித்தானே? இது என் ஒரு பதில். நான் பதிலுக்கு இன்னொரு கேள்வி கேட்கட்டுமா? ஊர்வசி... ஊர்வசி பாட்டுல, டேக் இட் ஈசி, பாலிஸி, ஃபார்மஸி, ஃபான்டஸி என்று அடுக்கடுக்காய் வருவது ஆங்கிலம் இல்லாமல் சுத்தமான அக்மார்க் தமிழ்ச் சொற்களா?

சதீஷ்: ஒரே வார்த்தையை இரண்டிரண்டு தடவை பயன்படுத்தப்படுகிறதுகூட பழநி பாரதியின் தனி ஸ்டைலா?

ராணி: அதுவும் கண்ணதாசன் செய்து விட்ட முயற்சிதான். மக்களிடம் வரவேற்பு பெற்ற முயற்சி. அதை பழநிபாரதி செய்தால் மட்டும் தப்பா?

சதீஷ்: வைரமுத்து, வெறும் பாடலாசிரியர் மட்டுமில்லை; மிகச் சிறந்த இலக்கியவாதி. அவர் எழுதிய கவிதைத் தொகுப்புகளாகட்டும், தண்ணீர் தேசம் போன்ற படைப்புகளாகட்டும் தரமான இலக்கியப் படைப்புகளாக மக்களால், சக இலக்கியவாதிகளால் அங்கீகரிக்கப்பட்டவை. வைரமுத்துவின் திரை முகத்தைவிட, இலக்கிய முகம் இன்னும் ஆழமானது; விசாலமானது.

ராணி: ஏன்! பழநிபாரதிகூடத்தான் பத்திரிகைப் பின்னணி கொண்டவர். கவி அரங்குகளில் பங்கேற்றவர்; கவிதை விமர்சனம் செய்தவர்; அவரது கவிதைத் தொகுப்புகூட வெளி வந்திருக்கிறதே!

சதீஷ்: ஒரே ஒரு புத்தகம்தானே?

ராணி: வைரமுத்து போன்ற கல்விப் பின்னணி, குடும்பப் பின்னணியெல்லாம் பழநி பாரதிக்குக் கிடையாது. சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். அண்மையில் ஒரு பேட்டியில்கூட சினிமா பாடல் எழுத வந்திருக்காவிட்டால், ஏதாவது பத்திரிகை ஆபீஸிலோ, அச்சகத்திலோ பணி புரிந்து கொண்டிருப்பேன். சினிமாப் பாடலாசிரியரானது எதேச்சையான நிகழ்வு. இதுதான் வாழ்க்கைக்கு ஜீவாதாரம் என்று ஆன பின், இதை முழுமையான ஈடுபாட்டுடன் செய்கிறேன்' என்று கூறியுள்ளார் பழநிபாரதி. அவருக்கு அனுபவம் குறைவு, வசதி குறைவு, இத்தனை குறைபாடுகள் இருந்தபோதும், கற்பனையில் அவர் பின் தங்கி விடவில்லையே!

சதீஷ்: பழநிபாரதி நன்றாய் எழுதும் இளம் கவிஞர் என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அவர் இன்னும் சிறப்பாக எழுத என்னுடைய வாழ்த்துக்கள். ஆனால் அவர், வளர ஆரம்பித்திருக்கும்போதே பெரிய கவிஞருடனெல்லாம் ஒப்பிட வேண்டாம்!

ராணி: பழநிபாரதியை நல்ல கவிஞராய் ஏற்றுக் கொண்டீர்களே! அதுவே என் வாதத்துக்கு ஒரு விதத்தில் வெற்றி என்றே கருதுகிறேன். (சிரிப்பு)

தொகுப்பு: **கௌதம்**

படம் : **ஸ்ரீஹரி**



''தலைவர் பிறந்த நாளைக்கு ஐம்பது ஜோடிக்குத் திருமணம் செய்யறதா இருந்து. நாற்பத்தெட்டு மாப்பிள்ளைங்கதானே கிடைச்சாங்க. மீதி ரெண்டு பெண்கள் கதி என்ன ஆச்சு?''

''தலைவரே அந்த இரண்டு பெண்களையும் கல்யாணம் பண்ணிகிட்டார்!''

— 'மோகை' எஸ். சரவணன்

நாடகத்துக்கு அனுமதி இல்லை!

வெள்ளைக்காரன் திட்டவட்ட மறுப்பு!!

பதினாலாவது நூற்றாண்டில் மொராக் கோவிலிருந்து இபின்பதூதாங்கற ஒருத்தர் உலகம் சுத்திப் பாக்க வந்தார். சைனாவுக்குப் போற வழியில தென்னிந்தியாவுக்கும் வந்தார். அப்போ அலாவுதீன் கில்ஜிதான் டில்லியில சுல்தான். கோவாவில இருந்து கிட்டத்தட்ட கன்னியாகுமரி வரைக்கும் சேரப் பேரரசு பரவியிருந்த காலம் அது. அந்தப் பகுதியில இருந்த - பின்னால் தமிழ்நாட்டோட சேர்ந் திருந்த மலபார் ஜில்லாவில பொறந்தவன் நான். கண்ணனூர் பக்கத்தில பெருவமூர்.

எனக்கு பகாசூரன் அப்படீன்னா பயம். பகாசூரன் எங்கே இங்கே திடீர்னு வந்தான்னு நீங்க நெனக்கலாம். பகாசூரன் இருந்த ஏரியாவிலதான் நாங்க இருந்தோம். பாண்டவர் கள் அஞ்ஞாத வாசம் இருந்தப்போ எங்க ஊருக்கு வந்தாங்களாம். ஒரு வீட்டில தங்கினாங்க. அந்த வீட்ல எல்லாரும் சோகமா இருந்ததைப் பாத் துட்டு என்ன விஷயம்னு குந்தி தேவி கேட்டிருக்காங்க. 'ஒண்ணுமில்ல.. நாளைக்கு பகாசூரனுக்கு சாப்பாடு ரெடி பண்றது எங்க டர்ன்.' அப்படீன்னு வீட்டுக்காரங்க சொல்லியிருக்காங்க. 'அதில என்ன சிரமம்?'ன்னு குந்தி கேட்க, 'சாப்பாடு எல்லாம் ரெடி பண்ணிடலாம். சிரமம் இல்லை. தினமும் ஊறுகாய் மாதிரி தொட்டுக்க பகாசூரனுக்கு ஒரு ஆள் அனுப்பணும். அந்த ஆளைத்தான் அவன் சாப்பிடுவான். எனக்கிருக் கிறதோ ஒரே புள்ளை. என்ன பண்றதுன்னு கலக்கமா இருக்குன்னு அவங்க சொன்னாங்க.

'நீங்க கவலைப் படாதீங்க. எனக்கு அஞ்சு பசங்க இருக் காங்க. நான் நாளைக்கு ஒருத்தனை அனுப்பி வக்கிறேன்'னு குந்தி சொன்னதா ஐதீகம்.

மறுநாள் பீமன் போனதும், பகாசூரனை குளோஸ் பண்ணதும் நாமெல்லாம் பாரதத்தில படிச்சிருக் கோம். நான் ஏன் இதையெல்லாம் இங்கே சொல்றேன்னா, பகாசூரன் இருந்ததுக்கு அடையாளம் போல எங்க ஊர்ல அக்ரஹாரம், சில பழைய கட்டடங்கள், குளம் இதெல் லாம் இருக்கறதைக் கண்டுபிடிச்சிருக் காங்க.

சின்ன வயசில நான் ஏதாவது அழுது அடம்பிடிச்சா, "டேய் வாயை மூடல்லே, பகாசூரன்கிட்ட உன்னைப் புடிச்சிக் குடுத்திருவேன்'னு எங்க அம்மா பயமுறுத்தியது எனக்கு ஞாப கம் இருக்கு.

எங்க அப்பா சர்வே டிபார்ட் மென்ட்ல இருந்தார். ஊட்டியில நான் மொதமொதல்ல படிச்ச பள்ளிக்கூடத்தின் பேர் எனக்கு இப்போ சரியா நினைவில்லை. ஆனா அந்த ஸ்கூலுக்கு ஒரு சர்நேம் உண்டு. 'சந்தைக் கடை பொறுக்கி ஸ்கூல்'னு பேரு. மழை பெய்யும் போது பக்கத்து



2 எம். என். நம்பியார்

நான் வில்லன் அல்ல!

சந்தைக் கடையில இருந்து எல்லாரும் ஸ்கூலுக்கு உள்ளே வந்துடுவாங்க. நாங்க ஒதுங்கிப்பம். அதனால அந்தப் பேரு.

பள்ளிக்கூடம்னா எப்படி இருக்கும்னு நெனக்கிறீங்க? ஒரு பெஞ்ச் போட்டிருக்கும். அதில பசங்க அந்தப் பக்கம் உட்காந்தா அஞ்சாம் கிளாஸ். இந்தப் பக்கமா திரும்பி உக்காந்தா நாலாம் கிளாஸ். அங்கே நான் படிச்சது ஒரு ட்யூஷன் மாதிரி. அவ்வளவு தான். பின்னால நான் முனிசிபல் பள்ளிக் கூடத்தில் சேர்ந்தேன்.

அங்க நான் ஃபோர்த் ஃபாரம் – அதாவது ஒன்பதாவது கிளாஸ் படிச்சிக்கிட்டு இருந்த போதுதான் நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியில சேர்ந்த கதையை போன வாரம் சொல்லியிருந்தேன். ஒன்பதாம் கிளாஸ்ல ரெண்டு மூணு மாசம்தான் இருந்தேன். புஸ்தகங்க கூட முழுசா வாங்கி முடியல்ல. அதுக்குள்ள டிராமா கம்பெனியில சேர்ந்துட்டேன்.

சேலத்துக்கு வந்தோம். அங்க நாடகம் நடத்த முடியல்லே. ஏன்னா அங்க கலெக்டர் வந்து, 'உங்க டிராமாவை நான் மொதல்ல படிச்சுப் பாக்கணும். அப்புறமாதான் பர்மிஷன்'னு சொல்லி ஸ்கிரிப்ட்டை வாங்கிப் போனவன்தான். பதிலே சொல்லலே. ஏன்னா அந்த நாடகத்தில தேசபக்தி, தேச விடுதலை உணர்வு இதெல்லாம் சொல்லியிருப்போம். அவன் இங்கிலீஷ்காரன். எப்படி அனுமதி கொடுப்பான்? நம்ம ஆளுங்க அதிகபட்சம் போறது தாசில்தார் வரைக்கும்தான். அப்புறம் அவனுங்கதான். சேலத்தில பர்மிஷன் கிடைக்கலேன்னு, ராசிபுரம் போய் பத்து நாடகம் போட்டுட்டு மறுபடியும் சேலம் வந்தோம்.

ஒரு விஷயம் இங்கே சொல்லணும். அப்ப ராஜமாணிக்கம் கம்பெனியில, படிச்சவன் நான்தான். ஃபோர்த் ஃபார்மில கால வச்சவன்னா சும்மாவா? படிச்சவங்க அப்பல்லாம் டிராமாவுக்கு வந்து சேர மாட்டாங்க. ஒரு ப்யூன் தன் பையன் ப்யூனா வரணும்னு ஆசைப்படுவானே தவிர டிராமா கம்பெனியில சேரட்டும்னு விடமாட்டான். ஏன்னா டிராமா கம்பெனிங்களுக்கு அப்ப நல்ல பேர் கிடையாது. டிராமாக்காரன் அப்படீன்னா ஒரு டைப்பான ஆசாமின்னு நெனச்சிருந்த காலம்.

'நச்சுப் பொய்கை'ன்னு ஒரு நாடகம் போட்டோம். அதில எனக்கு ஜட்ஜ் வேஷம். இங்கிலீஷ் டயலாக்கெல்லாம் வரும். பாடமெல்லாம் படிச்சேன். ஆனா எனக்கு எப்பவுமே பயம், வெட்கம், சங்கோஜம் ரொம்ப அதிகம். இன்னிக்கும் நான் அப்படியேதான் இருக்கேன். அப்ப என் பயத்தை பாத்துட்டு 'இவன் சரிப்பட்டு வரமாட்டான்'னு என் வேஷத்தை இன்னொருத்தருக்குக் கொடுத்துட்டார், எனக்குப் பாடம் கத்துக் கொடுத்த ராமச்சந்திர ஐயர்.

சேலம் முடிஞ்சி தர்மபுரி, மைசூர், ஹாஸன், டிப்டூர்னு ஒரு ஊர்- இப்படியெல்லாம் சுத்திட்டு டிப்டூர்ல இருந்து பம்பாய்க்குப் போனோம். அங்கதான் எங்க கம்பெனியின் பிரபல நாடகமான 'பக்த ராமதாஸ்' டிராமாவை சினிமாவா எடுத்தாங்க.

அப்ப அங்கே ரஞ்சித் ஸ்டுடியோன்னு இருந்தது. அது சோஷியல் படங்க எடுக்க. இன்னொன்னு புனாவில இருந்த பிரபாத் ஸ்டுடியோ. அதிலதான் புராணப் படங்க ஷூட் பண்ணுவாங்க.

நான் நடிச்ச முதல் படத்தை 1935-ல் எங்க கம்பெனி திருப்பூர்ல இருந்தப்பதான் நான் தியேட்டர்ல போய்ப் பார்த்தேன். அந்த பக்த ராமதாஸ் படத்தில எனக்கு மாதண்ணா அப்படீன்னு ஒரு கேரக்டர்.

அப்ப நான் அந்த வேஷத்துக்குத் தகுதியானவன் இல்லைங்கறது எனக்கே தெரியும். ஏன்னா நான் கம்பெனியில சேர்ந்து அப்ப ஆறு மாசம்தான் ஆகியிருந்தது. போதாத குறைக்கு என் கூடவே இருக்கிற வெட்கம், பயம், சங்கோஜம். ஆனா எனக்கு அந்தப் படத்தில வேஷம் கிடைச்சது ஒரு குருட்டு



''எதுக்கு சட்டை போடாம வெயில்ல படுத்திருக்கீங்க?''

''டாக்டர் வயித்தை காயப்போடச் சொல்லியிருக்காரு.''

– எஸ். காமராஜ்




''தலைவர் கில்லாடிப்பா...''

''என்ன...?''

''ஒரு கோடிக்கு மேல ஊழல் செஞ்சு குடுக்குற மந்திரிகளுக்கு மாருதிவேன் பரிசு தரப்போறதா அறிவிச்சிருக்கார்...!''

– ஜி. செல்லத்துரை



''உங்க கடையிலே மட்டும் இட்டிலி எப்பவும் பஞ்சா இருக்கே எப்படிங்க?''

''வேற ஒண்ணும் இல்லீங்க; நாங்க மாவோட கொஞ்சம் பருத்திக் கொட்டையையும் சேர்த்து அரைப்போம்!''

– ஆர்.ஆர்.ரெட்டி

அதிர்ஷ்டம். அது எப்படின்னா, அந்த ரோலை பண்றதா இருந்தவர் சுப்பிரமணியம்னு ஒருத்தர். அவருக்குப் பர்சனாலிட்டி கம்மி. நான் அழகா இருக்கறதைப் பார்த்த அந்தப் படத்தோட டைரக்டர் முருகதாஸ் 'இவனைப் போடலாமே'ன்னு சொல்ல, எனக்கு அடிச்சுது அதிர்ஷ்டம்.

பொதுவா இப்படி ஒரு சான்ஸ் கிடைச்சா சந்தோஷப்படறதுதானே நியாயம்? எனக்கு சந்தோஷம் வரல்லே. ரெண்டு நாள் வவுத்தால போச்சு. வேறென்ன காரணம்? பயம்தான்.

அந்தக் காலத்தில் கம்பெனியில சம்பளம் போடறது சர்வீஸ் பார்த்து இல்லை. வீட்டில இருந்து ஆளுங்க வந்து உபத்திரவம் பண்ணணும்... 'பணம் அனுப்பு... பணம் அனுப்பு'ன்னு. அப்பதான் சம்பளம் போடுவாங்க. எங்க வீட்ல இருந்து யாரும் வர்றதில்ல. அதனால எனக்கு சம்பளம் போடல்ல. இருந்தாலும் படத்தில ஆக்ட் பண்ணினதுக்கு நாற்பது ரூபா கொடுத்தாங்க. அதாவது கம்பெனியில சம்பளம்னு இல்லாதவங்களுக்கு படத்துக்காக நாப்பது ரூபா. வாலிப வயசு. நெறய ஆசைகள். இருந்த இடமோ பம்பாய். சொல்லணுமா? ஒரு பத்து ரூபாயை அநியாயமா செலவு பண்ணிட்டேன். தப்பு தண்டா எதுவும் பண்ணலை. வீட்டுக்கு பத்து ரூபா எம்.ஓ. பண்ணிட்டேன். இதை நான் ஏன் அநியாய செலவுன்னு சொல்றேன்னா, பணம் போய்ச் சேர்ந்ததும் 'ஓஹோ... பையன் சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டான்'னு நினைச்சி பணம் அனுப்பு... பணம் அனுப்பு'ன்னு அங்கேயிருந்து லெட்டர் வர ஆரம்பிச்சாச்சு.

என் மொத சம்பளத்தில பாதியை அப்படியே நான் சங்கீதத்துக்காக தியாகம் பண்ணினேன். இசைக்காக இப்படி தியாகம் பண்ணவங்க வேறு யாராவது இருப்பாங்களான்னு சந்தேகம்தான். ரொம்ப நாளா ஆசை. ஒரு ஹார்மோனியப் பெட்டியை வாங்கிட்டேன். ஆயிரமா? ஐநூறா? அதெல்லாம் இல்ல. இருபது ரூபா. என் சிநேகிதன் கிட்ட இருந்து செகண்ட் ஹாண்டில் வாங்கினேன்.

ஆக, ஹார்மோனியம் இருபது ரூபா, 'அநியாயச் செலவு' பத்து ரூபா, மீதி பத்தில அந்த ரூபாய்க்கு சோப்பு சீப்பு கண்ணாடி வாங்கியாச்சு. கையில இருக்கிறது அஞ்சே ரூபாய். இதுதான் என் மொதல் சம்பளப் பட்டுவாடா கணக்கு.

(தொடரும்)

படித்ததில்
பிடித்தது



அண்ணனுக்கு
'அருவா'வெட்டு!
தம்பி சமரச முயற்சி!!

வகுப்புக் கலவரங்கள், வெட்டுக் குத்துக்கள் என்று தென் மாவட்டங்கள் அலைக்கழிப்புக்கு உள்ளாகியுள்ள நேரத்தில் இந்த நாவலைப் படிக்க நேர்ந்தது ஓர் இலக்கியச் சோகம்தான். அதுவும் இரண்டு பகுதியாக அமைந்துள்ள இந்த நாவலின் முதல் பகுதியைப் படித்து முடிக்கிற வரை, படிக்கும் நம்மையே வெட்டிப் போட யாராவது 'அரிவாளை' ஓங்குகிறார்களோ என்கிற அச்சம் கூடுகட்டுகிறது!

ஒரு பக்கம் அச்சம்... இன்னொரு பக்கம் எழுதத் தகாதவை என்று நாகரிகம் ஒதுக்கியுள்ள சொற்கள் சிலவற்றை வட்டார வழக்கு என்கிற 'பொது மன்னிப்பை' எதிர்பார்த்தோ என்னவோ ஆங்காங்கே தெளித்திருக்கும் எழுத்து நடை!

'பொதுமன்னிப்பு' எதிர்பார்க்கும் நாவல்!

இந்த இரண்டையும் வலிந்து ஒதுக்கிவிட்டு நாவலைப் படித்தே ஆகவேண்டும் என்கிற தூண்டுதலுக்கு ஒரு காரணம் உண்டு. சென்னையின் 'இலக்கியச் சிந்தனை அமைப்பின் 1996ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல் என்கிற அங்கீகாரத்தை இது பெற்றிருக்கிறது.

நாவலின் இரண்டாம் பாகத்தைப் படிக்கத் தொடங்கியபிறகுதான் இதன் 'இலக்கிய கனம்' புரிகிறது.

நூலாசிரியர் ஒருவர் இல்லை. 'சுப்பு லட்சுமி- நடராசன்' இருவர் இணைந்து 'சுப்ரா'வாக எழுதியிருக்கிறார்கள். தத்துவம், சமூகவியல், அறிவியல் சிந்தனைகள் எல்லாவற்றோடும் கூட இயற்கை-அழகியலையும் சேர்த்துக் கைகோத்துக் கொண்டு எழுதியிருக்கும் பகுதிகளைப் படிக்கிறபோது சொல்லில் வடிக்க முடியாத பேரானந்தம் பிறக்கிறது.

'....அந்தச் சின்னக் குருத்தை, மலர்ந்து மலர்ந்து அலை பாயும் அந்தக் கரிய விழி வெளிச்சத்தை, அழுகையில் துடித்துச் சிவக்கும் அந்தச் சின்ன வாயை, இந்த உலகையே ஈடாக்கினால் ஏற்காத அந்தச் சின்னக் கொட்டாவியை...' என்று ஒரு குழந்தையைப் பற்றிச் சொல்கிறபோது வெட்டுக்குத்துக்களை விலாவாரியாக எழுதிய கரங்களா இதையும் எழுதின என்கிற வியப்பேற்படுகிறது.

புகையிலைச் சாகுபடியைப் பற்றிய சிந்தனைகள், இலுப்பைப் பூச் சர்க்கரையின் மகத்துவம் பற்றிய வருணனைகள் என்று



''மாஜி அமைச்சர் ஏன் விக்கி விக்கி அழறாரு?''

''ஊழல் செய்ய ஒரு சூப்பர் ஐடியா தோன்றியிருக்காம். ஆனால், இந்த நேரம் பார்த்து பதவியில இல்லையேன்னு அழறாரு!''

— பாஸு



''அந்த டாக்டருக்கு ஏன் அசோக சக்கரவர்த்தின்னு பெயர் வெச்சாங்க?''

''தான் செய்த ஆபரேஷன்களால பல பேஷண்டுங்க செத்துப் போயிட்டதைப் பார்த்து இனிமேல் ஆபரேஷனே செய்யறதில்லைன்னு முடிவு எடுத்துட்டார்!''



''ஆபரேஷனுக்கு பேஷண்டே வரதில்லைன்னு டாக்டர் அழுதுக்கிட்டிருந்தார். ஒரு பேஷண்ட் வந்தார்.''

''அப்புறம்?''

''இப்ப ஒரு குடும்பம் அழுதுக்கிட்டிருக்கு.''

— வெ. ராஜாராமன்

புதிய செய்திகள் நிறைய வருகின்றன.

காலம் என்றால் என்ன, நான் என்பது என்ன என்கிற தத்துவங்கள் எல்லாம் படு சுவாரஸ்யமாக அலசப்படுகின்றன.

"...நிகழ்காலமா இருக்கற ஒவ்வொரு விநாடியும் அடுத்த விநாடில இறந்த காலமாகுது.. இதுல எது நிகழ்? எது இறந்தது? மூச்சை உள்ளே இழுக்கறப்ப நிகழ்காலமா உள்ள போற அந்தக் காத்து வெளில வர்றப்ப இறந்தகாலமாயிருது...'

மிகப் பெரிய விஷயங்களைக் கதைப் போக்கில் படிக்கிற போது கிடைக்கிற சந்தோஷம்தான் இந்த ஆசிரியர்களின் வெற்றி.

வாழ்ந்து என்ன கிழிக்கப் போகிறோம் என்கிற விரக்தி மேலிடுகிற இடத்தில்கூட 'தானும் வாழ்ந்து தழைக்க வைப்பதுதான் வாழ்வு' என்று வெளிப்படுகிற சிந்தனை இந்த நாவலின் மைய இழையாக வைக்கப்பட்டிருக்கிறது.


தலித் இயக்கங்கள், இடது சாரிச் சிந்தனைகள், தீவிரவாதம் உட்படப் பல விஷயங்களைப் பக்குவமாகக் கையாண்டிருக்கிறார்கள். சித்தர்களின் தத்துவப் புலம்பலைக் கூட விடவில்லை. சித்தனை அழைத்து சம்வாதம் பண்ணுகிற பக்கங்களில் வாழ்க்கையின் பொருளை மிக நன்றாக எடுத்துக் கூறுகிறான் கதை நாயகன் குரிசில்.

நாவலின் நிறைவுப் பகுதியில் குரிசில் என்கிற யதார்த்த இளைஞனுடைய அண்ணனின் படுகொலை. படிக்கும்போது நமக்கு ஏனோ ஜனவரி 30ல் சுடப்பட்ட பாபுஜியின் நினைவு வருகிறது. அங்கே இரண்டு மதங்களை ஒன்றுபடுத்துகிற முயற்சியில் துப்பாக்கி, இங்கே இரண்டு சாதிகளைச் சேர்த்துவைக்கிற ஆசையில் 'அறுவா'வெட்டு!

'சராசரி ரசனையோடு படிக்கிறவர்களுக்கு இந்த நாவல் அலுப்பூட்டலாம். கிளுகிளுப்பை எதிர்பார்க்கிறவர்கள் இதைத் தொடவே தேவையில்லை. மனிதனையும், மனிதாபிமானத்தையும் நேசிக்கிறவர்களுக்குச் 'சில பாதைகள் சில பயணங்கள்' சிந்தனையை விரிவுபடுத்துகிற ஒரு நல்ல இலக்கியம்தான்!

— சுப்ர. பாலன்

சிலபாதைகள், சில பயணங்கள்/சுப்ரா/ பனைபதிப்பகம், பி.227, காமராசர் சாலை, திருநகர், மதுரை – 625006/ரூ.50/-





1997 ஆகஸ்ட் 24
ஈசுவர ஆவணி 8
மலர் : 56
இதழ் : 4

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



தேர்தல் வரட்டும்; தேசம் பிழைக்கட்டும்!

பெண்களுக்கு நாடாளுமன்றத்தில் 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா அறிமுகமாகி, ஆதரவு பெறாமலே போனது. அதைத் தொடர்ந்து குஜ்ரால் மிக ரோசமாக புதிய பெண் அமைச்சர்களைத் தமது அமைச்சரவையில் நியமித்து, தம் தோல்விக்கு ஈடுசெய்ய முயன்றார். இந்தக் கூட்டத் தொடரில் மீண்டும் அறிமுகமான அதே மசோதாவை சட்டமாக்குவதற்கு ஐக்கிய முன்னணி ஆட்சியால் இயலவில்லை! போதுமான அளவு ஆதரவை கூட்டணிக் கட்சிகளிடமே பெற முடியவில்லை!

இன்ஷூரன்ஸ் நிறுவனங்களைத் தனியார்மயமாக்குதல் தொடர்பான மசோதாவும் தாக்கலாகாமலே மூட்டைகட்டி வைக்கப்பட்டுள்ளது- நாடாளுமன்றத்தில் போதுமான ஆதரவு கிடைக்காது என்பது உணரப்பட்டதால்.


ஜனாதிபதி தேர்தல் விதிமுறைகளைத் திருத்த வேக வேகமாகக் கொண்டுவரப்பட்ட அவசரச் சட்டத்தையும் நாடாளுமன்றம் அங்கீகரிக்கவில்லை.

பெட்ரோல் விலையை உயர்த்துவது குறித்து எந்தவித முடிவையும் எடுக்க முடியாமல் அரசு திணறுகிறது. இதிலும் கூட்டணிக் கட்சிகளிடையே ஏகப்பட்ட அபிப்பிராய பேதங்கள்.

பிரதமர் குஜ்ரால் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தை எழுத்து பிசகாமல் கடைப்பிடிக்க முயன்று இவ்வாறு மீண்டும் மீண்டும் மூக்குடைபடுவதால் யாருக்கும் எந்த லாபமும் இல்லை.

தங்கள் உழைப்பும் முயற்சியும் வீணாவதைக் கண்டு நிதியமைச்சகம் போன்ற முக்கிய துறைகளின் அதிகாரிகள் உற்சாகம் இழந்திருக்கிறார்கள்.

அரசாங்கம் ஸ்திரமின்றி அல்லாடுவதால் பங்கு மார்க்கெட் அழுது வடிகிறது. தொழில் துறையில் முதலீடும் வளர்ச்சியும் மகிழும்படி இல்லை; அயல்நாட்டவரும் இங்கு முதலீடு செய்யத் தயங்குகிறார்கள்.



பட்ஜெட்டில் வரி பளுவைக் கணிசமாகக் குறைத்ததன் நோக்கம் நிறைவேறவில்லை. அரசுக்குக் கடந்த காலாண்டில் கிடைக்க வேண்டிய வரிப்பண வருவாய் அதிகரிக்கவில்லை.

இந்த நிலைமையையெல்லாம் கூர்ந்து கவனித்து வரும் ஐ எம் எஃப் (**International Monetary Fund**) அமைப்பு இந்திய அரசை எச்சரித்து, வருவாய்க்கான மாற்று வழிகளை ஆராயச் சொல்லியிருக்கிறது!

ஏற்கெனவே திட்டமிட்ட வழிகளையும் முடிவுகளையும் செயல்படுத்தும் வலிமையே ஐக்கிய முன்னணி அரசுக்கு இல்லை... இந்த நிலையில் புதிய மாற்று வழிகளை எங்கேயிருந்து கண்டுபிடிப்பது? எந்த யோசனைக்கும் முட்டுக்கட்டை போட கூட்டணிக்குள்ளேயே குரல்கள் தயாராக இருக்கின்றன.

கூட்டணியின் முக்கியக் கட்சியான ஜனதா தளமே உட்கட்சி சச்சரவுகளால் உளுத்துக் கிடக்கிறது. தமது கட்சிக் கூட்டத்தை விட்டே வெளிநடப்பு செய்யும் பரிதாபமான நிலைக்குப் பிரதமர் தள்ளப்பட்டிருக்கிறார்.

இவ்வளவு பலவீனமான தலைவரால் பதிமூன்று கட்சிக் கூட்டணியை எவ்வாறு தொடர்ந்து வழிநடத்திச் செல்ல முடியும்...?


சமீபத்தில் வந்த பீஹார் உயர்நீதிமன்றத் தீர்ப்பு வேறு, மத்திய அரசுக்கு பலத்த அடி! அம்மாநிலத்தில் 356ஐப் பயன்படுத்த போதுமான காரணமிருந்தும் அவ்வாறு செய்யாததற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது!

போதாக்குறைக்கு, 'இன்னும் ஒன்றரை ஆண்டுக் காலத்தில் நாங்கள் தேர்தலுக்குத் தயாராகி விடுவோம்' என்று கேசரி பயம் காட்டுகிறார்.

ஐக்கிய முன்னணி என்கிற கண்ணாடிப் பாத்திரம் இன்று காங்கிரஸ் கையில்தான் இருக்கிறது. மிக அலட்சியமாக அதை ஏந்திக் கொண்டிருக்கும் காங்கிரஸ் தலைமை, என்றைக்கு வேண்டுமானாலும் அதைப் போட்டுடைக்கலாம்.

நாட்டுப் பிரச்னைகள் ஒரு பக்கம், கூட்டணிக் கட்சிகளின் ஆதரவின்மை, காங்கிரஸின் மிரட்டல், ஜனதா தளத்தின் உட்கட்சி சிக்கல்கள்... இப்படி நாலா பக்கமும் பிரச்னை சூழ, ஐக்கிய முன்னணி ஆட்சி தடுமாறிக் கொண்டிருக்கிறது.

அவ்வப்போது சமரசம் செய்து கொண்டும் தற்காலிகமாய் விரிசல்களை ஒட்டுப் போட்டு ஆட்சியைத் தொடரச் செய்வதிலும் அர்த்தமேயில்லை. நாட்டுக்கு நன்மையோ கட்சிக்கு சாதன்னை



யுணர்வோ கிடைக்கப் போவதில்லை.

மேலும் நெருக்கடிகள் உருவாகி, மீண்டும் மீண்டும் ஐ.மு.வின் கையாலாகாத்தனம் நிரூபிக்கப்படக் காத்திராமல், இப்போதே மக்களை நாடிச் சென்று தீர்ப்பு கேட்பது நல்ல முடிவாக இருக்கும்.

கடந்த தேர்தலில் எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காததால்தான் மத்தியில் கூட்டணி ஆட்சி அமைக்க வேண்டிய கட்டாயம் விளைந்ததேயொழிய, கூட்டணி அரசு என்பது மக்களின் விருப்பத்தால் விளைந்தது என்று கூறிவிட முடியாது.

இந்த ஓராண்டு கால அனுபவம், கூட்டணி ஆட்சியின் பலவீனங்களையும் சிக்கல்களையும் மக்களுக்கு நன்கு உணர்த்தியிருக்கும். மீண்டும் தேர்தல் வரின், பலவீனமான கூட்டணியை மத்தியில் ஆட்சிக்கு வர அனுமதிக்காமல், ஏதேனுமொரு கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கச் செய்யும் விதமாகவே மக்கள் வாக்களிப்பார்கள்.

எந்தக் கட்சி வென்றாலும் ஆட்சியில் குறைகள் இல்லாமல் போகாது. ஆனால், மன்மோகன் சிங் ஆரம்பித்து வைத்த பொருளாதாரக் கொள்கையில் மாற்றங்கள் புகுத்தாமலேதான் ஆட்சி தொடர வேண்டும். இனியும் அந்தப் பாதையிலிருந்து விலகிச் செல்ல முடியாது என்கிற அளவுக்குப் பாதி கிணறு தாண்டி விட்டோம். பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்கும் எந்த ஒரு கட்சியின் தலைமையிலும் இந்தப் பொருளாதார சீர்திருத்தங்கள் தொடரும்.

எனவே ஐ.மு. அரசின் உறுப்பினர் கட்சிகள் தங்கள் பதவி ஆசையைப் புறந்தள்ளிவிட்டு, தேர்தலுக்குச் சம்மதித்து ஒத்துழைக்க வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தல் முடிந்து, ஓராண்டுதானே ஆகிறது; மீண்டும் எக்கச்சக்கமாகச் செலவாகுமே என்று யோசிக்கத் தேவையில்லை.

பெரும்பான்மை பலமுள்ள நல்லாட்சி அமையும் போது, பொருளாதாரம் விரைவாகச் சீர்பட, தேர்தல் செலவுகளை அரசு சுலபமாகத் திரும்ப சம்பாதித்து விடலாம்.

ஐ.மு. தானே முன்வந்து தேர்தல் கோருவதில் இன்னொரு ஆதாயமும் உண்டு. பொருளாதார ரீதியாகத் தன்னை பலப்படுத்திக் கொண்டு, பின்னர் ஐ.மு. அரசைக் கவிழ்த்துவிட்டு, பணத்தை இரைத்து வோட்டு அறுவடை செய்யலாம் என காங்கிரஸ் கணக்குப் போட்டிருந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. காங்கிரஸின் இந்தக் கணக்கை முறியடிக்க, ஐ.மு. முந்திக் கொள்வது நல்லது. தேர்தல்களின்போது பணம் புகுந்து விளையாடுவதைக் குறைக்க அது வழிசெய்யும்.

எதிர்பாராத வாக்குமூலம்!

பெங்களூர் பெண் அதிரடி!!

சராசரிகளின்

விஜயன், மஞ்சள் தடவின வெட்டரை மடித்து, பாக்கெட்டில் வைத்தபோது மாலினி வந்தாள். மழையில் கொஞ்சம் நனைந்த சுடிதாரின் முன்புற ஓரங்களில் ஈரப்பிசுபிசுப்பு. முகத்தைக் கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டபடிக்கு அவள் அவிழ்த்து விட்ட முறுவலில் ஒரு செல்லக் கோபம்.

"இன்னைக்கு ஏன் நீ ஆபீஸ் வரலை? ஒரு போன் கூடப் பண்ண முடியலை. இல்லையா?"

"ஸாரி. என்னமோ சோம்பேறித்தனம். காலை எழுந்திருக்கும்போதே லேட். அப்புறம் சமையல். ஆ, அது ஒரு மாயப் பிசாசு. இன்னைக்காவது உப்பு, உறைப்புகள் சரியாக அமையாமல் விடுவதில்லை என்று உட்கார்ந்ததில் பயங்கர மல்யுத்தம். ஒருவழியாகப் பத்து மணிக்கு சாப்பிட்டு முடித்ததும் படுத்து விட்டேன். என்னமோ அலுப்பு!"

"சரியா அமைஞ்சுதா, சாப்பாடு?"

"ஓயெஸ். வழக்கம் போல் தோல்வியின் முடிவில் மெஸ்ஸை நோக்கிப் படையெடுத்தேன்."

அவள் சிரித்தாள்.

"ச்சே, பாவம் நீ! என்ன கஷ்டப்படறே?"

அவனுக்கு சுகமாக இருந்தது. பிரத்தியேகமாகப் பரிதாபப்பட யாரும் கிடைத்து விடுகிறபோது மனத்தில், அழுத்தமாகப் பரவுகிற சோக சுகம்.

"பேசாமல் என் வீட்டுக்கு வந்துடேன்? சும்மா வரமாட்டாய். தெரியும். பேயிங் கெஸ்டாக வரலாமில்லையா?"

விஜயன் பதில் சொல்லவில்லை. மென்மையாக ஒரு புன்னகை. தோழமை கலந்த ஒரு லுக். புன்னகையும் அந்தப் பார்வையும் கலக்கிற விகிதத்தில் வெளிப்படுகிற வலிக்காத மறுப்பு. வார்த்தைகளை விட பாவங்கள், உணர்வுகளை எத்தனை வசீகரமாக வெளிப்படுத்துகின்றன?

திருநெல்வேலியில் இருந்தபடிக்கு, கூரை வேய்ந்த பஞ்சாயத்துப் பள்ளியிலும் போர்டு ஸ்கூலிலும் ஆரம்பம் பயின்று, சென்னைக்கு ரயிலேறி கல்லூரிகளில் களம் கண்டு, வாங்கிய

பா. ராகவன்

எம்ஸிஏவுடன் பெட்டி படுக்கைகளைச் சேர்த்து சுருட்டிக் கொண்டு அவன் பெங்களூரில் அகதி போல இறங்கின போது, மாலினிதான் அநாதரட்சகியாக அவனைத் தடுத்தாட்கொண்டாள்.

மூளைகளின் முதலீட்டில் விஸ்வரூபம் காட்டுகிற பன்னாட்டு சாஃப்ட்வேர் நிறுவனம். உனக்கு இருக்கிறதா மூளை? வா, வந்து கொஞ்சம் அவிழ்த்துக் காட்டு. பதிலுக்கு இப்போது ரூபாயாக வாங்கிக் கொள். நாலு வருஷம் கழித்து, ஃப்ளாரிடாவுக்கு அனுப்புகிறேன். அப்போது டாலரில் வாங்கிக் கொள்.

மெஜஸ்டிக் வளைவருகே ஆபீஸ். மாலினி அவனுக்கு சிவாஜி நகரில் அறை பார்த்துக் கொடுத்தாள். சாப்பாடு? ஓட்டல் எனக்கு ஒத்துக் கொள்கிறதில்லை. சுயம்பாகம்தான் சரி என்று அவன் சொன்னான். எதற்கும் இருக்கட்டும் என்று அவள் அடையாளம் காட்டின மெஸ்தான் நாலு வருஷம் ஆனபின்பும் வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.

எழுபது பேர் வேலை பார்க்கிற கிளை நிறுவனம் அவளுடையது. மாலினி அங்கே சீனியர் ஸிஸ்டம்ஸ் அனாலிஸிஸ்ட். மகா கர்வி என்று பிறர் உதட்டுக்குள் பேசிக் கொள்வதை அவன் கேட்டிருக்கிறான். ஆனால் அது அவளுக்கு ஒரு திரை அல்லது கவசம். அவனுக்கு அது வெகு சீக்கிரம் தெரிந்து விட்டது. குணங்களாலும் நடவடிக்கைகளாலும் பின்னப்பட்ட திரையை விலக்கி உள்ளே எட்டிப் பார்ப்பதற்கு என்னவெல்லாம் ஜாலங்கள் காட்ட வேண்டியிருக்கிறது?

அவள், அவனை மிகவும் அணுகி, பிளக்க முற்பட்டபோதுதான் அவளே இறங்கி வந்தாள். ரசனைகளின் ஒற்றுமை. ஃபீனாப்பிகளில் பூச்சி பிடிக்கிற நேரம் போக மிச்ச நேரத்தை அவன் இசையோடு செலவழித்ததை

கனவுக்காலம்



அவள் வியப்புடன் பார்த்தாள்.

"ஐயோ, இந்த இயந்திர சாம்ராஜ்யத்தில் நீ ஒருத்தன் மனுஷனா இருக்கியே, சந்தோஷம்!"

அப்புறம் புத்தகங்கள். மேலும் அவனுக்கு ரங்கோலி போடத் தெரிந்திருந்தது. சின்ன வயதில் விளையாட்டாகப் பழகியது. அது என்னமோ, பெண்மையின் இயல்புகளைக் கொஞ்சம் போல் சுவீகரித்துக் கொண்டு விடுகிற ஆண்களைப் பெண்களுக்கு எப்போதும் பிடித்துப் போகிறது.

"விஜயன், நீ ஒருநாள் என் வீட்டுக்கு வரவேண்டும்"

"ஓ. அதற்கென்ன?"

மறுநாள் ஆபீஸ் முடிந்ததும் தன் அறைக்குப் போகாமல் மாலினியுடன் டெக்கன் ஹெரால்டு ஆபீஸுக்குப் பின்புறம் இருந்த காலனியில் அவள் வீட்டுக்குப் போனான்.

வாசலில் சின்னத் தோட்டம். படிக்கு மேலே சரவிளக்கு. கதவைத் திறந்ததும் கார்ப்பெட்டுகள். சோபாவில் விரிந்து கிடந்த ஹிண்டு. சுவரில் மாடர்ன் ஓவியங்கள். டீவிக்கு மேலே மாலினியின் போட்டோ. அங்கே ஒரு டேபிள். ஸ்டீரியோ. தனித்தனியே ஸ்பீக்கர்கள். இறைந்து கிடக்கிற கேஸட்டுகள்.

"கொஞ்சம் ம்யூஸிக்?" என்று கேட்டுவிட்டு, எதையோ தேடி எடுத்துப் போட்டுவிட்டு, "இதோ வரேன்" என்று உள்ளே போனாள். நாடா சுழன்று, கெனிஜியின் ஸாக்ஸஃபோனில் Man's Dream இறங்கி, மிதந்து வந்து, காதில் உருகியது.

அவன் கண்ணை மூடிக்கொண்டு இசையில் சுகமாக செத்துப் போகத் தொடங்கியபோது. கையில் ஒரு கோப்பையும் சில பிஸ்கெட்டுகளுமாக மாலினி வந்தாள்.

பேச என்ன இருக்கிறது? வைத்துவிட்டு, அவளும் உட்கார்ந்தாள். மௌனம் மிக அழகானதுதான். ஆனால், அழகேதானே சமயங்களில் கழுத்தை நெரித்தும் விடுகிறது?

அவன் கேட்டான் : "மாலினி நீங்கள் தனியாகவா இருக்கிறீர்கள்?"

"ஆமாம்."

"அப்பா, அம்மா?"

"ப்ச். பம்பாயில்."

"எத்தனை வருஷமா இங்கே?"

"ஆறு வருஷம் ஆச்சு. நான் அசல் பம்பாய்க்காரி. ஆனா என் அம்மா தமிழ்நாடு. அப்பா தில்லி ஆள். ஆனா நான் பிறந்து, வளர்ந்ததெல்லாம் பம்பாய். வாழ்க்கைப்பட்

டது பெங்களூர். தேசிய ஒருமைப்பாடு!"

அவன் புன்னகை செய்தான். அவனும் அதில் கலந்து கொண்டபடிக்குக் கேட்டான் : "வாழ்க்கைப்பட்டதுன்னா?"

ஒரு சின்ன இடைவெளி. மௌனப் பிரளயம். கேஸட்டில் பாடல் நின்று, அடுத்தது தொடங்க ஆகிற விநாடிகளின் யுகப் புரட்சி. வெளியே மழை பிடித்துக் கொண்டது. மாலினி சொன்னாள் : "உன்னிடம் சொல்ல என்ன? நான் ஒரு டிவோர்ஸி."

அவனுக்கு அது அடுத்தடுத்து இயல்பான பல கேள்விகளை உண்டுபண்ணும் வியப்பூட்டும் செய்தியாக இருந்தது. ஆனாலும் கேட்கவில்லை. கேட்கலாம்தான். ஆனால் எதையும் தெரிந்து கொண்டு என்ன ஆகப் போகிறது? காதல், மோதல், கருத்து வேற்றுமை எட்ஸெட்ரா, எட்ஸெட்ரா. இப்படித்தான் இருக்கும். கேள்விகள் எப்போதுமே கேட்கப்படுபவருக்கு ரசமூட்டுபவையாக இருக்கிறதில்லை. தவிரவும் இது அந்தரங்கம். மழைக்குக் குடை மாதிரி, இந்த மாநகரில் இவள் தனக்கொரு ஷெல்டர். எதையும் பேசி, உணர்வுகள் புண்பட்டுப் போனால்? அவன் சட்டென்று பேச்சை திசை மாற்றி, "மாலினி, நீங்கள் யானி அட் ஆக்ரோபொலிஸ் கேட்டிருக்கிறீர்களா?" என்றான்.

அவளுக்கு அந்த கண்ணியம் பிடித்திருந்தது. உனக்கென்ன, இருபத்தேழு வயசு இருக்குமா? அடுத்தவர் அந்தரங்கத்துள் நுழைய விரும்பாத ஆண்மை எத்தனை உயர்வானது! உனக்கெப்படி அது சாத்தியமாயிற்று?. காலம் காலமாக சந்தர்ப்பம் கிடைக்கிறபோதெல்லாம் கேட்கப்பட்டு, சலித்துப் புழுங்கிப் போனவள் தெரியுமா, நான்? முதல் முதலில் எனக்குள் பீடம் போட்டு ஏறி உட்கார்ந்திருக்கிறாய்! வெல், ஐ லைக் யூ, ஜெண்டில்மேன்.

அப்புறம் எத்தனையோ சந்திப்புகள். ஊர் சுற்றல். அரட்டை, சிரிப்பு, கும்மாளம். டின்னர், சினிமா. லீவ் போட்டுவிட்டு பிக்னிக்.

"வரியா, மைசூர் போயிட்டு வரலாம்?" - திடீரென்று ஒருநாள் கேட்டாள்.

"சரி."

"எதுக்குன்னு கேட்கலை?"

"சொன்னா கேட்டுக்கறேன்."

"அங்கே ஒரு சுவாமி இருக்கார். பிரமாதமா பாடுவார் தெரியுமா? ம்யூஸிக் தெரபின்னு கேள்விப்பட்டிருப்பாய்..."

"உம்."

"அதிலே பெரிய ஆள். மகான்."

விஜயனுக்கு இது புது அனுபவமாக இருந்தது. மாலினிக்கு இப்படி சாமியார்களின் மேல் அபிமானம் இருக்கக்கூடும் என்று அவன் நினைத்துப் பார்த்ததில்லை.

"வரேன். ஆனால் எனக்கு இதிலெல்லாம் அத்தனை நம்பிக்கை இல்லை. உங்களுக்காகத்தான்."

"நம்பிக்கை வேணும்னு அவசியம் இல்லை. அது வெறும் தியரி. அவ்வளவுதான். அனுபவத்துக்காக முயன்று பார்க்கலாம் இல்லையா?"

நினைத்துக் கொண்டாற்போல் சடார் சடாரென்று பொழிந்து, சாலையை அலம்பி விட்டு ஒளிந்து கொள்ளும் மைசூரின் கிளைமேட் அவனுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. மாலினி அந்த சாமியார் பற்றி வழியெல்லாம் பேசிக் கொண்டே வந்தாள். அவனுக்கு அது ஒன்றும் பிரமாதமாக ரசிக்கவில்லை என்றாலும் அவளுடன் கூடச் செல்கிறோம் என்பதே சுகமாக இருந்தது. சட்டென்று எதிர்பாராமல் அவள், அவன் கையைப் பற்றிக் கொள்வாள். அவனுக்குத் தாமிரபரணியில் ஒரு முங்கு போட்டாற்போலிருக்கும்.

பெண்மை. இதற்குள் எத்தனை தங்கச் சுரங்கங்கள் ஒளிந்து கொண்டிருக்கின்றன? என்னென்ன சுகங்கள்! அந்தப் பேச்சு ஒரு சுகம். சிலீரென்று சிரிக்கிறபோது படருகிற கிளர்ச்சி ஒரு சுகம். சின்ன விரல்கள் உரசுகிறபோது மனத்துக்குள் பற்றிக் கொள்கிற அக்னியும் ஒரு சுகம்தான் - இப்படித் தோன்றுகிறபோதெல்லாம் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டு விடுவான். வெள்ளம் போல் பாயும் கள்ளத்தை அவள் கண்டுபிடித்து விட்டால்?

ஆனால், அது கள்ளம்தானா என்பதில் அவனுக்கு சந்தேகம் இருந்தது. இதுதான் இயல்போ என்று நினைத்தான். கள்ளமில்லாத நட்பு, தெய்வீகம் கலந்த காதல் என்பது போன்ற சொற்றொடர்களுக்கு அர்த்தம் தேடுவது நடைமுறையில் சாத்தியமானதில்லை என்பதில் அவன் தீர்மானமாக இருந்தான். நீ பெண். நான் ஆண். இயல்பாக இருப்பது தவிர, தேடிப் பிடித்து உறவுக்கு வேறு பெயர் கொடுப்பதில் வேஷம்தான் இருக்க முடியும்.

ஆனாலும் பொங்குகிற சந்தோஷத்தைத் திருட்டுத்தனமாகத்தான் அனுபவிக்க முடிகிறது. வெளியே காட்டிவிடத் தயக்கம் தடுக்கிறது.

திடீரென்று அவனுக்கு ஓர் எண்ணம் எழுந்தது. மாலினியும் இப்படித்தான் தவிக்கிறாளோ? பக்கவாட்டில் சோளக் கட்டையைக் கடித்தபடி நடந்து வரும் அவளை உற்றுப் பார்த்தான்.

"என்ன, அப்படிப் பார்க்கறே?" என்றாள் மாலினி.

"ஒண்ணுமில்லை. கேட்டால் தப்பா நினைச்சிக்க மாட்டீங்களே?"

"ம்ஹூம்?"

"ஆபீஸில் நீங்கள் யாரோடும் பழகறதில்லை. முகத்தில் ஒரேவித மெட்டல் பாவம் தான் எப்போதும். ஆனால் ஏன்..."

அவள் முடிக்கவிடவில்லை. சட்டென்று அவன் கையைப் பற்றி அழுத்தினாள். பேச என்ன இருக்கிறது? மறுபடி பெங்களூர் வரும் வரைக்கும் கூட அவர்கள் பிறகு பேசிக் கொள்ளவில்லை.

வெளியே மழை லேசாக விட்டிருந்தது. வெளிச்சம் கரைந்து, சாம்பலாகிக் கொண்டிருந்த வானம். மாலினி கேட்டாள் : "வரியா? வெளியிலே நடந்து போய் ஒரு சாய் குடிச்சுட்டு வரலாம் - எலுமிச்சம் பழம் பிழிஞ்சு?"

அவன், கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்பினான்.

"மத்தியானமெல்லாம் தாங்கலை தெரியுமா எனக்கு? நீ ஆபீஸுக்கு வராதது பொருட்டல்ல. ஏன் என்னிடம் சொல்லலை?"

அவனுக்கு இது சங்கடமாக இருந்தது. நட்பைக் கூட ஒரு கமிட்மெண்ட்டாக வைத்துக் கொள்ளத் தன்னால் முடியாது என்று நினைத்தான். ஆனால் இவளுடன் தனக்கு இருப்பது



"என்னங்க நீங்க என்னதான் குழந்தைநல மருத்துவரா இருந்தாலும், இப்படி வெறும் ஜட்டியை மட்டும் போட்டுக்கிட்டு பால் பாட்டிலை வாயில வச்சிக்கிட்டா கிளினிக் போறது...?"

— ப. ரவிச்சந்திரன்

நட்புதானா? லவ்? உடனே தனக்குள் இல்லை, இல்லை என்று சொல்லிக் கொண்டான்.

ஏதோ ஒரு வகையில் அவளைத்தான் எக்ஸ்பிளாய்ட் பண்ணிக் கொள்கிறோம் என்று தோன்றியது. தனிமைக்கு ஒரு துணையாக. பொழுதுபோக்குக்கு ஒரு பொம்மையாக. நினைத்து இச்சைப்பட ஒரு வடிவமாக.

ஹோட்டலில் மாலினி சொன்னாள் : "தெரியுமா? அநேகமாக இன்னும் மூன்று மாதத்தில் நீ ஹெட் ஆபீஸுக்கு டெபுடேஷனில் போக வேண்டிவரும். பாஸ் இன்று சொல்லிக் கொண்டிருந்தார்."

அவனுக்கு உற்சாகமாக இருந்தது. ஃப்ளாரிடா! டாலரில் சம்பளம்.

"தாங்க்ஸ் மாலினி. நல்ல செய்தி சொல்லியிருக்கீங்க."

"உன் டேலண்ட்டுக்கு, நீ அங்கேயே கூடத் தங்கிடலாம் - இஃப் யூ விஷ்..!"

சற்றுத் தயங்கியவள், பின் சொன்னாள் : "நீ போயிட்டேன்னா எனக்குத்தான் கஷ்டம்."

அவன் பதில் சொல்லவில்லை. மறுபடி வீட்டை அடைந்து, சாரலுக்கு ஜன்னல்களை மூடிவிட்டு அமரும் வரை பேசவில்லை.

"மாலினி, இங்கேயே சாப்பிடறீங்களா? பயப்பட வேணாம். ப்ரெட் டோஸ்ட்தான். அது நல்லாவே செய்வேன்."

"பார்த்துக்கலாம். நீ உட்காரேன்."

தன் அருகே அவள் கைநீட்டியபோது அவன் கொஞ்சம் கூச்சமாக உணர்ந்தான். இருப்பினும் காட்டிக் கொள்ளாமல் போய் அமர்ந்தான். அவன் முற்றிலும் எதிர்பாராத தருணத்தில் அவள் நெருங்கி அவனை முத்தமிட்டு, கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

"விஜயன், ஐ திங்க்..."

அவள் எதுவும் சொல்லிவிடக் கூடாதே என்று அவனுக்குப் படபடப்பாக இருந்தது. வாழ்க்கையில் என்னவெல்லாம் சந்திக்க வேண்டி வந்துவிடுகிறது! உணர்வைக் கீறிக் கிளறிப் பார்த்து ரசிக்கிற தருணங்கள்.

"ஐ'ம் ஸாரி விஜயன். ஐ திங்க், நான் உன்னை எல்லை மீறி எக்ஸ்பிளாய்ட் பண்ணிக் கொள்கிறேன்..."

மின்னலடித்தாற்போலிருந்தது அவனுக்கு. எப்படி ஒரேவிதமாக யோசித்திருக்கிறோம்? அதுதான் நிஜமா?

"என் தனிமை, என் வாழ்க்கையில் நேர்ந்த சோகம், அதனால் எழுந்த வெறி... உன் அண்மையைக் கொண்டு ரொம்பத்தான் ஆயின்மெண்ட் போட்டிருக்கிறேன். ஒரு க்ஷணம் நீ இல்லாவிட்டால் தவித்துப் போகிறேன். இது தப்போன்னு இப்பல்லாம் மிகக் குழப்பம்."

அவன், எதுவும் பேசுவதில்லை என்று முடிவு செய்து கொண்டான்.

"நானே நினைச்சுப் பார்த்தேன். இதெல்லாம் ஏன்? உன்னோட பழகறது வெறும் ஃபிரெண்ட்ஷிப்தான்னு என்னையே சமாதானம் பண்ணிக்கப் பார்த்தேன். ஆனா..."

"உறவுகளுக்குப் பெயரே வைக்க வேண்டாம் மாலினி."

"இல்லை. அது தப்பு. நான்தான் மனசுக்குள் எல்லை மீறிட்டு இருக்கேன். கஷ்டம் என்னோடே இருக்கட்டும். நீ ஃப்ளாரிடா போயிடு. திரும்பி வராதே!"

அவள் சட்டென்று எழுந்து வேகமாக நடந்தாள்.

துக்கமும் சுயவெறுப்பும் பீறிட அவன் பிரமித்து நின்றான். 'சே, எனக்கு ஏன் இந்த தைரியம் வரவில்லை? கண்ணாடியைப் போட்டு உடைக்கிற தைரியம்?'

தன்னிச்சையாய் அவன் கரம் பாக்கெட்டிலிருந்த கடிதத்தை எடுத்தது. ஊரிலிருந்து, அவனுக்குப் பெண் பார்த்திருப்பதாக அப்பா எழுதியிருந்த, ஓரங்களில் மஞ்சள் தடவிய கடிதம்.



உயிர் வேட்டை!

●● நன்கு சாணை தீட்டப்பெற்ற, கூர்மையான கத்தியால் ஒரு சதக். போஃபர்ஸ் சமாசாரத்தை நிமிர்த்தி வைத்துக் குறிபார்த்து, வெறித்தனமாக ஒரு ரவுண்டு. உடம்பு முழுக்க ஒரு 'மைக் டைசன் ஸ்பெஷல்'. எதை உவமை சொல்வது? வியாழன் இரவு பி.பி.ஸி. ஹாட்-டாக்கில் பால்தாக்கரே, படு பயங்கரம்! மதவாதத்தை ஒரு ஆர்.டி.எக்ஸாக வைத்துக்கொண்டு, சிறுபான்மையினரை – பங்களா தேஷிலிருந்து இங்கே வந்து குடியேறியிருக்கும் அகதிகளை ஓடிப் போனால்தான் ஆயிற்று என்று அவர் மிரட்டுகிற மிரட்டலில் குலைநடுங்கிப் போகிறது. வாரிசு அரசியல் பற்றிக் கேட்கப்பட்ட கேள்விகளையெல்லாம் சலிப்புடன் ஒரு 'ப்ச்'ல் ஒதுக்கிவிட்டு தான் பிடித்த முயலுக்கு அஞ்சு கால் என்று அராஜகமாக நிற்கிறார். அந்தத் தோற்றத்தைச் சொல்ல வேண்டும். முழு நீளக் காவி அங்கியும் ருத்திராட்ச மாலையுமாக ஒரு சாந்த ஸ்வரூப சாமியார் கெட்-அப். பேச்சு? வத்திக்குச்சியே வேண்டாம்! ஹாரிபிள்.

●● இன்னொரு பயங்கரம் டிஸ்கவரி சானலில். ஒரு பாம்பு துரத்த, உயிர் பயத்தில் குடுகுடுவென்று ஓடுகிறது ஒரு கொழுத்த காட்டு எலி. அது அடைக்கலம் புகுகிற இடம் ஒரு காட்டுச் சிலந்தி வளை. (நண்டு வளை மாதிரித்தான் இருக்கிறது. அதன் புழக்கடைக் கதவு வரைக்கு எங்ஙனம் காமெராவைக் கொண்டு போனார்கள் என்று இன்னமும் புரியவில்லை!) வளைக்கு உள்ளே போய் நன்கு பதுங்கிக் கொண்டபின்தான், அது சிலந்தியை கவனிக்கிறது. 'வா வா, வசமா மாட்டிக்கினியா?' என்று நாக்கைச் சப்புக்கொட்டுகிற சிலந்தி, கொஞ்சம் ஆட்டம் காட்டும்விதமாக, எலியைக் கவனிக்காதது போல வேறுபுறம் பார்க்கிறது. பயத்தில் வெலவெலத்த எலி, 'சரி, வெளியே பாம்பாவது போய் விட்டதா' என்று பார்க்கத் தலையை வெளியே நீட்ட, 'புஸ்!' என்று சீற்றம். அலறிக் கொண்டு அது உள்ளே திரும்ப, வழியை மறைத்துக் கொண்டு, பி.எஸ். வீரப்பா போல சிலந்தி மெள்ள கை கால்களை விரித்து வந்து, பிடித்து, அமுக்கி, சட்னி! சில நிமிஷங்கள்தாம்! ரத்தம் உறைந்து விட்டது! இந்தக் குரூர நாடகத்தை பிரமிப்பூட்டும்விதமாகப் படம் பிடித்த கேமராமேன் யாரோ! அன்னார் நினைத்திருந்தால் அந்த எலியைக் காப்பாற்றியிருக்கலாம். ஆனால் வைல்ட் டிஸ்கவரிக்கு ஓர் அருமையான டாக்குமென்டரி கிடைத்திருக்காது. உயிர் வேட்டை!

●● பதினாலாம் தேதி பாகிஸ்தானின் சுதந்தரப் பொன்விழாக் கொண்டாட்டம், பி.பி.ஸி. மற்றும் ஸ்டார் நியூஸ் சானல்களில். பாகிஸ்தான், பாகிஸ்தான், ஜீதே பாகிஸ்தான் என்று பிள்ளைகள் பாடிக் கொண்டாட, "காஷ்மீரைக் கைப்பற்றாத வரைக்கும் இந்த சுதந்தரக் கொண்டாட்டமெல்லாம் சும்மா உளுளுவாக்காட்டிக்கு" என்று நவாஸ் ஷெரீஃப் மேல் கோட்டை இழுத்து விட்டுக் கொண்டு பேட்டி கொடுக்க, 'ஓ' என்று எதிர்க்குரல் கொடுத்தது கூட்டம். காலம் உள்ளவரை துவேஷம் தொடரும்.

●● வெள்ளிக்கிழமை இந்திய சுதந்தரப் பொன் விழாக் கொண்டாட்டங்களைப் பொற்காகப் போட்டிகளுடன் கொண்டாடியது சன் டீவி. பாப்பையா தலைமையில் காதல் கல்யாணமா, அரேன்ஜ்டு மேரேஜா என்று வழக்கமான வகையில் ஒரு பட்டிமன்றம். அப்புறம் நடிகை பேட்டி, புதிய பாடல், புதிய சினிமா என்று ஒரு ஸ்டேண்டர்ட் ஃபார்முலா வைத்துக்கொண்டு குதிரை ஓட்டினார்கள். நிகழ்ச்சிகளை விட விளம்பர நேரம் ஜாஸ்தி.

●● மா துஜே சலாம் என்று புதிய ஹேர் ஸ்டைலுடன் ஏ.ஆர். ரகுமான் எல்லா சானல்களிலும் உரக்கப் பாடிய ஆல்பப் பகுதியில் ரசனைக்குரிய விஷயம் கேமரா. கவனித்துப் பார்த்திருப்பவர்கள் கண்டுகொள்ளலாம். ஸ்டாண்ட் போட்டு நிற்கவைத்த காமெரா. லைட்டிங்கில் நிறைய சிவப்பு சேர்த்து, காட்சிப் பொருட்களை மட்டுமே (மனிதர்கள், ஒட்டகங்கள், கொடி இன்னபிற) நகர்த்தி, நாலு நொடிக்கொருதரம் 'டிஸால்வ்' செய்து ஒரு நவீனமான படப்பிடிப்பு உத்தியைக் காட்டியிருக்கிறார்கள். யார் அந்த பரத்பாலா?

●● விஜய் டீ.வியில் ரோஜா. சின்னச் சின்ன ஆசையை ஸ்பான்ஸர் செய்தது டாபர். அரவிந்தசாமியைக் கடத்திப் போன காட்சியைத் தந்துதவியது ஒரு பெயின்பாம். காதல் ரோஜாவே, இன்னொரு கம்பெனியின் அருட்கொடை. இப்படி ஸீன் ஸீனாக வெட்டி வெட்டி விளம்பரதாரர்களுக்குத் தந்து, மூணு நிமிஷத்துக்கொருதரம் அவர்கள் தம்மை டமடம என்று பிரகடனப்படுத்திக் கொண்டது மகா எரிச்சல். மனுஷனுக்கு, டீவியில் சினிமா பார்க்கிற ஆசை இனி செத்தாலும் வராது.

- 'டிவீ'

அதிசயம்! ஆனால் உண்மை!!

படத்தில் உள்ளவரை இந்நேரம் அடையாளம் கண்டு கொண்டிருப்பீர்கள்.

அவரோடு ஓர் உரையாடல்.

"விஜய்' (டீ.வி) உங்களோடு ஒட்டிக் கொண்டிருக்கிற ஒரு பெயர். விஜய் டீ.வியில் உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சிகள் என்னென்ன?"

"என்ன செய்தார் எம்.எல்.ஏ. பிடித்தமான நிகழ்ச்சி. அதே போல ஜனதா தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியின் நிகழ்ச்சியும் பிடிக்கும்."



"உங்களைப் பார்க்கும் போது இந்தக் கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியாது. சன் டீ.வி நேருக்கு நேர் ரபி பெர்னார்ட், விஜய் டீ.வி 'இந்த வாரம் சந்தித்தேன் ரபி பெர்னார்ட் - இருவரில் யாரைப் பிடிக்கும்?"

"சன் டீ.வி நேருக்கு நேர் ரபியைத்தான் பிடிக்கும். இப்போதைய விஜய் ரபி பெர்னார்ட்டுக்கு அந்த வேகம் இல்லை என்பது என் கருத்து!"





ரபி பெர்னார்ட் தம்மைப் பற்றி இவ்வளவு வெளிப்படையாக விமர்சிக்கிறாரே என்று வியப்பாக இருக்கிறதா?

இவர் அசல் ரபி பெர்னார்ட் அல்ல. விஜய் கணேஷ். மடிப்பாக்கம் அருகே உள்ளகரம் என்ற பகுதியில் வசிக்கும் 22 வயது இளைஞர். பி.காம் பட்டதாரி. இப்போது அஞ்சல் வழியே எம்.பி.ஏ. படித்துக் கொண்டிருக்கிறார். 'நிட்' நிறுவனத்தில் கம்ப்யூட்டர் படிக்கிறார். பார்ப்பவர்கள் நூற்றுக்கு நூறு சதவீதம் அசந்து போய் நிற்கும் அளவுக்கு ரபி பெர்னார்டின் சாயலை அப்படியே கொண்டிருக்கிறார்.

"எனக்கு சன் டீ.வி ரபிபெர்னார்டைத்தான் பிடிக்கும்!"

"நான் கல்லூரியில் சேர்ந்த போதுதான் என் நண்பர்கள் 'டேய் நீ அப்படியே ரபி பெர்னார்ட் போல இருக்கிறே' என்று இந்த உருவ ஒற்றுமையைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். என்னைச் சார்ந்த உறவினர்களும் அப்படியே கமெண்ட் அடித்தார்கள். பிறகுதான் எனக்கே இது பற்றிய ஓர் உணர்வு வந்தது. போதாக் குறைக்கு அவ்வப்போது எனக்கு ஏற்பட்ட சில அனுபவங்களும் இந்த உருவ ஒற்றுமையை உறுதி செய்தன.

தி. நகரிலிருந்து மடிப்பாக்கத்துக்கு பஸ்ஸில் வந்து கொண்டிருந்தேன். பல பேர் என்னை உற்றுப் பார்த்துக் கொண்டே வந்தார்கள்.

ஒருவர் கேட்டார், "நீ என்ன ரபி பெர்னார்டுக்குத் தம்பியா?" நானும் சட்டென்று சொன்னேன். "ஆமாம்... என் பெயர் விஜய் பெர்னார்ட்" அவர் நம்பி விட்டார். கொஞ்ச நேரம் இப்படி சீரியஸாய் நடித்தவன், பிறகு உண்மையைச் சொன்னபோது அவரால் நம்ப முடியவில்லை.

என் அப்பாவுக்கு பைபாஸ் சர்ஜரி நடந்தது. அதற்கு முன்பாக செக் அப்புக்கு அப்போலோ ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தோம். 'கார்டியாலஜி' டிபார்ட்மென்ட்டுக்குள் நுழைய முடியாத அளவு கூட்டம். என்னைப் பார்த்ததும் ஏதோ மாஜிக் போல! 'நீங்க போய்ப் பாருங்க ரபி பெர்னார்ட்!' என்று என்னை அவராகவே உறுதிப் படுத்திக் கொண்டு ராஜ மரியாதையுடன் உள்ளே அனுப்பி வைத்தார்கள். அப்பாவை அழைத்துக் கொண்டு நானும் உள்ளே போய் செக் அப் முடித்துக் கொண்டு வெளியே வந்தேன். 'நான் அவரில்லை... அவர் போல' என்று சொல்லி சிரித்துக் கொண்டே வந்து விட்டேன்.

ஒரு சிலர் அடித்த கமெண்ட்: 'நீங்க நேர்ல பாக்கறதைவிட டீவியில கொஞ்சம் வயசானவர் போல தெரியறீங்க ரபி!' அந்த கமெண்ட்டையும் வாங்கிப் போட்டுக் கொள்வேன். நமக்கென்ன பேச்சு? என்று சிரித்துக் கொண்டே கூறும் விஜய்க்கு ஓர் ஆசை: "அசல் ரபி பெர்னார்ட்டை ஒருமுறை நேரில் சந்திக்க வேண்டும்."

பேட்டி : **ராணிமைந்தன்**

மும்பையில் நீ கால் வைப்பாயா?


பாஸ்வானுக்கு பால்தாக்கரே சவால்!!

ரசிகர் குஜ்ரால்

"மஹாத்மாவை மதிக்காதவர்கள் நடத்தும் பொன்விழாக் கொண்டாட்டத்தில் பிரதமர் கலந்து கொள்வதாவது? அதுவும் மாலையில் கொடியேற்றுவதாவது? அபசாரம்" என்று மும்பை இளைஞர் காங்கிரஸ் அணியினர் கறுப்புக் கொடி காட்டி ஆர்பாட்டமெல்லாம் செய்து பார்த்தார்கள். ஆனால் குஜ்ரால் அவர்களைக் கண்டுகொள்ளாமல் விழாவில் கலந்து கொண்டு, ராஷ்ட்ரிய சேவா தளக்காரர்கள் ஆஜாத் மைதானில் அரங்கேற்றிய "ஆஜாதீ கி ஜங்" என்ற நாட்டிய நாடகத்தை இரண்டு மணி நேரம் பொறுமையாக உட்கார்ந்து, ரசித்து, புகழ்ந்தும் தள்ளியிருக்கிறார். குடியரசு தினத்தன்று 'இதே நாடகத்தை தில்லியில் நடத்த இவர் அழைப்பு விடுக்க, எஸ். ஆர். பொம்மை ஒரு படி மேலே சென்று, "உங்களுக்கு இலவச ரயில் வசதி செய்து தருகிறோம், நீங்கள் இந்தியா முழுவதிலும் இதை அரங்கேற்ற வேண்டும்" என முழங்கி இருக்கிறார். பிரதமர், தாக்கரே - உதவ் ஜோடியுடன் அரை மணி நேரம் பாஸ்வான் மிரட்டலைப் பற்றி உரையாடியிருக்கிறார். தன்னைப் பார்க்க வந்த குழுக்களுக்கெல்லாம் 'தரிசனம்' கொடுத்து, மும்பை ரயில் ட்ராஃபிக்கை ஒழுங்குபடுத்துவதிலிருந்து, தடா கைதிகள் விடுதலை வரை எல்லா பிரச்னைகளையும் தீர்த்து வைப்பதாக வாக்குறுதியளித்திருக்கிறார். ஆகஸ்ட் இறுதிக்குள் குஜ்ரால் அரசு கவிழ்ந்து விடும் என அபசகுனமாகப் பேசுபவர்கள் பேசி விட்டுப் போகட்டுமே!

கதைக்குள் கதை

பொன்விழா கொண்டாட்டங்களை ஒட்டி, அரசின் கலாசாரத் துறையைச் சேர்ந்தவர்கள் ஒரு 'ஒலி-ஒளி'ப்படத்தை தயாரித்து, பத்திரிகையாளர்களுக்குத் திரையிட்டிருக்கிறார்கள். படத்தில், கலாசார அமைச்சர் பிரமோத் நவல்கரும், காரியதரிசி ஸ்வரூப்பும் சிறு சொற்பொழிவாற்றுகிறார்கள். 1857 - 1942 காலகட்டத்தைச் சார்ந்த தேசியத் தலைவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, ஸ்வரூப், அதில் ஜின்னாவின் பெயரையும் அறிவிக்க, வந்தது வினை! நாடு துண்டாடப்படுவதற்கு காரணமானவரை நம் தேசியத் தலைவராய் எப்படிக் காட்டப் போயிற்று என்ற காரசார விவாதமெழுந்து, அது ஸ்வரூப்பின்



• கேட் வே ஆஃப் இந்தியா

ட்ரான்ஸ்ஃபரில் முடிந்திருக்கிறது. பிரதமருக்காகத் திரையிட்ட போது, அந்தப் பகுதி நீக்கப்பட்டு விட்டது என்பது வேறு கதை! ஸ்வரூப்பை அப்புறப்படுத்த இது ஒரு பாவ்லா என்பது கிளைக் கதை!

சைத்ய பூமி


பாஸ்வானுக்கும் தாக்கரேவுக்கும் துவந்த யுத்தம் துவங்கி விட்டது. தாதர் ரயில்வே ஸ்டேஷனுக்கு 'சைத்ய பூமி' என்று பெயர் மாற்றம் செய்யப் போகிறாராம் பாஸ்

கவிழ்வாரா குஜ்ரால்?

வான். சைத்ய பூமி அம்பேத்கரைப் புதைத்த இடம். அவர் வாழ்ந்ததும் தாதர் பகுதியில் தான். 'தாதர்' என்றால் நுழைவாயில் என்று பொருள். 'மிகப் புராதனமான இந்தப் பெயரை மாற்றி, அப்பகுதியில் அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் இந்துக்களுக்கும் தலித்து களுக்குமிடையே கலவரத்தைத் தூண்டப் பார்க்கிறார் பாஸ்வான்' எனக் கொதிக்கிறார் தாக்கரே! "ஆகஸ்டு 15-க்குப் பின் நீ மும்பையில் கால் வைப்பாயா" என்று இவரும், "காலையும் வைத்து, தாதரின் பெயரையும் மாற்றிக் காட்டு கிறேன்" என அவரும் சவாலோ சவால் விட்



• பால் தாக்கரே



• பாஸ்வான்

டுக் கொண்டிருக்கிறார்கள். சைத்ய பூமி, குருக்ஷேத்ர பூமியாக மாறாமலிருக்க வேண்டும்!

பத்து நிமிடமா? பத்தாது!

சென்ட்ரல் ரயில்வேயின் புதிய அட்டவணைப்படி, பத்து நிமிடத்திற்கு ஒரு ரயில் (CST – தாணா) என்ற தீர்மானம் பெரிய வரவேற்பு பெற்றது; ஆனால் முதல் வாரத் திலேயே தகராறு ஆரம்பித்துவிட்டது! CSTயி லிருந்து தாணா செல்லும் அதே ரயில் மீண் டும் தாணாவிலிருந்து CST செல்லும். தாணா டெர்மினலில் ஏறச் சென்ற பெண்கள், அதில் ஏற்கெனவே முந்தைய ஸ்டேஷன்களிலிருந்து (முலுண்டு, பாண்டுப்) ஏறிய பெண்களால் 'ஹவுஸ்ஃபுல்' ஆகியிருந்ததைக் கண்டு, அவர் களை இழுத்து, வெளியே துரத்தப் பார்த்து கலாட்டா செய்தனர். மறுநாள் முலுண்டில் பெண்களெல்லாம் 'ட்ராக்கை' மறித்து உட் கார்ந்து கொண்டு எதிர்ப்புக் கொடி, கலாட்டா செய்தனர். இவர்களுக்கு, முலுண்டிலிருந்தே ட்ரெயின் விட வேண்டுமாம்! 'இப்படி ஒவ் வொரு ஸ்டேஷனிலிருந்தும் ரயில் விட வேண்டுமென அவரவர் ஆரம்பித்தால் நாங் கள் என்ன செய்வது?' என அங்க லாய்க்கின்றனர் ரயில்வேக்காரர்கள். வசதிகளைக் கூட வம்பாய் மாற்றும் யுக்தியில் நம்மவர்களை யாரும் வெல்ல முடியாது!

திடீர் பக்தி

மக்கள் கவனத்தைக் கவர சிலர் 'Streak' பண்ணுவார்களே? அதைவிடக் கேவலமாகக் கூத்தடித்துக் கொண் டிருக்கின்றனர், "கேட் வே ஆஃப் இந்தியா டிமாலிஷன்" கமிட்டியினர் (Gateway of India Demolition Committee). கமிட்டியின் வயது பத்தே நாட் கள்! திடீரென நினைத்துக் கொண்டு, "கேட் வே ஆஃப் இந்தியா"வை இடித்தால் தானாயிற்று என அடம்பிடிக்கின்றனர். ஏனென்றால், அதில் ஜார்ஜ் மன்னன், ராணி மேரி இருவரையும் வரவேற்குமுகமாக எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன வாம். அந்த இடத்தில் கனோஜி ஆங்கரே (சிவாஜியின் தானைத் தலைவன்) பெயர் இடம்பெற வேண்டுமாம்! பொன்விழா ஆண் டாகப் பார்த்து, இவர்களுக்கு திடீரென்று தேசப் பற்று பீறிட்டுக் கொண்டு பாய்கிறது போலும்!

– ஜெயஸ்ரீராஜ்

'Accident' என்ற ஆங்கில நாவலின் தமிழ் வடிவம். © டேனியல் ஸ்டீல்

காதலியுடன் கணவன் உல்லாசம்! மனைவி சீற்றம்! கூச்சல்!!

11:29

பிராட் ராத்திரி பூரா வீட்டுக்கு வரவில்லை! ஃபோன் செய்யவுமில்லை! தாரென்ஸன் தெரிவித்த செய்தி கேட்டுப் பேஜ் கொதித்துப் போனாள்.

"ஜேனை நன்றாகக் கேட்டீர்களா? பிராட் கூப்பிடவில்லை என்றா சொன்னான்?" என்றாள் மறுபடியும்.

"ஸாரி, பேஜ். பிராட் வரவுமில்லை, ஃபோன் செய்யவுமில்லை என்றுதான் உன் சிநேகிதி சொன்னாள்," என்றான் தாரென்ஸன் அவள் கையை ஆறுதலாகத் தட்டிக் கொடுத்தபடி. கணவனுக்கும் மனைவிக்குமிடையே என்ன தகராறு என்று இப்போதும் அவனுக்குத் தெளிவாகப் புரியவில்லை. பிராட் ஏதோ பெண் விவகாரத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறான் என்று தோன்றியது.

ஆனால் வாழ்க்கையில் இந்த மாதிரி எவ்வளவோ நெருக்கடிகளைப் பார்த்தவன் தாரென்ஸன். மனைவி டானாவுடன் எத்தனையோ கசப்பான அனுபவங்களைக் கண்டவன். ஆகவே பேஜின் பிரச்னையொன்றும் புதிதல்ல. எனினும், பேஜைப் பார்க்க அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. ஒண்டியாக எத்தனை சுமையைத் தாங்கிக் கொண்டிருக்கிறாள், பாவம்!

"கொஞ்ச நேரத்தில் பிராட் வந்து விடுவார். மனசைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே. சில பேருக்கு ஆஸ்பத்திரி என்றாலே தலை சுற்றும். நான் கூட அப்படித்தான் இருந்தேன்," என்று மெதுவாகப் பேச்சை மாற்றினான் அவன்.

"அப்புறம் எப்படி மாறினீர்கள்?"

"குழந்தைகளினால்தான். டானா அவர்களைக் கொஞ்சம் கூடக் கவனிக்க மாட்டாள். நான்தான் எல்லாம் செய்ய வேண்டியிருந்தது. உன் கணவனுக்கு அப்படியில்லை. குழந்தைகளை நல்லபடி பார்த்துக் கொள்ள நீ இருக்கிறாயே?" என்று புன்னகையுடன் சொன்னான் அவன்.

தான் மன ஆறுதல் அடைய வேண்டுமென்பதற்காகவே அவன் பிராடுக்குப் பரிந்து பேசுகிறான் என்பது பேஜுக்குப் புரிந்தது. ஏற்கெனவே அவன்பால் ஏற்பட்டிருந்த நன்றியுணர்வு இன்னும் அதிகரித்தது.

டாக்டர்கள் வந்து, ஆலிஸனின் நிலைமை அப்படியேதான் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். மூளையில் வீக்கம் ஏற்பட்டிருப்பது நல்லதல்ல. உங்களுக்குத் தப்பான நம்பிக்கை தர நாங்கள் விரும்பவில்லை. இன்றைய இரவைத் தாண்டினால்தான் சொல்ல முடியும்..." என்றார்கள்.

திகிரென்றது பேஜுக்கு. "இன்றைய இரவைத் தாண்ட வேண்டும் என்றால்... அதாவது... அதாவது..."

அவளால் வாக்கியத்தைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இன்று இரவு ஆலிஸன் இறந்து போகக்கூடும் என்று சொல்கிறார்கள்! தெய்வமே! கூடாது! கூடாது!

கொஞ்ச நேரம் கழித்து அவளை ஆலிஸனைப் பார்க்க அனுமதித்தார்கள்.

இரண்டு கண்களிலிருந்தும் கண்ணீர் பொங்கி வழிய, ஆலிஸனின் படுக்கைக்குப் பக்கத்திலே உட்கார்ந்து, அவள் கையைப் பற்றிக் கொண்டாள், அவள் தன்னை விட்டுப் போய் விடாதபடி தடுத்துப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிற மாதிரி.

இரவு முழுதும் ஆலிஸனின் பக்கத்திலேயே உட்கார்ந்திருக்க அவளை அனுமதித்தார்கள். ஆலிஸன் கொஞ்சமும் அசையவில்லை. அவள் முகத்தைப் பார்ப்ப

20

தும் கையைப் பிடித்துக் கொள்வதும் பிரார்த்தனை செய்வதுமாக இருந்தாள் பேஜ்.

பொழுது விடிந்தது.

ஆலிஸனின் மூளை வீக்கம் நல்ல வேளையாக மேலும் மோசமாகவில்லை. தொடர்ந்து ரெஸ்பிரேட்டர் கருவியின் மூலம் சுவாசித்துக் கொண்டிருந்தாள். நிலைமையில் அபிவிருத்தி இல்லை. எனினும் உயிருடன் இருக்கிறாள். அதுவே போதும் என்று எண்ணிக் கொண்டாள் பேஜ். ஆனால் நிமிடத்துக்கு நிமிடம் நிலைமை மாறுகிறதே!

"நீங்கள் வீட்டுக்குப் போவதானால் போகலாம்," என்றார்கள் டாக்டர்கள். "உடனடியாக அபாயம் எதுவும் இல்லை. மயக்க மருந்து பலமாகக் கொடுத்திருக்கிறோம். வீட்டிலேயே இருங்கள். அவசரமென்றால் ஃபோன் பண்ணுகிறோம்."



மீண்டுமொரு முறை ஆலிஸனை முத்தமிட்டுவிட்டு அவள் புறப்பட்டபோது காலை ஆறரை மணி. வெயிட்டிங் அறையை நோக்கி நடக்கையில் அவன் தேகத்தின் ஒவ்வோர்

மூலம் : டேனியல் ஸ்டீல்

தமிழில் : ரா.கி. ரங்கராஜன்

அங்குலமும் தாள முடியாமல், வலித்தது.

முன்னறையில் –

தாரென்ஸன் அவளுக்காகக் காத்திருந்தான். நாற்காலியில் உட்கார்ந்தபடியே ராத்திரி முழுதும் அவன் தூங்கியிருக்கிறான்! ஆலிஸனுக்கு ஏதாவது நேர்ந்து, பிராடும் வராமலே இருந்து விட்டானென்றால், பேஜுக்குத் துணை தேவைப்படும் என்பதால் வீட்டுக்குப் போகாமல் இருந்திருக்கிறான். நினைக்க நினைக்கப் பேஜின் உள்ளம் உருகியது.

ஆலிஸன் தாக்குப் பிடித்துக் கொண்டிருக்கிறாள் என்பதைக் கேட்டதும் தாரென்ஸன் முகத்தில் நிம்மதி ஏற்பட்டது.

"என் காரில் உன்னை அழைத்துப் போகிறேன். உன் வண்டியை இங்கேயே விட்டு விட்டு வா. நானே உன்னை மறுபடி இங்கே அழைத்து வருகிறேன்," என்றான்.

இரண்டு அடி எடுத்து வைப்பதே பெரும் கஷ்டமாக இருந்தது அவளுக்கு. கார் ஓட்டுவதைப் பற்றி நினைக்கவே முடியாது. எனவே நன்றியுடன் ஒப்புக் கொண்டவள், "என்னை வீட்டில் கொண்டு போய் விட்டால் கூடப் போதும். டாக்ஸியில் திரும்பி வந்து கொள்வேன்," என்று சொல்லி அவனுடன் முன் சீட்டில் அமர்ந்து கொண்டாள். 'என் செல்லம்.. என் கண்மணி.. இன்னொரு ராத்திரியை தாண்டி விட்டாள்..' என்ற நினைப்பில் அவள் நெஞ்சு நிறைவு கொண்டது. இப்படியே கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிழைத்து விட்டால்..

"நீ ரொம்ப தைரியசாலி," என்று பாராட்டி தாரென்ஸன் மிருதுவாக அவள் கன்னத்தில் முத்தமிட்டான். அவள் தோளை ஒருமுறை அழுத்தி, கையைத் தட்டிக் கொடுத்தான். பிறகு காரைக் கிளப்பினான்.

வீட்டு வாசலை அடைந்தபோது, பேஜ் சீட்டில் சாய்ந்தபடி அயர்ந்து தூங்கிப் போயிருந்தாள். மெல்லத் தட்டி எழுப்பினான்.

கண்ணைக் கசக்கிக் கொண்டு விழித்தவள், "தாங்க் யூ.. அருமையான சிநேகிதர் கிடைத்தீர்கள்," என்று புன்னகை செய்தாள்.

மணி ஏழரையாகியிருந்தது. வீட்டை அடைந்து, கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். பிராடைப் பார்த்தால் என்ன சொல்லப் போகிறோம் என்று நினைத்துக் கொண்டாள். இனிமேல் சொல்வதற்கு என்ன இருக்கிறது? குட் பைதான்.

வீட்டுக்குள் யாரும் இல்லை.

படுக்கையில் விழுவதா அல்லது ஜேனின் வீட்டுக்குப் போய் ஆண்டியை அழைத்து வருவதா என்று அரை வினாடி யோசித்தாள். உடம்பு கெஞ்சியது. தூக்கம் இமைகளை அழுத்தியது. ஆனால் குழந்தையை அழைத்து

''ஓடிக்கிட்டிருந்த ரயில் என்ஜின் முன்னாடி விழுந்தும், உயிர் போகலையா? அதெப்படி சாத்தியம்?''

''என்ஜின் அப்ப ரிவர்ஸ்லதானே போய்க்கிட்டிருந்தது!''

– பெ. கலாசாமி

வருவதே முக்கியம் என்று தீர்மானித்து, முகத்தைக் கழுவிக் கொண்டு, முடியை அழுத்திப் படிய வைத்துக் கொண்டாள். யாராவது கூப்பிட்டார்களா என்று டெலிபோனைப் பார்த்தாள். யார் யாரோ கூப்பிட்டார்கள் என்று பதிவாகியிருந்தது.

ஆனால் பிராடிடமிருந்து மூச்சுப் பேச்சைக் காணோம்.

என்ன கல் நெஞ்சம் இருந்தால், மகள் ஆலிஸனின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் வேளையில் காதலியின் வீட்டில் உட்கார்ந்திருக்க முடியும்! இந்நேரம் அந்த ஸ்டிபானிக்கும் ஆலிஸனைப் பற்றித் தெரிந்திருக்கும். அப்படியும் இவரை விடாமல் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறாளே, ராட்சசி!

பொங்கும் சினத்தை அடக்கிக் கொண்டு ஜேனின் வீட்டை அடைந்தபோது, ஆண்டி சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தான். ஜேன் மெல்லப் பாடியபடி சமையல் செய்து கொண்டிருந்தாள். டெலிவிஷன் ஓடிக் கொண்டிருந்தது.

"அதிர்ஷ்டக்காரன்டா நீ!" என்று கூறி அவன் உச்சந்தலையில் முத்தமிட்டாள்.

அவன் உடனே கேட்ட கேள்வி : "ஆலி எப்படிம்மா இருக்காள்?"

பேஜ் கண்ணீரை விழுங்கிக் கொண்டாள். நேற்று ராத்திரி போயிருக்க வேண்டியவள், கடவுள் அருளால் பிழைத்திருக்கிறாள் என்று குழந்தையிடம் எப்படிச் சொல்ல முடியும்?

"ஓ, நன்றாயிருக்கிறாள்," என்று அவனிடம் சொல்லிவிட்டு, ஜேனிடம், "நேற்று ராத்திரி ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டாள். மூளையில் வீக்கம் ஏற்பட்டிருக்கிறது. மூச்சு விடத் திணறுகிறாள்," என்றாள்.

''ஆலி செத்திடுவாளாம்மா?'' என்று ஆண்டி குழந்தைத்தனமான திகிலுடன் கேட்டான்.

"சீச்சீ, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நன்றாயிருக்கிறாள்."

ஒரு நிமிடம் மௌனமாயிருந்தவன், இன்னொரு தர்மசங்கடமான கேள்வியைக் கேட்டான். "அப்பா எங்கேம்மா? ராத்திரி என்னை வந்து பார்க்கவேயில்லையே?"

"ஆபீசில் ஏகப்பட்ட வேலை அவருக்கு. ராத்திரி லேட்டாக வந்தார். நீ அயர்ந்து தூங்



கிக் கொண்டிருந்தாய். அதனால்தான் உன்னை எழுப்பவில்லை," என்று சமாளித்தாள் பேஜ்.

"இன்றைக்கு நான் ஆலியைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு வரலாமாம்மா?" என்று கேட்டான்.

ஆலிஸனைப் பார்த்தால் குழந்தை பயந்து போவான் என்று பேஜ் எண்ணினாள். உடம்பு பூரா கட்டு, ட்யூப்கள், தலையில் முடி இல்லாமல் மொட்டை.

"இப்ப வேண்டாம். இன்னும் கொஞ்சம் அவள் உடம்பு தேறட்டும். போகலாம்," என்று அவள் சொல்லிக் கொண்டிருந்தபோது, ஜேன் அவளைக் கவலையுடன் கவனித்தவண்ணம் இருந்தாள். கண்ணின் கீழ் நேற்று ஏற்பட்டிருந்த கருவளையம் இன்று மேலும் அதிகமாகியிருப்பது தெரிந்தது. "பேஜ், நீ வீட்டுக்குப் போய்ப் படுத்துக் கொள். நான் ஆண்டியை ஸ்கூலில் கொண்டு போய் விட்டு விட்டு வருகிறேன்," என்றாள்.

அதைக் கேட்டதுமே ஆண்டியின் முகம் தொங்கிவிட்டதைப் பேஜ் பார்த்தாள். "இல்லை. நானே கொண்டு போய் விட்டு விட்டு, வீட்டுக்குத் திரும்பியதும் படுத்துக் கொள்கிறேன்," என்றாள்.

எப்படித்தான் காரை ஓட்டினாளோ, எப்படித்தான் ஆண்டியின் பள்ளிக்கூடத்தை அடைந்தாளோ, எப்படித்தான் வீடு திரும்பினாளோ அவளுக்கே தெரியாது. வீட்டுக்குத் திரும்பியவுடனே படுக்கையில் விழுந்தாள். அதற்கு முன் ஒரு நிமிடம் டெலிபோனை மறுபடி பார்த்தாள். பிராட் கூப்பிட்டதாகத் தெரியவில்லை.

காலை மலர்ந்து, நல்ல வெளிச்சம் வந்து விட்டபோதிலும் சில வினாடிகளில் தூங்கி விட்டாள். அயர்ந்த தூக்கத்தில் ஆழ்ந்திருந்த போது, கர்ணகடூரமாக டெலிபோன் மணி அடித்தது. வெகுநேரம் அடித்த பின்னரே பேஜ் விழித்துக் கொண்டாள். குபீரென்று படுக்கையிலிருந்து தாவி போனை எடுத்தாள். ஆஸ்பத்திரியிலிருந்து ஏதாவது கெட்ட செய்தி சொல்லப் போகிறார்களோ என்று குலை நடுங்கியது.

ஆனால் கூப்பிட்டவள் அம்மாதான். நியூயார்க்கில் பேஜின் அக்கா அலெக்ஸியுடன் இருந்து வருகிறாள்.

ஆலிஸனுக்கு விபத்து ஏற்பட்டு நினைவில்லாமல் அபாயத்தில் கிடக்கிறாள் என்பதை பேஜ் சொன்னதும், "அடப்பாவமே!" என்றாள் அம்மா. "சரியாகிவிடும், கவலைப்படாதே. விபத்து, கோமா என்றாலே பார்ப்பதற்கு முதலில் பயமாகத்தான் இருக்கும். பிறகு ஒன்றுமில்லை என்று ஆகிவிடும். நாளைக்கு நான் ஷாப்பிங் போகிறேன். போய் விட்டு வந்து கூப்பிடுகிறேன்," என்று சொல்லிவிட்டுப் போனை வைத்து விட்டாள்.

பேஜுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

அம்மாவும் சரி, குடும்பத்தில் மற்றவர்களும் சரி, யதார்த்தத்தைப் பார்க்க மறுக்கிறவர்கள். எல்லாம் நல்லபடிதான் இருக்கும் என்று கற்பனை செய்து கொண்டு, பொய்யான கனவு உலகத்தில் வாழ்கிறவர்கள். குடும்பம் மொத்தமும் மூழ்கிக் கொண்டிருக்கும்போது கூட இப்படித்தான் இருப்பார்கள்.

மறுபடி தூங்கப் போகலாமா என்று யோசித்தபடி படுக்கையில் உட்கார்ந்திருந்த போது, பிராட் வந்தான்.

எதுவும் நடவாத மாதிரி சட்டையைக் கழற்றி ஹேங்கரில் மாட்டிக் கொண்டிருந்தவனைப் பார்த்ததும் பேஜுக்குப் பொறுக்கவில்லை.

"ராத்திரி பூரா எங்கே போயிருந்தீர்கள்? ஆஸ்பத்திரிக்கு வருவதற்கென்ன? ஃபோன் கூடவா பண்ண முடியவில்லை?" என்று படபடவென்று வெடித்தாள்.

"என்னவோ ஞாபகமில்லை, விடு" என்றான் அவன் சாவதானமாக.

பேஜின் ஆத்திரம் அதிகரித்தது. "ஞாபகமில்லையா? இங்கே ஆண்டி அப்பா எங்கே என்று அழுவானென்பது ஞாபகமில்லை? அங்கே ஆஸ்பத்திரியில் உயிருக்குப் போராடும் ஆலிஸனுக்குப் பக்கத்தில் நான் உட்கார்ந்திருப்பேனே என்பது ஞாபகமில்லை? ஆலி செத்துப் போயிருந்தால் என்ன பண்ணுவீர்கள்?"

அவளுடைய கூச்சலைக் கேட்டு பிராட் கலங்கவில்லை. நிதானமாக, "ஆலிஸனின் பக்கத்தில் உட்கார்ந்திருப்பதால் என்ன ஆகிவிடப் போகிறது? அவள் உயிரோடு இருந்தாலும், இறந்து போனாலும் ஒன்றுதான். எப்பாடு பட்டாவது, நடைப்பிணமாக, ஜடமாக, அவளைக் காப்பாற்ற வேண்டும் என்று நீ நினைப்பது பைத்தியக்காரத்தனம்!" என்றான்.

அந்தப் பதில் பேஜை நிலைகுலைய வைத்தது. அவனைக் கழுத்தை நெரித்துக் கொலை செய்துவிடலாம் போல வெறி ஏற்பட்டது.

(தொடரும்)

உடும்பு

எனக்கு ஒரு ஒன்றுவிட்ட அக்கா இருந்தாள். வெகு காலத்திற்கு முன்பு. சொற்ப நாட்களே அவளுடன் நான் பழக நேர்ந்தாலும் என்னால் அவளை மறக்க முடியாது. கொஞ்ச காலம் சென்ற பிறகு அவர்கள் வேறு வீடு பார்த்துப் போய்விட்டார்கள். நானும் படிப்பதற்காக வேறு ஊர் போனபோது தொடர்பு விட்டுப் போயிற்று. அவள் என்ன ஆனாள் என்று எனக்கு இன்றுவரை தெரியாது.

சமீபத்தில் ஒருநாள் புறநானூறு படிக்குபோது, 'உடும்பு ரித்தன்ன வென்பெழு மருங்கிற் கடும்பின் கடும்பசி' என்ற வரிகள் வந்ததும் அவள் ஞாபகம் எனக்குப் பழையபடி வந்தது.

மோந்ததும் வாடிவிடுமாம் அனிச்சம்பூ. அப்படித்தான் சரசக்காவுடைய மனமும். மிகவும் மெல்லியது. இரக்க சுபாவம் கொண்டவள். சிறு துன்பத்தைக்கூட சகிக்கும் தன்மை அவளுக்குக் கிடையாது. பூனைக்குட்டியோ, நாய்க்குட்டியோ கண்ணில் பட்டால் எடுத்து வைத்துக் கொஞ்சுவாள். பிச்சைக்காரர்கள் வந்தால் கைநிறைய அள்ளிப்போட்டு தாயிடம் பேச்சு வாங்குவாள்.

எவ்வளவுக்கு இரக்க சுபாவம் இருந்ததோ அவ்வளவுக்கு பிடிவாத குணமும் கொண்டவள். உடும்புப்பிடி என்று சொல்வார்களே, அப்படி. ஒருவராலும் அவளை மாற்ற முடியாது.

அப்படிப்பட்டவள் காதல் வயப்பட்டதும் என்ன மாதிரி மாறிவிட்டாள்?

அவர்கள் வீட்டில் எல்லோரும் மாமிச பட்சிணிகள்தாம். சரசக்கா மாத்திரம் மரக்கறி உணவுதான் சாப்பிடுவாள். எப்படித்தான் மரக்கறி உணவுக்கு மாறினாள் என்ற பூர்வீகம் யாருக்கும் தெரியாது. ஆனால் அவளை மாமிசபட்சிணியாக்க அவளுடைய தாயார் செய்த மிரட்டலுக்கெல்லாம் அவள் மசிந்து கொடுக்கவில்லை. அரக்கியர் நடுவே விரதம் காத்த அசோகவனத்து சீதைபோல பிடிவாதமாக இருந்துவிட்டாள்.

சரசக்காவுடைய முகம் கூட இப்ப மறந்துவிட்டது. நினைவில் இருப்பதெல்லாம் அவளுடைய மூக்குத்தான். செதுக்கி வைத்தது போல அழகாக இருக்கும். எறும்பு கூட போக முடியாதபடி சிறிய துவாரங்கள். சிரித்த கண்கள். அவை எப்பவும் ஈரமாகிக் கனிந்து போய் இருக்கும்.

ஒருநாள் நாங்கள் 'கொக்கான்' விளையாடிக் கொண்டிருந்தோம். அந்த விளையாட்டில் அவளை வீழ்த்த முடியாது. கொக்கானுக்கென்றே பிறந்தவள் போல ஒருவித ஆவேசத்துடன்தான் விளையாடுவாள்.

கொக்கன் விளையாடுவதற்கென்று அக்கா நல்ல வழவழப்பான கற்களைப் பொறுக்கி வைத்திருப்பாள். கோவிலுக்கு நேர்ந்துவிட்ட சேவல் 'வதக், வதக்' என்று கொத்துவதுபோல அக்கா விளையாடும்போது கற்களை கொத்திக் கொத்தி எடுத்து விடுவாள். கற்கள் பரவிக் கிடந்தால் முழங்கால் நுனியில் இருந்து கைகளை ஒரு விசுக்கு வீசி அவற்றை அள்ளிவிடுவாள். சவுக்கை சொடுக்குவதுபோல அவள் விரல்கள் வேகமாகப் பாயும்.

அப்போது என்னுடைய முறை. 'புட்டுத் தள்ளும்' முறை. வழவழப்பான கல் ஒன்றை எடுத்து கூரை முகடு வரைக்கும்மேலே எறிந்துவிட்டு கைவிரல்களைக் குவித்துப்பிடித்து ஏந்தி

'கல்தா' கொடுத்த சிங்கப்பூர் காதலன்!

காதலி உருக்கம்!!


அ. முத்துலிங்கம்

னேன். அப்பாடா, ஒரு சத்து கழிந்தது! எத்தி விட்டு சரசக்காவைப் பார்த்தால் அவளைக் காணவில்லை. மாயமாக மறைந்துவிட்டாள்.

இந்தப் பெண்களுக்கே சத்தம் செய்யாமல் ஓடுவதற்கு வராது. நாங்கள் 'கண்ணாரே கரை யாரே' ஒளித்துப்பிடித்து விளையாடும் போது அவளுடைய வளையலும், கால் கொலுசும் 'சிலுங், சிலுங்' என்று காட்டிக் கொடுத்துவிடும். எப்பொழுது விளையாடினாலும் அதில் வெற்றி எனக்குத்தான். எப்படி இவள் திடீ ரென்று மாயமாய் போனாள்? சிமிக்கிடாமல் மறைந்துவிட்டாளே!

நான் திரும்பிப் பார்த்தேன். இந்த அக்கா இப்படி மாயமாக மறைந்ததற்கான காரணம் அங்கே சைக்கிளில் வந்து கொண்டிருந்தது. சிங்கப்பூர் மச்சான்தான். அவளுடைய சொந்த மச்சான். பளபளவென்று மினுங்கிய சைக் கிளில் வந்து கொண்டிருந்தான். நாலு கண்ணாடிகள் பூட்டிய கைப் பிடி. வண்ண வளையங் கள் போட்ட சில்லுகள். குதிரை மீது ஆரோகணித்து வரும் ராஜகுமாரன் போல வந்து கொண்டிருந்தான்.

சிங்கப்பூர் மச்சான் என்று பெரி சாகப் பேரே ஒழிய அவனுக்கு சிங்கப் பூர் எந்தப் பக்கம் என்று கூடத் தெரியாது. தகப்பன் சிங்கப்பூரில் வேலை செய்து பென்சன் எடுத்தவர். ஊரிலே வந்து நாலு காணி வாங்கி, வட்டிக்குப் பணம் கொடுத்து வசதி யாக வாழ்ந்து கொண்டிருந்தார். இந்த வட்டிக் காசில் குளுகுளுவென்று வளர்ந்து வாலிபம் குன்றாமல் இருந்தான், இந்த மச்சான். சைக் கிளை கை முறியுமட்டும் துடைத்து பளபள வென்று வைத்திருப்பதுதான் இவனுடைய முக்கியத் தொழில். சரசக்கா பருவமடைந்தபின் இந்தச் சைக்கிள் அடிக்கடி இந்தப் பக்கம் வரத்





''அவர்கிட்ட சுத்தம் சோறு போடும்னு சொன்னது தப்பா போச்சு?''

''ஏன்? என்னாச்சு?''

''தினம் நீட்டா குளிச்சிட்டு வந்து என் வீட்ல உட்கார்ந்திடறார்!''

— சந்தியூர்.ஏ. கோவிந்தன்

தொடங்கியது.

மாயமாக மறைந்த அக்கா கதவிடுக்கு வழியாகத் தன் தரிசனத்தை தந்து கொண்டிருந்தாள். பாவாடை சுருக்குகளை நேராக்கினாள். சங்கிலியை மென்று சரிசெய்தாள். சிங்கப்பூர் மச்சான் என்றால், சின்னம்மாவுடன் மிகவும் அவசரமானதும், பாரதூரமானதுமான பல விஷயங்களை அலசிக் கொண்டிருந்தான். அவன் கண்கள் மட்டும் டென்னிஸ் போட்டி பார்ப்பவருடைய கண்கள்போல அங்குமிங்கும் அலைந்தபடி இருந்தன.

சின்னம்மாவுக்கு எப்படியும் சிங்கப்பூர் மச்சானை மடக்கிவிட வேண்டும் என்ற ஆசை இருந்தது. அது பால்மணம் மாறாத எனக்குக் கூட அப்பட்டமாகத் தெரிந்தது. இது ஊரிலே குமர்களைக் கட்டிக்காத்துக் கொண்டிருக்கும் மற்ற அம்மாக்களுக்குத் தெரியாமலிருக்குமா? அவர்கள் வழிப்பறிக் கொள்ளைக்காரர் போல சிங்கப்பூரின் வரவுக்காக வீதிகளிலே காத்துக் கொண்டிருந்தனர்.

மச்சான் மற்ற அம்மாக்களுக்கு தப்பி அங்கு வரும்போதெல்லாம் சின்னம்மா விழுந்து விழுந்து உபசாரம் செய்தாள். அவன் சொன்ன ஜோக்குகளுக்கெல்லாம் சிரித்தாள்; சொல்லாமல் விட்ட ஜோக்குகளுக்கு ஏங்குவது போல் இருந்தாள். எனக்கு எரிச்சல் எரிச்சலாக வரும்.

கிராமங்களில் காதலுக்கு அன்றன்று தூபம் போடத் தேவையில்லை. ஒரு பொறி கிடைத்தால் காணும். தன்பாட்டுக்கு காதலர்களின் கற்பனையில் விரிந்து சுவாலையாகப் பற்றிக் கொள்ளும்.

பார்த்துக் கொண்டிருக்கும்போதே அக்காவின் முகத்தில் மெருகு ஏறிக்கொண்டு வந்தது. என்னுடன் மும்முரமாக கொக்கான் விளையாடிக் கொண்டிருக்கும் சமயங்களில் அவளுடைய யோசனை பத்து யோசனை தூரம் சென்றுவிடும். கண்கள் எதையோ தேடத் தொடங்கியிருந்தன. குரலிலே புது உற்சாகம் வந்து சேர்ந்து கொண்டது. மாமரத்தின் கீழ் இருந்து அக்கா அடிக்கடி 'நேற்றந்தி நேரத்திலே, நீராடும் துறைதனிலே' என்று இனிமையான குரலில் பாடத் தொடங்கியிருந்தாள். அவள் குரலில் இருந்த குதூகலம் வீடுமுழுவதையும் வந்து நிறைக்கும்.

இந்தக்காதல் இப்படி அவர்கள் குல ஆசாரம் பிசகாமல் வளர்ந்து கொண்டிருந்ததே தவிர இதுவரை அவர்கள் ஒரு வார்த்தையேனும் பேசவில்லை.

அதற்கும் ஒருநாள் ஒரு சந்தர்ப்பம் வந்தது.

கல்கியின் 'சிவகாமியின் சபதம்' தொடர் முடிந்து புத்தகமாக வந்துவிட்டது. சரசக்கா அதைப் படிக்க வேண்டும் என்ற அடங்காத ஆசையோடு தவித்தாள். மச்சானிடம் கேட்கும் படி என்னைத் தூண்டிவிட்டாள். நான் 'நீ போய்க் கேள், நான் என்னத்துக்கு?' என்று அக்காவை அவன் முன்னால் ஒரு நாள் தள்ளி விட்டேன். இவளும் அடிப்பானை சோற்றை சுரண்டி எடுப்பதுபோல துணிச்சலை வரவழைத்துக் கொண்டு 'சிவகாமியின் சபதம்' என்று புத்தகத்தின் பெயரை முணுமுணுத்து விட்டாள்.

சிங்கப்பூர், சைக்கிளில் ஏறி பாரிஜாத மலருக்காக அலைவதுபோல எங்கெல்லாமோ அலைந்தது; கடைசியில் இணுவில் வாசக சாலையில் ஒரு புத்தகத்தைக் கண்டு பிடித்துக் கொண்டுவந்து கொடுத்தது. அதற்குப் பிறகும் எத்தனையோ புத்தகங்கள். இந்தச் சாக்கில் இருவரும் கொஞ்சம் கொஞ்சம் மூச்சுக் காற்றை வேகமாக விட்டபடி பேசிக் கொண்டார்கள்.

இவர்கள் கைகளையும் தங்கள் தங்களுக்கே வைத்துக் கொண்டார்கள் என்று சொல்வதற்கில்லை. வயது அப்படி. அவர்கள் விரல்கள் அடிக்கடி அவர்களையும் மீறி அளைந்தன. நந்தியாவட்டை மரம் சிலிர்த்துப் போய் மற்றப் பக்கம் திரும்பிக் கொள்ளும்.

சரசக்காவின் பக்தி திடீரென்று பத்து டிகிரி கூடியது. அடிக்கடி தலையிலே பூ வைத்துக் கொண்டு கோவிலுக்குப் போனாள். இந்த மாமிச பட்சிணிகள் நடுவில் விரதம் காத்தாள். சின்னம்மா கைபடாமல் தானாகவே பொங்கிய பால் சோற்றை என்னுடன் பகிர்ந்து கொண்டு உண்டாள். அவளே சிருஷ்டித்த ஓர் உலகில் ஒரு தேவதைபோல பவித்திரமாக இருந்தாள். ஏதோ ஒரு சம்பவம் நடப்பதற்காக நாங்கள் எல்லோரும் காத்துக் கொண்டிருந்தது போல எனக்குப் பட்டது.

இந்தச் சமயத்தில்தான் இந்தக் காதலை இன்னும் ஓர் அங்குலம் முன்னால் நகர்த்தும் முகமாக சின்னம்மா ஓர் அருமையான யோசனையை முன் வைத்தாள்.

சிங்கப்பூரில் இருந்து வந்தவர்களுடைய சாப்பாட்டு முறைகள் கொஞ்சம் வித்தியாசமாக இருக்கும். அவர்கள் சாப்பாட்டுப் பிரியர்கள். உடும்புக்கறி என்றால் உயிரையும் கொடுப்பார்கள். மச்சானுக்கு உடும்புக்கறி வைத்துக் கொடுப்பதென்று முடிவாகியது. உரும்பிராய் தண்ணீர் குடித்தவர்களும், உடும்புக்கறி சாப்பிட்டவர்களும் திரும்பவும் அதை ருசிக்க வருவார்கள் என்பது எங்கள் ஊரில் தொன்றுதொட்டு வந்த ஐதீகம்.

இதிலே சில சங்கடங்கள் இருந்தன. எங்கள் ஊரில் உடும்புகளுக்குக் குறைவில்லை. எங்கள் வளவிலேயே அவை நிறைந்து கிடந்தன. ஆனால் அவற்றைப் பிடிப்பதற்கு ஸ்பெஷல் பயிற்சி வேண்டும். சில நாளில் அகப்படும்; சில நாளில் அகப்படாது. சனிக்கிழமை விருந்துக்கு வெள்ளிக்கிழமை இரவே அவை அகப்பட்டு ஒத்துழைக்கும் என்பது என்ன நிச்சயம்?

இந்த இடத்திலேயாவது சரசக்காவின் அப்பா, அதாவது என்னுடைய சித்தப்பா, பற்றி ஒரு அறிமுகம் செய்யாவிட்டால் அது பரம துரோகம் ஆகும். அவர் அந்த வீட்டில் இருப்பதும் தெரியாது, போவதும் தெரியாது. வாட்டசாட்டமான உடம்பு. மகா சாது. அப்படியான சாதுக்களை கடவுள் படைப்பதை இப்போதெல்லாம் நிறுத்திவிட்டார். வீட்டின் நிர்வாகம் முழுக்க சின்னம்மாவின் கைகளில்தான். அதைப்பற்றி சித்தப்பா கவலைப்படவில்லை.

ஒரு காலத்தில் இவர் உடும்பு பிடிப்பதில் மன்னராக இருந்தவராம். இவரிடம் இந்தக் கலையைக் கற்றவர்கள் பலர் இப்ப கொடி கட்டிப் பறக்கிறார்கள். ஆனால் ஒருமுறை இவருக்கு ஏற்பட்ட அநுபவத்திற்குப் பிறகு இவர் உடும்புகளுக்கு விடுதலை கொடுத்துவிட்டார்.

இப்படித்தான் இவர் ஒரு நாள் தன் வேலையாகப் போகும்போது ஓர் உடும்பும் இவரைக் கடந்து தன் சோலியாகப் போனது. இப்படியாகக் காலடியில் வந்த சந்தர்ப்பத்தை யாராவது தவறவிடுவார்களா? உடனேயே ஒரு கூப்பாடு போட்டு அங்கே உள்ள குஞ்சுகுருமான்கள் எல்லோரையும் சேகரித்து விட்டார். ஊர் எல்லாம் சுற்றி வளைத்து உடும்பைத் துரத்தியது. பாவம் உடும்பு, என்ன செய்யும்? வகையறியாமல், தனக்கு மரம் ஏறலாம் என்பதையும் மறந்து, அங்கே வசமாக வளர்ந்திருந்த ஒரு கறையான் புற்றுக்குள் போய் ஒளிந்து கொண்டது. இனி என்ன? உடும்பு கைக்குக் கிடைப்பது நிச்சயம். தமிழ் சினிமா கதாநாயகனின் தங்கை கற்பழிக்கப்படுவது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம்.

சித்தப்பாவிடம் எடுத்த காரியத்தை நிறுத்தும் பழக்கம் கிடையாது. அத்தோடு, உடும்புக் கறி தின்னும் ஆவேசமும் இப்போது சேர்ந்து கொண்டது. விடுவாரா?

அந்தப் புற்றைச் சுற்றியுள்ள ஓட்டைகள் எல்லாவற்றையும் அடைத்தார்கள், இரண்டைத் தவிர. சித்தப்பா, எப்பவும் வசதியாக வைத்திருக்கும் தனது மேல் வேட்டியை உருவி ஒரு பொந்தின் மேல் மூடினார். மற்ற ஓட்டையின் வாயில் ஒரு வாளி நிறைய அவசரமாகக் கரைந்த வெங்காய நீரை ஊற்றினார்கள். ஊற்றி விட்டு எல்லோரும் பொந்தின் வாயையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு அதிசயம் நடந்தது.

ஓட்டை வாயில் மூடியிருந்த துணி மெல்ல அசைந்தது. சித்தப்பா பாய்ந்து வேட்டியை அப்படியே கமுக்கென்று பிடித்து இழுக்கத் தொடங்கினார். இழுத்தால் அது இழுக்க இழுக்க வந்துகொண்டே இருந்தது, திரௌபதியின் சேலை போல. இவ்வளவு நீட்டுக்கு உடும்பு இருக்குமா? அப்பொழுது சமயோசித புத்தியுள்ள யாரோ கத்தினார்கள். 'ஐயோ, பாம்பு! பாம்பு!' சித்தப்பா கீழ் வேட்டியும் போனது தெரியாமல் எடுத்தார் ஓட்டம், கோவணத்துடன். இந்த சித்தப்பா அதற்குப் பிறகு இரண்டு நாள் படுக்கையில் கிடந்தாராம்.

இப்படியான பாரதூரமான காரியத்தை சித்தாப்பாவிடம் நம்பிக்கொடுக்க முடியாததால் இந்த வேலையை கிட்ணனிடம் கொடுத்தார்கள். சனிக்கிழமை விருந்துக்கு எப்படியும் ஓர் உடும்பு பிடித்துத் தந்துவிட வேண்டும் என்பது ஒப்பந்தம். இந்தக் கிட்ணன் வல்லாள கண்டன். ஒரு கூடையையும், இரண்டு முழம் கயிறையும், ஒரு தடியையும் வைத்து காரியத்தை சாதித்து விடுவான். ஆனால் பேசியபடி

''நம்ம தலைவரு புறம்போக்க வளைச்சுப் போடறதுல ரொம்ப கெட்டிக்காரர்னு பீத்திக்கிட்டியே, இப்ப பாரு!''

''ஏன், என்னாச்சு?''

''யாரோ ஒரு விஞ்ஞானி செவ்வாய் கிரகத்துல ஃப்ளாட் வாங்கலாம்னு ஆசை காட்டி, ஊழல்ல அடிச்ச பணத்தையெல்லாம் வாங்கிட்டு ஓடிட்டான்!''

— நாகூர் ஏ. காதர்





''நம்ம தலைவர் பேச ஆரம்பிச்சதும் இரண்டாயிரம் பேர் கூடிட்டாங்க!''

''ஆச்சரியமா இருக்கே!''

''அவர் பேசறதுக்கு முன்னாடி, கூட்டத்துல அஞ்சாயிரம் பேர் இருந்தாங்க!''

— பா. ஜெயக்குமார்

ஐம்பது சதக்காக கொடுத்துவிட வேண்டும்.

அடுத்த நாள் காலை அவன் சொல்லி வைத்தபடி ஒரு நல்ல சைசான உடும்போடு வந்துவிட்டான். இனிமேல்தான் பிரச்னையே ஆரம்பமாகப் போகிறது. உடும்பு பிடிப்பது லேசு. ஆனால் அதை ஆக்குவதில் சில வில்லங்கங்கள் இருந்தன.

முதலாவதாக உடும்பை உயிரோடு உரிக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் அந்த இறைச்சியில் நஞ்சு கலந்து விடுமாம். இரண்டாவது, இறைச்சியில் ஒரு சிறு எலும்புத் துண்டு கூட சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எலும்பு தொண்டையில் குத்தினால் பெரும் கலகம் ஏற்பட்டுவிடும். மூன்றாவது, இறைச்சியை வெட்டிய உடனேயே சுணங்காமல் சட்டியில் போட்டுவிட வேண்டும். இந்தச் சங்கடங்களையெல்லாம் உணர்ந்து நாங்கள் முன்னெச்சரிக்கையாக முதலிலேயே பேசிப்பறைந்து ஒரு தயார் நிலையில் நின்றோம்.

கிட்டணன் மாமரத்தில் ஆறடி உயரத்துக்கு ஓர் ஆணி அடித்தான். உடும்பின் கழுத்தில் சணல் கயிறால் ஒரு சுருக்குப் போட்டு அதைக் காலண்டர் மாட்டுவது போல அந்த ஆணியிலே உயிருடன் மாட்டித் தொங்கவிட்டான். பிறகு ஒரு மெல்லிய கத்தியை இடுப்பில் இருந்து உருவி அது பார்த்துக் கொண்டு இருக்கும் போதே அதன் தோலை வாழைப்பூ சீவுவது போல சீவத் தொடங்கினான். உடும்பும் இதை எதிர்பார்த்தது போலப் பூரணமான ஒத்துழைப்பைக் கொடுத்தது.

சின்னம்மா சமையலறையில் சட்டியை அடுப்பில் வைத்து ஆயத்தங்கள் செய்தாள். அக்கா வாசலில் நின்றாள். நான் கிட்டணனுக்கு பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன்.

கிட்டணன் இறைச்சித் துண்டுகளை வெட்டி ஒரு பூவரசம் இலையில் வைத்துத் தருவான். நான் அதைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போய் அக்காவிடம் கொடுப்பேன். அக்கா அதை எடுத்துப்போய் சின்னம்மாவிடம் தருவாள். அவள் அதை சட்டியில் போடுவாள். இப்படியாக இறைச்சி தடங்கல் இன்றி சட்டியில் போய்ச் சேர்ந்து கொண்டிருந்தது.

கிட்டணன் இறைச்சியை வெட்டும் போது உடும்பின் கண்கள் மாத்திரம் இரண்டு பக்கமும் அசைந்து கொண்டிருந்தன. நான் நாலாவது முறை ஓடிப் போய் திரும்பிய போது அந்த அசைவும் நின்றுவிட்டது. உடும்பு செத்துவிட்டது. மிகவும் செத்துவிட்டது..

சமையலறையில் தேங்காய் கூட்டு, மிளகாய் கூட்டு, மசாலா கூட்டு எல்லாம் தயாராக இருந்தன. குழம்பு கறியா, பிரட்டல் கறியா என்ற சர்ச்சை கொஞ்ச நேரம் நடந்தது. இறுதியில் பிரட்டல் என்றே முடிவானது.

கறி முதல் கொதி கொதித்ததும் ஒரு மணம் பரவியது. வயிற்றைக் குமட்டும் மணம். சரசக்கா 'ஓங்' என்று வயிற்றைப் பிடித்தபடி வாசற்படிக்கு ஓடிவிட்டாள். சின்னம்மா மாத்திரம் முந்தானையால் மூக்கைப் பொத்தியபடி சமையல் காரியங்களில் மும்முரமாக இருந்தாள்.

கிட்டணன் உடும்புத் தோலைச் சுருட்டிக் கொண்டு புறப்பட்ட போது பேசியபடி ஐம்பது சதம் கொடுத்து அனுப்பினார்கள்.

அந்தச் சமயம் பார்த்து மச்சான் வந்து இறங்கினார். மத்தியான வெயிலில் பளிச் சென்று மின்னும் சில்க் சட்டை போட்டுக் கொண்டு வந்திருந்தார். வாஸ்லைன் வைத்து இழுத்த தலைமுடி அழகாகப் படிந்து போய் இருந்தது. வாசலடிக்கு வந்த அக்கா இந்தக் காட்சியைக் கண்டு வாயூறி நின்றாள்.

சிங்கப்பூர் மச்சான் வசதியான குடும்பத்தில் இருந்து வந்தவர். இவர்களோ சாதியில் மிகவும் தாழ்ந்த சாதி, ஏழை சாதி. தங்கள் வசதிக்கு ஏற்ப மச்சானுக்குப் பாய் விரித்து பணிவிடை செய்தார்கள். பனை ஓலை விசிறியால் விசிறினார்கள். துர்வாச முனிவருக்கு குந்திதேவி செய்தது போல குற்றமற்ற சேவை. கட்டு சோறும் உடும்புப் பிரட்டலும்தான். சின்னம்மாதான் பரிமாறினாள். அக்கா கதவிடுக்கில் பார்த்தபடியே நின்றாள். நான் அவளுக்குப் பக்கத்தில் துணையாக நின்றேன். நான் அவ்வளவு கிட்டத்தில் நின்றதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. நான் ஓடியோடிக் கொண்டு போய் கொடுத்த இறைச்சியில் ஒரு சின்ன எலும்புத் துண்டு மாட்டுப்பாட்டுப்போய் இருந்தது. இந்த எலும்புத்துண்டு செய்யப் போகும் உற்பாதத்தை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்

தேன்.

சிங்கப்பூர் மச்சானுக்கு உடும்பு இறைச்சி சாப்பிடுவதற்கு சொல்லியும் கொடுக்க வேண்டுமோ? நாலுதரம் போட்டு சாப்பிட்டார். பிறகு ரசத்தை ஊற்றிப் பிசைந்தும், உறிஞ்சியும் நக்கியும் சாப்பாட்டை முடித்துக் கொண்டார். அவருடைய சில்க் சட்டையில் தெறித்த கறித்துளிகளை வீரப்பதக்கம் போல அணிந்து கொண்டு எழுந்தார். இறுதியில், 'ஆஹா! ஆஹா' என்று திருவாய் மலர்ந்தார். அக்காவின் முகம் சிவந்து பூரித்தது. அப்படியே மெய்ம்ம்மறந்து போய் நின்றாள்.

இந்தச் சந்தோஷம் எல்லாம் அன்று பின்னேரம் வரைக்கும்தான்.

எப்படித்தான் ரகஸ்யமாக வைத்திருந்தாலும் சிங்கப்பூர் மச்சானுக்கு உடும்பு இறைச்சி விருந்து வைத்த கதை சின்னாச்சிக் கிழவிக்கு எட்டிவிட்டது. அவள் வந்து 'எடி, பாதகத்தி! உடும்பு இறைச்சி உறவைக் கெடுக்கும் என்று உனக்குத் தெரியாதா? எல்லாத்தையும் கெடுத்து விட்டியே' என்று ஒப்பாரி வைத்தாள். இரண்டு தலைமுறையாக உடும்பு இறைச்சி விருந்து செய்த அனர்த்தங்களை மயிர்க்கூச்செறிய விவரித்தாள். இந்த அதிர்ச்சியில் தாயும் மகளும் இருந்தபோது நாலு வெற்றிலையை உருவி மடியிலே செருகிக் கொண்டு போய்விட்டாள்.

சின்னம்மாவுக்கும், சரசக்காவுக்கும் திக்கென்றது. சின்னாச்சிக்கிழவியின் தீர்க்க தரிசனத்தை முற்றிலும் தள்ளிவைக்க அவர்களால் முடியவில்லை. சிங்கப்பூர் குடும்பத்துக்கும் இவர்களுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. நல்ல இடத்தில் மகளைக் கரை சேர்க்க வேண்டும் என்ற அவாவில் சின்னம்மா யோசிக்காமல் இப்படிச் செய்து விட்டாள். இதை முதலில் அல்லவோ யோசித்து இருக்க வேண்டும்?

செலுலர் வராத காலமது. இருந்தாலும் சிங்கப்பூரின் தகப்பனார் சிவப்பிரகாசத்திற்கு இந்தச் செய்தி ஐம்பது மைல் வேகத்தில் போய் சேர்ந்துவிட்டது. இவர் அந்த நேரம் பார்த்து பக்கத்து வீட்டுக்காரரிடம் கந்தர்மடத்துக் கள்ளின் குணாதிசயங்கள் பற்றி ஒரு கருத்துரை ஆற்றிக் கொண்டிருந்தார். அவருக்குக் கோபம் ரௌத்திரகாரமாகப் பற்றிக் கொண்டு வந்தது. பல் நீக்கல் வழியாகக் காற்று வேகமாக வீச பத்து வீடு கேட்க சத்தம் போட்டார். கால்களின் இடுக்கிலே கையை நீளத்துக்கு விட்டு சொறிந்து கொண்டார். அப்படியும் ஆத்திரம் தீராமல் ஆகாயத்தை முறைத்துக் கொண்டு காத்திருந்தார்.

சின்னமுத்து கொட்டியது போல அவர் வீடு நிறையக் குழந்தைகள். பெரியமுத்து போட்டது போல அவருக்கு ஒரு பெண்சாதி. சிங்கப்பூர்தான் மூத்த மகன். இப்படி கிலுசைகெட்டு திரியிறானே இந்தப்பாவி என்று அவர் ரத்தம் ஓவர்டைம் செய்து கொதித்தது.

சிங்கப்பூர் வீடு வந்ததும் முதல் முப்பத்து மூன்று செகண்டுகள் ஒருவித அசம்பாவிதமும் இன்றி அமைதியாகக் கழிந்தது. அடுத்த கணம் பிரளயம் வெடித்தது. சிவப்பிரகாசம் ஓவென்று கத்தினார். எண்ணெயில் போட்ட பனங்காய் பணியாரம் போல மேலும் கீழும் துள்ளினார். காலால் உதைத்தார்; கையால் அடித்தார். கிடுகு வேலியில் பாய்ந்தார். வெயிலுக்கு ஒதுங்கிய ஓணான்கள் எல்லாம் பறித்துக் கொண்டு ஓடின. கிளுவந்தடியை முறித்துக் கொண்டு வந்தபோது மற்றவர்கள் அவரைப் பிடித்து விட்டார்கள். இவ்வளவுக்கும் சிங்கப்பூர் மந்தநாவுள்ளவன் போல வாயைத் திறக்கவேயில்லை.

ஊர் முழுக்கக் கூடி இந்தக் காட்சியை மூச்சு விடுவதை ஒத்திப்போட்டு பார்த்துக் கொண்டிருந்தது. இப்படித்தான் முதலாம் பாகம், இரண்டாம் அத்தியாயம் முடிவடைந்தது.

காலம் தாழ்த்தாமல் சிங்கப்பூர் மச்சானுக்குப் பல இடங்களிலும் பேச்சுக்கால் நடந்தது. சிவப்பிரகாசம் ஒரு வெறியோடு இந்தக் காரியத்தில் இறங்கினார். சம்பளம் குடுத்து வைத்ததுபோல் அங்கு நடக்கும் விசேஷங்களை நாளாந்தம் நாலைந்து பேராவது வந்து சின்னம்மாவிடம் சொல்லிப் போனார்கள்.

சின்னம்மா, அக்காவை ஒரு விரோதத்தோடு பார்த்தாள். அக்கா இன்னும் கடுமையான விரதங்களை அநுட்டிக்கத் தொடங்கினாள். வீட்டிலே தினமும் மீனும், இறைச்சியும்

* * *

''விலைவாசி ஏறிடுச்சு உண்மைதான். அதுக்காக இப்படியா?''

''என்னாச்சு?''

''தாம்பூலப் பையில தேங்காய்க்குப் பதில் தேங்காய் சில்லை போட்டிருக்காங்க!''

— பஞ்சவர்ணமகன்





"நமது தங்க தலைவி! புரட்சி தெய்வம்! கட்சிக் காரர்கள் யாரும் தனக்கு துதி பாடக் கூடாது என்ற கட்டளையிட்டுள்ளார்கள்! அந்த பாரதத் தாயின் அன்பு கட்டளையைப் பாதம் தொட்டு ஏற்றுக் கொள்கிறோம்!"

— பட்டுக்கோட்டை அழகன்

காய்ச்சினாலும் இவள் தவறாமல் கோவிலுக்கு போய் வந்தாள். சமையல் பாத்திரங்கள், அடுப்பு கூட வேறாகிவிட்டது. நோன்பு இருந் தாள். நெய் மணக்க பால்சோறு பொங்கிப் படைத்தாள். 'பாற்சோறு மூட நெய்பெய்து முழங்கை வழிவாரக் கூடியிருந்து' நாங்கள் சாப் பிட்டோம். ஒன்றுமே நடக்காத மாதிரி கொஞ்ச காலம் எங்களை இப்படி ஏமாற்றிக் கொண் டோம்.

வாரங்கள் பல ஓடிவிட்டன. சரசக்காவைப் பார்க்க முடியவில்லை. வாசலையே பார்த்தபடி தன் வாழ்நாளைக் கழித்தாள். வெயிலில் எறிந்த கீரைத்துண்டுபோல அவள் முகம் வதங்கி விட்டது. அனிச்சம்பூ மனம்கொண்ட அக்கா உடும்பு மாமிசம் சாப்பிடும் இந்தக் கோழை யிடம் மனதைப் பறிகொடுத்து இப்படி உருகிக் கொண்டு போனாள். என்னதான் நான் அக்கா விடம் அன்னியோன்யமாகப் பழகினாலும் அவளுடைய உள்மனத்தில் என்ன இருந்த தென்று எனக்குத் தெரியவில்லை.

இந்த சமயத்தில் நாங்கள் எதிர்பார்த்தது நடந்தது. ஒரு நாள் மச்சானுக்கு 'எழுத்து' முடிந்துவிட்டது. துள்ளித் திரிந்து என்னுடன் எப்பவும் சண்டை போடும் அக்கா மறைந்து போனாள். ஏக்கப் பெருமூச்சு அடிக்கடி விட்ட படியே இருந்தாள். கொக்கான் விளையாட்டி லும், தாயம் விளையாட்டிலும் என்னிடம் தோற்றாள்.

மாமரத்திலே ஆணி அடித்து அதிலே கட்டிய சணல் கயிறு இன்னமும் தொங்கிக் கொண்டு இருந்தது. நானும் அக்காவும் எங்கள் கல்லிலே உட்கார்ந்து பலப்பல கதைகள் பேசினோம். கிணற்றிலே வளர்க்கும் பால் ஆமை ஆணா பெண்ணா என்பதைப் பற்றி விவாதித்தோம். அணில்பிள்ளையின் சத்தம் கேட்கும் போதெல்லாம் தகரத்தை அடித்து மாங்காய்களைக் காப்பாற்றினோம். அப்பொழு தெல்லாம் சரசக்காவிடம் மச்சானைப்பற்றிக் கேட்க வேண்டும் என்று வாயைப் பலமுறை உன்னினேன். ஆனால் முடியவில்லை. அவள் மெல்லிய குரலில் பாடத்தொடங்கினாள்.

நேற்றந்தி நேரத்திலே
நீராடும் துறைதனிலே
நெருங்கி எனை ஜாடைகாட்டி
அழைத்தவர் யாரோ?

கடைசி வரியில் சரசக்காவின் குரல் உடைந்துவிட்டது.

பாதி கிழிந்துபோன கவிதை எவ்வளவு அழ கானது. மீதியிலே என்ன சொல்லியிருக்கும் என்பது தெரியாது. அதை எப்படி வேண்டு மானாலும் கற்பனையில் பூர்த்தி செய்து கொள்ளலாம். இது ஏன் அக்காவுக்குத் தெரிய வில்லை? தண்ணீரைக் குவித்து வைக்க அல்லவா முயற்சி செய்து கொண்டிருந்தாள்! பெரும் யாகம் செய்து கிட்டிய அவிப்பாகத்தை யாரும் கழுதைக்குப் போடுவார்களா? என் அக்காவின் வாசனையைக் கெடுத்து பழந் துணிபோல வீசிவிட்டார்கள் என்று எனக்குப் பட்டது.

அன்று அம்மன் கோவில் திருவிழா. எல் லோரும் திருவிழாவுக்குப் போய்விட்டார்கள். நான்தான் அக்காவுக்குக் காவல். மாமரக்கிளை யில் சந்திர ஒளிபட்டு சிதறி விழுந்தது. விளக்கை மாடத்தில் வைத்துவிட்டு நாங்கள் திண்ணையில் இருந்து வாண வேடிக்கைகளை யும், மத்தாப்பு வெடிகளையும் பார்த்துக் கொண்டிருந்தோம். மத்தாப்பு உயரத்தில் போய் வெடித்து விரியும் போதெல்லாம் அக்காவின் முகம் ஒருகணம் பிரகாசமாகி மறையும். இப் படி அன்னியோன்யமாக நாங்கள் இதுக்கு முன்பு இருந்ததில்லை. மோகனமான அந்த இரவில் அவள் முகம் பார்க்க சோகமாகவும், பாவமாகவும் இருந்தது.

சரசரவென்று ஓர் உடும்பு எங்களைத் தாண்டி ஓடியது. இப்படியான சந்தர்ப்பம் இனிமேல் கிடைக்காது. கனகாலமாகக் கேட்க நினைத்ததை துணிந்து அக்காவிடம் நான் கேட்டு விட்டேன்.

"அக்கா, இந்த மச்சான் இப்பிடி செய்திருக் கக்கூடாது."

முதல்தரமாக இப்போதுதான் நான் என் மனத்தில் கிடந்ததை வெளியில் சொன்னேன்.


'போடா, பரவாயில்லை. உடும்புகளுக்கெல் லாம் நல்ல காலம்' என்று சொல்லிவிட்டு ஒரு சிரிப்பு சிரித்தாள். சத்தமில்லாத சிரிப்பு. அவள் முகத்தில் கொஞ்சமும் கவலை தென்பட வில்லை. உண்மையில் பார்த்தால் ஒரு நிம்மதி தான் தெரிந்தது.

குருவேயோக

20

சமகம் என்கிற மந்திரத்திலே உயர்ந்த விஷயம் சொல்லப்படுகிறது - நாம் இந்த லோகத்தில் ஐதிகமாய் அடைய விரும்புகிற பலன்களை யெல்லாம் பிரார்த்திக்கிறது அந்த மந்திரம்.

சம் என்றால் 'மங்களம்' என்று அர்த்தம். நம் கிரஹத்திலே, நம்மைச் சேர்ந்தவர்கள், இந்த உலகில் உள்ளவர்கள் எல்லோருக்கும் மங் களம் ஏற்பட வேண் டும் என்று கேட்கிறது சமகம்.



யக்ஞம் பண்ணும்போது, 'எனக்கு மங்களம் உண்டாகட்டும்' என்று அதை ஓதி பிரார்த்தனை பண்ணப்படுகிறது. யக்ஞம் செய்பவர்களுக்கு மட்டு மில்லை... யக்ஞத்தை சேவிக்க வருகிறவர்கள் - அந்த பூர்ணா ஹுதியை சேவிக்கக்கூடிய வர்கள் அத்தனை பேருக்கும் அந்த மங்களமானது ஏற்படு கிறது.

நமது எண்ணங்களெல் லாம் ஈடேற வேண்டும்; நல்ல ஐசுவர்யமானது இதன் மூலம் கிடைக்க வேண்டும். பரம மங்களம் நமக்கு ஏற்பட வேண் டும்... அது மட்டு மல்ல... உயர்ந்த தான தர்மத்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

தின் பொருட்டு செலவழிப்பதற்காக திரவியம் கிடைக்க வேண்டும். லோகத்துக்கெல்லாம் க்ஷேமமானது ஏற்பட வேண்டும். அதற்கும் மேல், அந்ருதமான வாக்கு இல்லாமல், சத்ய வாக்கே ஏற்பட வேண்டும். அதற்கும் மேல், உயர்ந்ததாய் இருக்கும்படியான, நல்ல பலமும் புஷ்டியும் தேஜஸும் பூரணமான ஆயுளும், அதற்கு மேல் நல்ல நாளாகவும் நல்ல விடியற் காலையாகவும் எனக்கு அமைய வேண்டும்... என்று இந்த மந்திரமானது முடிகிறது.

– இதையெல்லாம் யாரிடத்திலே இந்த மந்திரம் கேட்கிறது என்று பார்த்தால் அக்னியையும் விஷ்ணுவையும் பார்த்துக் கேட்கிறது.

அக்னி ஜொலித்துக் கொண்டிருக்கிறான். நேரே பிரத்யக்ஷமாக அக்னியை நாம் பார்க்கிறோம். விஷ்ணு, அக்னியிலே இருக்கிறான். ஆனால், நம் கண்ணுக்குத் தெரிவதில்லை!

இன்னொரு இடத்தில் வேதம் சொல்கிறது : 'அக்னியானவன் கடைகோடி தேவதை; விஷ்ணுவானவன் பரமான தேவதை...' 'அக்னி கோடி, விஷ்ணு பரம:' என்கிறது. அக்னி முதலாக, விஷ்ணு பர்யந்தம்...' என்று பொருள்.

கர்மகாண்டத்தில், யக்ஞ பிரவரணத்தில், இப்படி அக்னியையும் விஷ்ணுவையும் பிரார்த்தித்து, 'நீங்கள் இரண்டு பேரும் ஒன்றாக வரவேண்டும். இந்த ஆஜ்யம் – நெய் – இருக்கிறதே, அது அறுபடாமல் சந்தத தாரையாக அக்னியிலே விழுகிறது: அதைப் போல் நமது எண்ணமும் அறுபடாமல் இருக்கும். நமது கோரிக்கைகளும் அறுபடாமல் இருக்கும். அப்படி நெய், அக்னியிலே விழுகிற போது பிரார்த்திக்கிற மந்திரம் – அக்னியையும் விஷ்ணுவையும் பிரார்த்திக்கிற மந்திரம்



கர்ம காண்டத்தில் வருகிறது.

இதே கருத்தை பிரும்மாத்மகமாகவும் பிரும்ம காண்டத்தில் சொல்லியிருக்கிறது. பிரும்மாத்மகம் என்றால், பிரும்மத்தைக் குறித்துப் பேசக்கூடியதாக என்று பொருள். அப்படிப்பட்ட பிரும்ம காண்டத்தை ஞான காண்டம் என்றும் சொல்லுவதுண்டு. பிரும்ம காண்டத்தில் உபநிஷத்தில் போய்ப் பார்த்தோமானால், கௌஷீதகீ உபநிஷத் என்கிற உபநிஷத்தில் அர்ச்சிராதி மார்க்கம் என்றொரு மார்க்கம் – அது சுக்ல மார்க்கம். அதாவது உயர்ந்ததான – வெண்மையான மார்க்கம்; வைகுண்டத்துக்கு அழைத்துச் செல்லும் மார்க்கம்.

அந்த மார்க்கத்தைக் கடைப்பிடித்தால் நேரே வைகுண்டத்துக்குப் போகிற வழிதானே யொழிய திருப்பி அந்த மார்க்கத்தில் வரமுடியாது! அப்படிப்பட்ட ஏற்றமுடைய மார்க்கம் அது.

அந்த மார்க்கத்திலே யார் முதலில் இருக்கிறார் என்றால்..., அர்ச்சி :

அதனால்தான் அது அர்ச்சிராதி (அர்ச்சியை ஆதியாகக் கொண்ட) மார்க்கம்.

அர்ச்சி என்பது அக்னிக்குப் பெயர். அதில் எத்தனையோ தேவதைகள் இடையிடையே வருகிறார்கள். சுக்ல பக்ஷ தேவதை, கிருஷ்ண பக்ஷ தேவதை, பகலுக்கு உரிய தேவதை, சூர்ய மண்டலத்துக்குரிய தேவதை, சூர்ய மண்டலத்தைத் தாண்டி விரஜா நதி என்று ஒரு நதி... அதையும் தாண்டி மேலே போனால் வைகுண்டம். அமிர்தமயமான விரஜா நதியினால் சூழப்பட்டதான திவ்ய லோகம். அயோத்யா – அபராஜிதா என்று சொல்லக் கூடிய இடம். நாராயண உபநிஷத் சொல்கிறது. துக்கமே கலப்பில்லாத, பரிபூரண ஆனந்தானுபவம் கிடைக்கும்படியான உயர்ந்த இடம்.

அந்த வைகுண்டத்திலே, பகவான் வீற்றிருந்த திருக்கோலத்திலே ஸ்ரீதேவி – பூதேவி – நீலாதேவி சமேதனாய், நித்ய சூரிகள் சேர்ந்து அவனை விசேஷமாக ஆராதிக்க, முக்த புருஷர்களெல்லாம் அவனை சேவித்துக் கொண்டிருக்கிறார்கள். இமை கொட்டுதல் யார்...? விஷ்ணு : பரம : அக்னிரவம : !

அர்ச்சிராதி மார்க்கத்திலே பார்த்தோமானால், அக்னியானவன் கடைகோடி தேவதை. அக்னியிலே ஆரம்பித்து நாம் அடைய வேண்டிய இடத்தை அடைந்தோமானால் அங்கே விஷ்ணு இருக்கிறான். அந்த திவ்ய லோகத்திலே பகவான் இப்போதும் விளங்கிக் கொண்டிருக்கிறான்.

விசேஷமான திருமேனி பகவானுக்கு. நம் போல் துர்கந்தகருக்கு இருப்பிடமான சரீரம் இல்லாத திருமேனி! ஆனால், ரொம்ப அழுக்கான இந்த உடம்பைத்தான் நாம் 'திருமேனி பாங்கா?' என்கிறோம்!

க்ஷணே க்ஷணே க்ஷீணத்தை அடையக் கூடியது நம் தேகம். நேற்று போல் இன்று இருக்காது. 'முகம் வாட்டமாக இருக்கிறதே, உடம்பு சரியில்லையா...?' என்கிறோம்! அப்படி மாறுபட்டுக் கொண்டேயிருக்கிறது – விகாரத்துக்கு உட்பட்டது நம் உடம்பு. ஆனால் பரிபாஷையாக நாம் கேட்பதென்னவோ 'திருமேனி பாங்கா?...'!

'உடல் நலமா?' என்று தூய தமிழிலோ

'அபி குசலம்?' என்று வடமொழியிலோ...

எப்படிக் கேட்டாலும் என்ன பொருள்...?

'அழியக்கூடிய வஸ்து சௌக்கியமா என்றுதான் அர்த்தம்!

– இப்படியெல்லாம் நமக்குக் கிலேசங்கள்! ஆனால் பகவானுக்கு அதெல்லாம் கிடையாது. திவ்ய மங்கள ஸ்வரூபம் அவனுடையது.

அந்த திவ்ய மங்கள ஸ்வரூபியைத்தான் கௌசிதகீ உபநிஷத்தில் பிரார்த்தித்து, 'என் கோரிக்கைகளையெல்லாம் நீ நிறைவேற்ற வேண்டும்' என்று வேண்டப்படுகிறது.

ஆகவே, கர்ம காண்டமாய் இருக்கட்டும், பிரும்ம காண்டமாய் இருக்கட்டும்... எங்கு போய்ப் பார்த்தாலும் அதே விஷ்ணுதான் தெரிகிறான்.

சர்வத்ர ரக்ஷகனாக, சர்வதா ரக்ஷகனாக இருக்கிறான்.

நாம் பித்ரு காரியங்களெல்லாம் பண்ணுகிறோம். சிராத்தம் என்கிறோம்.

சிரத்தையா தீயதைதி சிராத்தம். சிரத்தையோடு பண்ணக்கூடியது சிராத்தம். அசிரத்தையாகப் பண்ணக்கூடாது! எந்த காரியத்திலும் அசிரத்தை கூடாது. அதிலும் சிராத்த காரியத்தை ரொம்ப சிரத்தையாகப் பண்ண வேண்டும்.

அப்படி ஒருத்தர். ஏகப்பட்ட சிரத்தை

"மானேஜர்கிட்ட எதுக்குடா சண்டை போட்டே?"

"பின்ன என்ன... நான் லேட்டா வரேங்கறதுக்காக அடெண்டன்ஸ் ரிஜிஸ்தர்ல 'Late Ravi'ன்னா பேர் எழுதறது?"

– தாகூர் எஸ். ரமேஷ்



யோடு சிராத்தம் செய்யும் வழக்கம் அவருக்கு. பூர்ணாக்னி ஹோத்ரியாக, பூரணமான பாண்டித்யம் உடையவர்களைத்தான் சிராத்த தினத்துக்கு போக்தாவாக வரிப்பார் அவர். அப்படியொருத்தர் அகப்படாவிட்டால், திதியாக இருந்தாலும் அன்றைய தினம் சிராத்தத்தை விட்டுவிடுவார்! என்றைக்கு அவர் தேடும் தகுதியோடு ஒரு போக்தா கிடைக்கிறாரோ, அன்றைக்கு செய்வார் சிராத்தத்தை! திதி மாறிப் போனாலும் பரவாயில்லை என்று பண்ணுவார்!

இப்படிச் செய்து வந்தவரின் கிரஹத்துக்கு ஒருத்தர் வந்தார். அவரைப் பார்த்தால் மஹாதேஜஸ்வியாக இருக்கிறார்! உடனே இவர் முடிவு பண்ணிவிட்டார். சிராத்தத்துக்கு அவர்தான் போக்தராக இருக்கவேண்டும் என்று.

"இன்றைய தினம் சிராத்தம் பண்ணுகிறோம். உம்மைப் பார்த்தால் பிரும்ம தேஜஸ் சொட்டுகிறது. நீர்தான் போக்தாவாக இருக்க வேண்டும்."

அவரும் 'சரி' என்றார். சிராத்தம் நடந்து கொண்டிருக்கிறது... போக்தாவானவர் இவருடைய சிரத்தையைப் பார்த்து ஆச்சர்யப்படுகிறார். 'இந்த சிராத்தம் எப்போது முடியுமோ...' என்று அலுப்போடு அல்லாமல் 'சிரத்தையா தீயதைஹி சிராத்தம்' என்பதற்கேற்ப சிராத்தம் பண்ணுகிறார்.

கடைசியில் பிண்டப் பிரதானம் பண்ண வேண்டிய சமயம். சிராத்தம் பண்ணுகிறவர் பிண்டத்து மேலே எள்ளையும் தீர்த்தத்தையும் சேர்த்து கட்டை விரலால் திருப்பி விட வேண்டும். அதற்காகப் பிண்டத்தை வைத்து, எள்ளையும் கையிலே ஒத்திக் கொண்டாயிற்று... தீர்த்த பாத்திரத்தை எடுத்துக் கவிழ்க்கிறார் சிராத்தம் செய்பவர்...

அந்த நேரத்தில், எதிரே சாப்பிட உட்கார்ந்திருந்த போக்தா, அந்த தீர்த்த பாத்திரத்தைப் பார்த்து சமிக்ஞை காட்டுகிறார். உடனே ஜலம் விழாமல் நின்று போகிறது.

இப்படிப் பார்த்து, அப்படிப் பார்த்து, அவரால் ஒன்றும் பண்ண முடியவில்லை! திரவ வடிவமான ஜலம் திட வடிவமாக மாறிப் போய்விட்டது!

நடுங்கிப் போனார் அவர். எதிரே இருந்த போக்தாவைப் பார்த்துக் கை கூப்பினார்.

"நீர் என்ன... சிராத்தம் மிக சிரத்தையாகத்தான் பண்ணுகிறீர். ஆனால், அந்த சிராத்தத்தில் இந்த மாதிரி கோரிக்கை உமக்கு இருக்கிறதே; அது நியாயமோ? நீர் எதிர்பார்க்கிற பூர்ணாக்னிஹோத்ரிகள் எப்போதும் கிடைப்பார்களா...? காயத்ரியை ஜபிக்கக்கூடிய ஒருவரை வரித்தால் அந்த சிராத்தம் பரிபூர்ணமாக ஆகுமே... விடாமல் சந்தியாவந்தனம் பண்ணக்கூடிய ஒரு மகானை வரித்தால் அந்த சிராத்தம் பூர்த்தியாகுமே. அதை விட்டுவிட்டு இப்படியெல்லாம் தேடிக் கொண்டிருக்கிறீரே... இது நியாயமா?"

அப்போதுதான் அவருக்கு விஷயம் புரிந்தது. சர்வ வேத சார காயத்ரியை ஜபிக்கக் கூடிய மகான்கள் அல்லவோ உத்தமர்கள். அப்படிப்பட்டவர்களை வரிக்க வேண்டும் என்று அன்றைக்கு அவருக்குத் தோன்றியது.

"இனிமேல் அப்படியே பண்ணுகிறேன்" என்றார். அவர் அப்படிச் சொன்னதுமே, விழாமல் பாத்திரத்தோடு நின்ற ஜலம் விழ ஆரம்பித்தது!

ஒரு க்ஷணம் ஜலத்தை விழ விடாமல் பண்ணியவர் ஆனதாலே அந்த போக்தாவுக்கு ஆபஸ்தம்பர் என்று பெயரானது – (ஆப: ஜலம். அதை ஸ்தம்பிக்கச் செய்தவர் ஆபஸ்தம்பர்)



"ஆட்டோ ரிக்ஷா ஓட்டினவர்தான் இப்ப போலி டாக்டரா இருக்காருன்னு எப்படி சொல்றே?"

"தெர்மா மீட்டருக்கு மேலே ஏதாவது போட்டுத் தரச் சொல்றாரே!"

– பாலு

இப்படி சிரத்தையாகப் பண்ணக்கூடிய சிரார்த்தத்திலே யாரை வரிக்கிறோம் என்று கேட்டால், சிராத்த சம்ரக்ஷகனான ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத்தான்!

முதலில் இந்த பித்ரு காரியமானது நல்லபடியாக நடக்க வேண்டும் என்பதற்காக அவனை வரிக்கிறோம். அப்புறம் அவனே கவ்யத்தை ஏற்கிறான்.

ஹவ்ய கவ்ய போக்தா என்று அவனுக்குப் பெயர்


ஹவ்ய – ஹோமம், யக்ஞாதிகளில் அளிக்கப்படும் ஹவிஸ்.

கவ்ய – பித்ரு காரியங்களில் அளிக்கப்படுவது. – இரண்டையும் கவீகரிக்கிறான்.

எனவே சிராத்தத்தைப் பூரணமாக நடத்திக் கொடுப்பவன் விஷ்ணு.

(தொடரும்)

மனிதா, நீ மகத்தானவன்!



"நீங்க தமிழன்தானே! தமிழ் பேசற இந்தியன்னு சொல்லாதீங்க. பல தடவை கேட்டாச்சு..." என்று கேட்டாள் குந்தவை.

என்ன பதில் சொல்வதென்று பிரகாஷிற்குத் தெரியவில்லை. நான் தமிழனா? அப்பா தமிழனா?

பிரகாஷ் பிறந்தது ஆஸ்திரேலியாவில். அப்பாவிற்குப் பூர்வீகம் திருநெல்வேலி. பிரகாஷ் போனதில்லை. அம்மா பிறந்து வளர்ந்தது எல்லாம் மெல்போர்ன்தான். அப்பா வேலைக்கு வந்த இடத்தில் கல்யாணம். அப்பா வைத்திருப்பது ஆஸ்திரேலியன் பாஸ்போர்ட். பிரகாஷும் ஆஸ்திரேலியன் பாஸ்போர்ட்தான் வைத்திருக்கிறான். அப்பாவிற்கு ஆயில் பைப் லைன் இன்ஸ்டலேஷன்தான் வேலை. இரண்டு வருடத்திற்கு மேல் ஒரு நாட்டில் இருந்ததில்லை. அலாஸ்காவில் இரண்டு வருடம் முடிந்தவுடன், நைஜிரியாவிற்குப் போக வேண்டும். நைஜீரியாவில் இருக்கும்போதே, ஈரானிற்கு மாற்றுவார்கள். எங்கெங்கு புராஜெக்ட் இருக்கிறதோ, அங்கெல்லாம் பறந்து கொண்டிருப்பார். பிரகாஷிற்கு எந்த நாட்டின் மேலும் ஒட்டுதலில்லாமல் போனது. அப்பாவிடம் கேட்டால்,


"ஐ டோன்ட் பிலாங் டு எனி கன்ட்ரி. ஜஸ்ட் ஐ பிலாங் டு த பிளானட் கால்டு எர்த்!" என்பார்.

அப்பாவைப் பொறுத்த மட்டில் ஆஸ்திரேலியன் பாஸ்போர்ட் என்பது ஒரு டிராவல் டாக்குமென்ட். அவ்வளவுதான்.

"நம்மநாடு எதுப்பா?" என்று ஒருமுறை கேட்டான்.

"நாடுங்கறதே மாறிக் கொண்டிருக்கும் கான்சப்ட். பல நூறு வருஷத்திற்கு முன்னால் இந்த ஆஸ்திரேலியா கிடையாது. அது ஏன்? இந்தியா கிடையாது. தமிழ்நாடு கிடையாது.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு ரூ. 2000 பெறும் கதை.



அப்ப எங்க முன்னோர்கள்ல ஒரு ஆளு திருநெல்வேலியிலிருந்து போய், சீர்காழியில் ஒரு பெண்ணை தூக்கிட்டு வந்துட்டாரு. அது அந்தக்காலத்தில் பெரிய விஷயமாகப் பேசப் பட்டது. உனக்குத் திருநெல்வேலியும் தெரியாது. சீர்காழியும் தெரியாது. மிஞ்சிப் போனால் ஐநூறு கிலோமீட்டர் இருக்கும். இன்னிக்கு நான் மெல்போர்ன்ல ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணும்போது, வேற நாடாக அவங்களுக்குத் தோணுது. இன்னும் பல நூறு வருஷம் கழித்துப் பார்த்தால், தப் பாகத் தோணாது. வி ஆர் மூவிங் டுவர்ட்ஸ் இன்டர் நேஷனலிசம். க்ளோபல் காரியர், க்ளோபல் எக

ட்ரிங்ஸும் இல்லாத பார்ட்டிகள் இவனுக்கு பிடிப்பதில்லை. சில இந்திய நண்பர்களின் பார்ட்டிக்குப் போயிருக்கிறான். முதலில் ஒரு மணி நேரம் அரசியல் பேசுவார்கள். பிறகு சாப் பிடுவார்கள். பிறகு ஒரு மணி நேரம் சினி மாவைப் பற்றிப் பேசுவார்கள். பிரகாஷிற்கு அரசியல் தெரியாது. சிதம்பரம் என்று ஊரைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தால், சிதம்பரம் அமைச்சர் என் பார்கள். காசி என்று ஆளைப் பற்றிப் பேசு கிறார்கள் என்று நினைத்தால், அது ஊர்ப் பெயர் என்பார்கள். மெல்லிய வெளிச்சத்தில், நல்ல இசையுடன், சரியாகக் கலந்த மதுவுடன், சின்ன டான்ஸ் இருக்கும் பார்ட்டிகள்தான் பிடிக்கும். படித்து முடித்தவுடன் குவைத்தில் வேலைக்குச் சேர்ந்தான். இரண்டு வருடமாக செல்வநாயகத்தை நல்ல பழக்கம். இவனுக்கு புராஜெக்ட் லீடராக இருந்தார். பல உதவிகள் செய்திருக்கிறார். அதனால் அவர் கூப்பிட்ட தால் பார்ட்டிக்கு வந்தான். மேலும் ப்ராஜெக்ட் முடிந்து கடைசி பார்ட்டி. பேச ஆளில்லாத தால், குந்தவைதான் கம்பெனி.

"எனக்கு யாழ்ப்பாணம். இப்ப பிரச்னை அதிகமானதால, கொழும்பு வந்துட்டோம். செல்வநாயகம் என்னோட மாமா."

"ஆமா, ஸ்ரீலங்காவில ஏதோ பிரச் னைன்னு..."

"ஏதோ பிரச்னையா? நீங்க தமிழன்தானே என்று குந்தவை கோபமாகக் கேட்டாள்.

அமெரிக்காவில் பரபரப்பு! அகதியை மணந்தார் வாலிபர்!!

...னாமி. க்ளோபல் கல்ச்சர்.... வந்துவிட்டது. உலகம் ஒரு கிராமமாக சுருங்கி விட்டது."

அப்பா அடிக்கடி சொல்வார். அதனால் தான் பிரகாஷிற்கு 'தமிழனா?' என்ற கேள்விக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. பிரகாஷிற்கு தமிழ் பேசத் தெரியும். எழுதப் படிக்கத் தெரி யாது.

"ஜஸ்ட் ஐ பிலாங் டு த பிளானட் கால்ட் எர்த்" என்றான். குந்தவை சிரித்தாள்.

செல்வநாயகம் பார்ட்டிக்கு கூப்பிட்ட போது, பிரகாஷ் யோசித்தான். டான்ஸும்,

பிருதிவிராஜ்

பிரகாஷ் அதற்குத்தான் அப்படிப் பதில் சொன்னான். பிறகு குந்தவை அவள் நாட்டுப் பிரச்னை குறித்து ஏதோ சொல்லிக் கொண் டிருந்தாள். பிரகாஷிற்கு ஒன்றுதான் புரிந்தது. அங்கு மனித உயிர்களுக்கு மதிப்பில்லை யென்று. பிரகாஷ் யோசித்துக் கொண்டிருந் தான்.

செல்வநாயகம் புராஜெக்ட் லீடர் என்ற முறையில் பேச ஆரம்பித்தார். சம்பிரதாயமான வாசகங்கள். "நாளை மறுநாள் பைனல் இன்ஸ் பெக்ஷன். அத்தோடு முடிந்தது. நம்ம நல்ல டீம் பிரிகிறோம். இனிமேல் இந்த மாதிரி புரா ஜெக்ட் கிடைத்தால் உங்களைத் தொடர்பு கொள்கிறோம்" என்றார்.

ஒவ்வொருவரும் பேசினார்கள். செல்வ

நாயகம் பிரகாஷிடம் வந்தார்.

"பிரகாஷ் என்ன பண்ணப் போறே?"

"ஏற்கெனவே சொன்னேனில்லையா! எனக்கு யு.எஸ்.ல் ஓக்லேண்ட் யுனிவர்சிடில எம்.எஸ் அட்மிஷன் கிடைச்சிருக்கு. ஸோ, இரண்டு வருஷம் மீண்டும் ஸ்டூடண்ட்."

"வெரிகுட். எந்த ஸ்டேட்?"

"மிச்சிகன். டெட்ராய்ட் சிட்டி."

"ஓஹோ. வோர்ல்ட் ஆட்டோ காப்பிடல். வெரிகுட். எனக்கு பாங்காக்ல ஒரு பெட்ரோலியம் கம்பெனியில் வேலை கிடைச்சிருக்குது."

"அப்படியா! ரொம்ப சந்தோஷம்."

"பிரகாஷ் டெட்ராய்ட் கனடா பார்டர்ல தானே இருக்குது?" என்றபடி யோசித்தார். "நாளைக்கு டின்னருக்கு வாயேன்" என்றார்.

"சார். இப்பத்தானே டின்னர் கொடுக்க றீங்க."

"இல்லை. நாளைக்கு உன்னிடம் முக்கியமான விஷயம் பேசவேண்டும்."

அது இத்தனை முக்கியமான விஷயமாக இருக்கும் என்று பிரகாஷ் அப்போது எதிர் பார்க்கவில்லை.

மறுநாள் செல்வநாயகம் வீட்டிற்குப் போனான். சாப்பிட்டுக் கொண்டே பேச ஆரம்பித்தார்.

"நீ நேத்து மீட் பண்ணினேயே, குந்தவை அவள் என்னோட நெருங்கின சிநேகிதரோட பொண்ணு. அவளோட அம்மா ரொம்ப நாளுக்கு முன்னால இறந்து போயிட்டாங்க. ஒரே அக்கா. அவள் இப்ப கனடாவில், டொரன்டோ சிட்டியில இருக்கிறாள். என்னோட சிநேகிதர், இவளுடைய அப்பா போன மாதம் இறந்து போய்விட்டார்."

"அடப்பாவமே!"

"இப்ப குந்தவைக்கு யாருமில்லை."

"கனடாவில இருக்கிற அக்கா!"

"அவள் இப்ப அகதி ஸ்டேடஸ்லதான் கண்டாவில் இருக்கிறாள். கேஸ் முடியற வரைக்கும் அவளால் வெளியே வர முடியாது. அதனால அவ வந்து குந்தவையை அழைத்துக் கொண்டு போக முடியாது."

"என்ன கேஸ்?"

"அதாவது நீ கனடாவிற்கு அகதியாக நுழைந்தால், நீ உண்மையில் அடைக்கலம் தரப்பட வேண்டிய ஆள்தானா? என்று கனடா அரசாங்கம் விசாரிக்கும். அந்த கேஸ் முடியும் வரை நீ வெளியே போகக் கூடாது. நாட்டை விட்டு வெளியே போனால், கனடா அரசாங்கம் உன்னை மீண்டும் உள்ளே விடாது. அதனால அவங்க அக்கா வெளியே வந்து இவளைக் கூட்டிக் கொண்டு போக முடியாது. குந்தவை அவங்க அக்காவிடம் போய் சேர வேண்டும். கனடா பார்டருக்குப் போய், பாஸ்போர்ட்டைத் தூக்கி எறிந்துவிட்டு அகதியாக கனடாவிற்குள் நுழைய வேண்டும். அந்தப் பக்கம் அவளுடைய அக்கா வந்து கூட்டிக் கொண்டு போய்விடுவாள்!"

"அதுசரி! கனடா பார்டர் வரை எப்படி போவீங்க? அதுக்கு யு.எஸ். விசா வேணுமே!" என்று பிரகாஷ் புத்திசாலித்தனமாகக் கேட்டான்.

"அதுக்குத்தான் உன்னோட உதவி தேவை." என்றார் செல்வநாயகம்.

"நான் என்ன செய்ய முடியும்?"

செல்வநாயகம் சிறிது தயங்கினார். பிறகு சொன்னார்.

"உனக்கு யு.எஸ் விசா இருக்கிறது. அதுவும் ஸ்டூடண்ட் விசா. உன்னோட மனைவின்னு சொல்லி கூட்டிக் கொண்டு போவது ஒன்றும் கஷ்டமான காரியமல்ல."

"என்னது?" பிரகாஷ் அதிர்ந்து கேட்டான்.

"அநாதரவாக இருக்கற ஒரு பொண்ணு. இதனால் நீ ஒன்றும் கஷ்டப்படப் போவதில்லை. மத்த எல்லாச் செலவும் நான் பார்த்துக் கொள்கிறேன். ஒரு பொண்ணு தன் அக்காவிடம் போய்ச் சேருவதற்கு, நீ செய்கின்ற மிகப் பெரிய உதவி. முற்றிலும் மனிதாபிமான அடிப்படையில்தான், இந்த உதவியை நான் கேட்கிறேன்."

நீண்ட யோசனைக்குப் பிறகு பிறகு ஒரு முடிவு செய்தான்.



"நம்ம தலைவர் உண்மையான அரசியல்வாதி இல்லைன்னு எப்படி சொல்றே?"

"பின்னே! அவர் கைதாகி ஒரு வாரமாகப் போகுது. இன்னும் ஒரு தடவை கூட நெஞ்சு வலியே வரலியே!"

— பச்சை மணிமைந்தன்

"டேய் ஒரு மைக்டைசன் ஜோக் சொல்லட்டுமா?"
"அதென்னடா ஜோக்?"
"கடி, ஜோக்தாண்டா!"
— ஆர். கோபாலான்



மறுநாள் செல்வநாயகத்திடம், 'குந்தவையை அழைத்துக் கொண்டு போகிறேன்' என்று சொன்னான். அவர் ரொம்ப சந்தோசப் பட்டார். எல்லா ஏற்பாடுகளும் செய்தார். டாக்குமென்ட்களைத் தயார் பண்ணினார். படிக்கப் போகும் மாணவனின் மனைவி என்ற ரீதியில் விசா உடனடியாக வழங்கப்பட்டது. இதற்கிடையில் செல்வநாயகம் பாங்காக் போவதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்தார். கனடாவிலிருக்கும் குந்தவையின் அக்கா அட்ரஸ், டெலிபோன் நம்பர் கொடுத்தார், போனவுடன் செய்ய வேண்டிய விபரங்கள் எல்லாம் பெற்றுக் கொண்டான். ஆனால் அவன் முக்கியமான ஒன்றை மறந்து போனான். அது செல்வநாயகத்தின் பாங்காக் டெலிபோன் நம்பர்.

டெட்ராய்ட் வந்து சேர்ந்தவுடன், ஒரு பிளாட் எடுத்தான். யுனிவர்சிடியில் ரிஜிஸ்தர் பண்ணினான். ஒரு வாரம் ஒரே அலைச்சல்.

"நம்ம அடுத்த ஸ்டெப் என்ன?" குந்தவையிடம் கேட்டான்.

"அக்காவிற்கு போன் பண்ணுங்க. அப்புறம் என்னை கனடா பார்டர்ல கொண்டு போய் விட்டுடுங்க" என்றாள் குந்தவை.

செல்வநாயகம் கொடுத்த நம்பருக்கு போன் பண்ணினான். யாரோ எடுத்தார்கள். அவர்களுக்குத் தமிழ் தெரியவில்லை. ஆங்கிலத்தில் பேசினான். பிறகு போன் வேறு யார் கைக்கோ மாறியது. அவர்கள் தமிழில்தான் பேசினார்கள். விபரத்தைச் சொன்னான்.

"சுபத்ராவைப் பற்றிக் கேட்கறீங்களா? எனக்கு எப்படிச் சொல்வதுன்னு தெரியவில்லை. ஐ யாம் வெரி சாரி. எங்களுடன்தான் தங்கியிருந்தார்கள். மூன்று நாளைக்கு முன்னால் ஒரு விபத்துல இறந்து விட்டார்கள். யாருமில்லாத அகதியாக வந்திருந்த காரணத்தால் நாங்க யாருக்கும் தகவல் சொல்லவில்லை"... என்று சொன்னபோது, பிரகாஷ் அதிர்ந்தான். குந்தவை உடைந்து போய் அழ ஆரம்பித்தாள்.

இருந்த ஒரே ஆதரவான அக்காவும் இறந்து போய்விட்டாள். குந்தவை என்ன செய்வாள்?

"பரவாயில்லை. பழைய பிளான்படி என்னை கனடா பார்டரில் விட்டுவிடுங்க. நான் தனியே போய் எப்படியாவது பிழைத்துக் கொள்வேன்!" என்றாள். பிரகாஷிற்கு மனசு கேட்கவில்லை. எப்படி ஒரு பெண்ணைத் தனியாக அனுப்புவது?

"மனிதா நீ மகத்தானவன்
மண்ணில் பரம்பொருளின் உருவானவன்"
என்ற பாடல் ஞாபகம் வந்தது.

குந்தவையைக் கைவிடுவதில்லை என்று முடிவு செய்தான். அவளை மீண்டும் இலங்கை அனுப்ப முடியாது. செல்வநாயகம் முகவரி தெரியாது. ஸ்டூடன்டின் மனைவி என்ற விசாவில் வந்திருப்பதால், அமெரிக்காவில் வேலை பார்ப்பது சட்ட விரோதம். யோசித்தான். முடிவெடுத்தான்.

"இப்ப இருக்கற சூழ்நிலையில, நாம சொன்ன பொய்யையே உண்மையாக்குவதுதான் ஒரே வழி. உனக்கும் பாதுகாப்பு. எனக்கும் மனதிருப்தி."

குந்தவைக்கு பிரகாஷ் சொன்னதன் அர்த்தம் புரிந்தது.

"சூழ்நிலையின் கட்டாயத்தால் நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வது, உங்கள் எதிர்கால வாழ்க்கையைப் பாதிக்கும்."

"அநாவசியமாகக் கவலைப்படாதே! இன்னிக்கு இது மனிதாபிமான அடிப்படையில் எடுக்கப்படுகிற முடிவுதான். ஆனால் அதற்காக உனக்கேதோ வாழ்வளித்த வள்ளல் மாதிரி நான் நடந்து கொள்ள மாட்டேன்."

"சே. சே. நான் அப்படிச் சொல்லவில்லை."

"நமக்குக் கல்யாணமாகி விட்டால், இரண்டு பேரும் நண்பர்கள்தான். அந்த மாதிரி ஒரு காம்ப்ளெக்ஸ் உனக்குத் தேவையில்லாதது. ஆனால் உனக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதம்தானே?"

"உங்களை மாதிரி ஒரு நல்ல மனுஷன், ஒரு தமிழன் எனக்குக் கிடைக்கறதுக்கு நான் ரொம்பக் கொடுத்து வச்சிருக்கணும்!"

"ஏய். டோண்ட் சே லைக் தட். ஜஸ்ட் ஐ பிலாங் டு த பிளானட் கால்டு எர்த்"... என்றான் பிரகாஷ்.

குந்தவை சிரித்தாள்.

ஆண் பாதி ஆடை பாதி என்று ஆரம்பித்தால் இந்தப் பக்கத்தைப் புரட்டி விடுவீர்கள். காலம் மாறிவிட்டது ஐயா. ஆள் கால்; ஆடை முக்கால் இன்று! இந்தியன் தாத்தாவும் சண்முகி மாமியும் கூட பார்க்கிறபடி இருப்பதற்குக் காரணம் அந்த கெட்-அப்! தோற்றத்தின் கவர்ச்சிக்கு ஆடைகளின் பங்கு என்பது ஒரு தீனிபோக்கான விஷயம். "ரொம்ப சாதாரணமான தோற்றம் உள்ளவரைக் கூட, அவரது நேர்த்தியான ஆடைகள் திரும்பிப் பார்க்கச் செய்யும்" என்கிற அரிய தத்துவத்தை நம்மிடம் சொன்னார், இந்தக் கட்டுரைக்காக நாம் சந்தித்த ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரிப் பெண்களில் ஒருவரான கஸ்தூரி விஸ்வநாதன்.





''வெறும் புடைவையாக இருக்கட்டும். அல்லது சுடிதாராக இருக்கட்டும்... அணிகிற விதத்தில் எந்தப் பெண்ணும் ஏஞ்சலாகத் தெரிவாள்'' என்று எதிர் தத்துவம் சொன்னவர், பிரஸிடென்ஸியின் தேவதாஸ்.

"இன்றைக்கு ரூபா நூறிலிருந்து தொடங்கி மூவாயிரம், நாலாயிரம் ரேட்டுக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் அழகிய உடைகள் வந்து விட்டன. (பட்டுப் புடைவைகள் விலக்கு.) விலைகொடுத்து வாங்குவது பொருட்டல்ல; ஒவ்வொருவரும் தமக்கேற்ற உடையைத் தேர்வு செய்வதன் மூலம் இளமையான தோற்றம் காட்டலாம்" என்றார் தி.நகர் நாயுடு ஹால் ஷோரூமின் விற்பனை


என்றும் இளமையாக இருப்பது எப்படி?

யாளர் ஒருவர்.

இவ்வாறாக, இளையதலைமுறையினருடனும் துணிக்கடைக்காரர்களுடனும் பேசிப் பேசி, தோற்றப் பொலிவுக்கு ஏற்ப ஆடைகளை எங்ஙனம் தேர்வு செய்வது என்று ஒரு சர்வே எடுத்தோம். ஆண், பெண், பெரிசு, சிறிசு, இளசு, இளவயதிலேயே பெரிசு போல் தெரிபவர்கள் என யாவருக்குமான டிப்ஸ் இங்கே :

● லேடீஸ் ஃபர்ஸ்ட். சுமார் இருபத்தைந்து வயதுக்குட்பட்ட பெண்கள் அதிகம் நாடுவது சுடிதார் என்று பரவலாகச் சொல்லப்படுகிற சல்வார் கம்மீஸ். (சுடிதாரின் கீழ்பாகம் டைட்டாக இருக்கும். இங்கே யார் அதை உபயோகிக்கிறார்கள்?) இந்தச் சுடி என்கிற சல்வார் கம்மீஸைத் தேர்வு செய்யும்போது பின்வரும் சங்கதிகளைக் கவனத்தில் கொள்ளவும்.

அ. குண்டான பெண்கள் இதை அவாய்ட் செய்து விடுங்கள். "குண்டு பெண்கள் சுடிதார் போட்டிருப்பதைப் பார்த்தால் அழுகை வருகிறது" என்று கோரஸாகச் சொல்கிறார்கள், பையன்கள். அது முடியாது என்று மறுக்கிற பெண்கள் டிஸைன் அல்லாமல் வெள்ளை, வெளிர் மஞ்சள் போன்ற நிறங்களைத் தேர்ந்தெடுங்கள். கொஞ்சம் பார்க்கபிளாக இருக்கிறதாம்!



ஆ. கண்ணாடி வேலைப்பாடுகள் கொண்ட சுடிதார் இப்போது அவுட் - ஆஃப் - ஃபேஷன். தொடாதீர்கள்.

இ. சுடிதாரின் மேல்துப்பட்டாவை பீடா கடையில் பான் பராக் தொங்க விட்டிருப்பது போல் தோளில் போடுவதைக் காட்டிலும் பரமசிவன் கழுத்துப் பாம்பு போல் சுற்றிப் போடுவது (மடிப்பு வேண்டாம். சும்மா கேஷுவலாக) கூடுதல் அழகு தரும்.

ஈ. சுடிதார் போடும்போது பின்னலை முன்புறம் தவழ விடுவது தேவதைகளின் ட்ரேட் மார்க் என்கிறார்கள் கல்லூரிப் பையன்கள்.

உ. மார்க்கெட்டில் பிரிண்டட் சுடிதார் எனச் சொல்லப்படும் வண்ணங்களை அள்ளித் தெளித்த ஆடைகள் வந்திருக்கின்றன. மாநிற மற்றும் கிருஷ்ணர் நிறப் பெண்கள் இவற்றின் மேல் மாளாக் காதல் நோய் கொள்வதைத் தவிர்த்தால் நலம். "நாங்களே அத்தகைய பெண்கள் வரும்போது இவற்றை அதிகம் சிபாரிசு செய்வதில்லை'' என்று

இளமைப் போட்டி — 2

என்றும் பதினாறாய் இருக்கும் எட்டெழுத்துக்காரரைக் கண்டுபிடிக்கச் சொல்லி, சென்ற வாரப் போட்டியில் கேட்டிருந்தோம்!

இந்த வாரக் கேள்வி : சுடிதார் போடும்போது பின்னலை முன்புறம் தவழவிடாமலே 'தேவதை'ப் பட்டம் வாங்கிய ஏழெழுத்துக்காரர் யார்?

விடையைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். இத்தொடரின் கடைசி அத்தியாயத்துடன் இடம்பெறும் கூப்பனில் எழுதி அனுப்பினால் பரிசுகள். என்ன பரிசுகள்? என்ன விதிமுறைகள்? விவரம் விரைவில்.

முதலாளிக்குத் தெரியாமல் சமூக சேவை செய்துவரும் கிருஷ்ணா - துளசி விற்பனையாளர் ஒருவர் சொன்னார். இத்தகைய சுடிதார்கள், சற்றே உயரமான, சிவப்பழகு க்ரீம் வாங்க அவசியப்படாத பெண்களுக்கு மிகப் பொருத்தமாக இருக்கும் என்றார் அவர்.

ஊ. முப்பதும் அதற்கு மேற்பட்ட வயதும் உடைய பெண்கள் சுடிதார் போடக்கூடாது என்று சொல்ல சட்டம் இடம்தரவில்லை. ஆனாலும் அதிக டிஸைன்கள் இல்லாத (முக்கியமாக எம்பிராய்டரி கூடாது!) சுடிதார்கள் அணிந்தால் அழகாக இருக்கும்.

● அடுத்தபடியாகப் புடைவைகள். எந்த மாதிரி உடல்வாகாக இருந்தாலும் யாரையும் விட்டுக் கொடுக்காமல் கவர் செய்வது புடைவைகள்தாம். "எளிய காட்டன் புடைவையும் பொருத்தமான ரவிக்கையும் அணிந்தாலே போதும். தோற்றத்தில் இளமை ஊஞ்சலாடும்" என்றார் மயிலாப்பூர் ஜம்பகம் சில்க்ஸ் உரிமையாளர் ராமசாமி.

● புடைவை அணியும்போது கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம், பாதம் வரை மூடப்பட்டிருக்கிறதா என்பது. கணுக்காலுக்கு மேல் புடைவை தொங்கிக் கொண்டிருக்க அனுமதிப்பவர்களுக்கு 'கார்ப்பரேஷன் லாரி' என்று பட்டப் பெயர் வைத்திருக்கிறது ஆண்கள் சமூகம்.

● புடைவையின் பார்டரை ஒட்டி அதே நிறத்தில் சோளி அணிவது வயதானவர்களின் வயதைக் குறைத்துக் காட்டும். புடைவைக்குக் காண்ட்ராஸ்ட் கலரில் ரவிக்கை அணிவது, இளம்பெண்களை மேலும் இளமையாகக் காட்டும் என்பது ஒரு புடைவை ஆய்வாளரின் கருத்து. (உதா : வெளிர் மஞ்சள் புடைவைக்கு கரும் வயலட்டில் ரவிக்கை அணியலாம். கவனிக்க : இளம்பெண்கள் மட்டும்!)

● பெரிய பார்டர்கள், கட்டங்கள் போட்ட டிசைன் இவற்றைத் தவிர்த்து விடுவது நல்லது. ஃப்ளோரல் மற்றும் அப்ஸ்ட்ராக்ட் பிரிண்டுகள் இளமைத் தோற்றத்துக்குப் பெரிதும் உதவும் என்கிறார் ஒரு டிரெஸ் டிஸைனர்.

இனி ஆண்களுக்கு. ஆண்களுக்கு என்னதான் அடித்துப் பிடித்தாலும் பேண்ட் - ஷர்ட்டுக்கு மேல் வேறு ஆடை வகையறாக்கள் ஏதும் இன்னும் கண்டுபிடிக்கப்படாதது ஒரு குறைதான். (லுங்கி இல்லையா? வேட்டி இல்லையா? என்று கடிக்காதீர்கள்!) பின்வரும் உபயோகமான டிப்ஸ்களை அழகு விரும்பும் ஆண்களுக்காகப் பெருந்தன்மையுடன் வழங்கியவர்கள், மூன்று ஸ்டெல்லா மாரீஸ் பெண்கள்.

● குண்டான ஆண்கள் ஃபுல் கை ஷர்ட் அணிவது காட்டிலும் ஸ்லாக் அணிவதே அழகு.

● உயரமாகவும் ஆகிருதியாகவும் உள்ளவர்கள், ஜிப்பா போட்டால் பெண்களுக்குப் பிடிக்குமாம்.

● குண்டாகவும் குள்ளமாகவும் இருக்கிற ஆண்கள், குறுக்குவாக்கில் கோடுகள் போட்ட சட்டைகளுக்கு சலாமிட்டு வழியனுப்பி விடுவது நலம்.

● பொதுவாக, கறுப்பானவர்கள் வெள்ளையாக, ப்ளெயினாக சட்டை அணிவது நல்லது என்றொரு கருத்து இருக்கிறது. அது தப்பு. முகத்திலடிக்கும் ஃப்ளோரஸண்ட் வண்ணங்களையும் பெரிய டிஸைன்களையும் தவிர்த்து, பிற எத்தகைய வண்ணங்களைக் கொண்ட சட்டைகளையும் அணியலாம்.

● குளோஸ்-நெக் வைத்த டீ ஷர்ட் உங்கள் வயதில் நாலைந்தைக் குறைத்துக் காட்டக் கூடும். பொருத்தமான ஜீன்ஸ் அணிவது முக்கியம். (கவனிக்க - ஸ்டோன் வாஷ் இப்போது ஃபேஷன் இல்லை!)

● தைக் வைத்துள்ள இளைஞர்கள் குளோஸ் நெக் டீஷர்ட்டுக்கு மேல் ஒரு பட்டன் போடாத கோட் அல்லது ஜெர்க்கின் அணிந்து இந்திப்பட மீசை இல்லாத ஹீரோக்கள் மாதிரி குழல் பறக்க உறுமிச் சென்றால் பெண்களுக்குக் கவிதை பாடத் தோன்றும் என்பதறிக!

— **ஜி.எஸ்.எஸ்.**

அட்டை வண்ணப்படம், படங்கள்:
பிரவீண்குமார்

ஊர்க்கூட்டத்தில் பரபரப்பு!

சர்தார் விரைந்தார்!!

நர்மதா கலக்கம்!!!

8

கன்னியராகி நிலவினில் ஆடி...

காலையிலேயே தெருவில் கோலம் போடப் போனாள் மஹாலக்ஷ்மி. ஒன்றரை மணி நேரமாகப் போகிறது. இன்னும் வரவில்லை.

பெரிய தேர்க்கோலம் போட்டுக் கொண்டிருக்கிறாள். வழக்கமான வெள்ளிக்கிழமை அல்ல. இது ஸ்பெஷல்!

கூடம், அறைகள் என்று வீடு முழுக்க மெழுகி முடித்த நர்மதா நிமிர்ந்தாள். இடுப்பும் நடுமுதுகும் வலித்தது.

கூடவே மாக்கோலம் இழுத்துவந்த எதிர் வீட்டு மாமி ருக்மிணி அவள் நிமிர்ந்ததைத் திரும்பிப் பார்த்தாள்.

ருக்மணிக்கு இரட்டை நாடி உடம்பு. ஐம்பதைக் கடந்திருப்பாள். ஒத்தாசைக்கு வந்திருப்பவள்.

"என்னடீ நர்மு இடுப்பு வலிக்கிறதோ?"

ருக்மிணி காரியத்தில் எப்போதும் மும்முரம். அஸ்ஸு" புஸ்ஸு" என்ற சத்தம். அலுப்பு எதையும் வெளிக் காட்ட மாட்டாள்.

அவள் கேட்டதும் நர்மதாவுக்கு வெட்கமாய் விட்டது.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே மாமி!"

கோலத்தை இழுத்துக்கொண்டே ருக்மிணி தொடர்ந்தாள்.

"மொகத்தைப் பார்த்தாலே தெரியறதே!"

"................."

"ஒன் வயசுலே மஹாலக்ஷ்மி பம்பரமா சுத்துவாள். ஒண்டியா வீடு முழுக்க ஒட்டடை அடிப்போம். விடிகாலையே சுண்ணாம்பு அடிக்கறவன் வந்தா அவனுக்கு ஒருநாள்தான் டயம். கிருஷ்ண ஜெயந்திக்கு வீடு கோலாகலப்படும். எல்லாம் இவதான்."

நர்மதாவுக்கு இது தெரியாததல்ல.

இவளுக்கு ஒத்தூத முடியவில்லை. வேறு தலைமுறை.

தங்கள் காரிய சாதனைத் திறத்தை இளையவர்களின் இயலாமையோடு ஒப்பிட்டுப் பரிகசித்துக் கொண்டாடிக் கொள்ளும் தலைமுறை.

"நான் இந்தப் பக்கத்திலே இழுத்துடறேனே மாமீ.'

தான் குறை சொன்னது நர்மதாவுக்குப் பிடிக்கவில்லை. ருக்மிணி புரிந்துகொண்டாள்.

"வாண்டாம், ஒரே கைப்பாடா இருந்துரட்டும். இன்னும் சித்த நாழி. நீ போய்க் குளிச்சுடேன்."

"இருக்கட்டும் மாமி! தாத்தாவுக்கு மல்லிக் காப்பி கொடுக்கணும். மணி ஏழாயிடுத்து. ரெண்டு தரம் எட்டிப் பார்த்துட்டுப் போயிட்டார்."

அனந்தாச்சாரி முதல் சுதந்திர தினத்தன்று காப்பியை நிறுத்தினார். ஐம்பது வருடம். மாற்றாக தனியா சீரக சுக்கு கலந்த ஒரு பானம்.

"மஹாலக்ஷ்மி வேலையிலே மறந்துட்டிருப்போ. நீ போய்ப் போடேன்."

நர்மதா சமையலறைக்குப் போய் கேஸ் ஸ்டவ் மீது ஒரு பாத்திரம் வைத்து அதில் ஒரு தம்ளர் தண்ணீர் ஊற்றினாள். ஆன் செய்தாள்.

'காஸி'ன் சீற்றம் தொடங்கியது

வெளியே அம்மா போடுகிற கோலம். வீட்டுக்குள் நடக்கிற அலங்கார அமர்க்களம்.

திருவனந்தபுரத்துக்காரர்கள் இதையெல்லாம் பார்த்து அயர வேண்டும். இது அம்மா

வின் நப்பாசை.

ஏமாறப் போகிறான் பாவம். அதை நினைத்தால் அனுதாபம் வந்தது.

ரவை, நெய், வீட்டில் உலர்த்திய கடலைப் பருப்பை கண் குத்தலாக மாவு மிஷினில் முன்னே வேறு இட்டம் வராமல் அரைத்து வந்த மாவு.

ஒவ்வொரு பொருளும் வீட்டில் வந்து இறங்கும்போது தாத்தா பேத்தியைக் கண்களால் கெஞ்சினார்.

"சொஜ்ஜிக்கு ரவை வந்தாச்சு! ஜாக்கிரதை. இதுதான் கடைசி ரயில். கங்கணம் கட்டிண்டிருக்கா என் மாட்டுப் பொண்ணு. ஏற மாட்டேன்னியோ, என்னை மன்னிக்க மாட்டா?"

பேத்தியும் வழக்கப்படி கண்ணாலேயே டோஸ் விட்டாள்.

"நீங்களாச்சு. ஒங்க மாட்டுப் பொண்ணாச்சு. நேக்கென்ன தலையெழுத்து?"

"இத பார், கடலை மாவு மஞ்ச மஞ்சேர்னு அரைச்சண்டு வந்தாச்சு.





அருள்வாக்கு

நாமாக ஒருத்தனுக்கு தானம் பண்ணாமல் இருக்கலாம். எவனோ கடன் கேட்டால் கொடுக்க மாட்டேன் என்று சொல்லலாம். "கொடுத்தா வைத்திருக்கிறீர்? என் பணம். கொடுப்பதும் கொடுக்காததும் என் இஷ்டம்" என்று சொல்லலாம். ஆனால் நாம் கடன் பட்டிருக்கும்போது கடன் கொடுத்தவன் திருப்பிக் கேட்டால் இப்படிச் சொல்ல முடியுமா? முடிகிறதோ இல்லையோ எப்பாடுபட்டாவது அவனுக்குக் கொடுத்துத் தீர்க்கத்தானே வேண்டும்? இப்படித்தான் நாம் கடன் பட்டிருப்பவர்களுக்காக வேதம் பஞ்ச மஹா யக்ஞங்களை விதித்திருக்கிறது. கடன் என்றால் திருப்பித்தானே ஆக வேண்டும்? ஆகவே இதைச் செய்யமாட்டேன் என்று சொல்ல நமக்கு 'ரைட்'டே கிடையாது. நம் போன்ற மநுஷ்யர்களுக்கும், பசு பக்ஷிகளுக்கும் உபகாரம் என்ற ரூபத்தில் யக்ஞம் செய்து அவற்றைத் திருப்திப்படுத்த வேண்டியது நம் கடமை. 'கடன்' என்பதிலிருந்தே கடமை என்பது வந்திருக்கிறது. ஈச்வரன் இந்தப் பிரபஞ்சத்திலே ஒரு ஜீவனைப் பிறப்பித்து, அந்தப் பிரபஞ்சத்தால் அவன் பலவிதமான ஸௌக்கியங்களை அடைய வேண்டுமென்று வைத்திருக்கிறபோதே அதைச் சேர்ந்த எல்லா வகை ஜீவ இனங்களுக்கும் – பூச்சி பொட்டிலிருந்து ஆரம்பித்து தேவ, ரிஷிகள் வரைக்கும் தன்னாலான தொண்டை அவன் செய்ய வேண்டும் என்று வேதத்தின் மூலம் ஆர்டர் போட்டிருக்கிறான். ஆதலால் இதைக் கடனாக, கடமையாகச் செய்தேயாக வேண்டும். "கடனே" என்று செய்யாமல் அன்பைக் கலந்து, உபகாரத்துக்குப் பாத்திரமாகிற எல்லாரையும் அந்த ஈச்வர ஸ்வரூபமாகவே பாவித்து அடக்கத்தோடு பணி செய்ய வேண்டும்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

ப்ளீஸ்... ஒப்புத்துண்டுடு"

"இந்தக் கெஞ்சல் கொஞ்சல் கதையெல்லாம் நர்மதாகிட்டே நடக்காது. தெரியுமோன்னோ?"

"இவ்வளவும் வேஸ்டாப் போப்போறது. தெரிஞ்சுண்டே ஏன் ஒப்புதல் நாடகம் ஆடறே?"

"தன் அதிகாரம் ஜெயிச்சுரும்னு அம்மா நம்பிண்டிருக்கா. இல்லேன்னு மொதல்லியே கோடி காட்டினா ஆக்ரோஷம்தான் வளரும்!"

"அப்பறமா அதிர்ச்சியை தாங்கிப்பாளோ?"

"இந்தத் தடவை அது தேவை. வேற வழியில்லே"

மல்லிக் காப்பியை டபராவில் ஏந்திய வாறே நர்மதா நடை கடந்து வெளி முற்றத் திண்ணைக்கு வந்தாள்.

தெருவைப் பாதி ஆக்ரமித்த தேர்க் கோலத்தை மிதிக்காமல், தாத்தாவைப் பார்க்க வந்த ஒருவர் தெருவோரம் ஒண்டி வந்து ஹைஜம்ப் தாண்டி படி மிதித்து உள்ளே வந்தார்.

தாத்தாவிடம் காப்பி டபராவைக் கொடுத்தாள் நர்மதா.

"என்ன மஹாலக்ஷ்மி, கோலம் அமர்க்களப் படறதே... பொண் பார்க்க வரப் போறாளா?"

புரோகிதர் பிச்சமணியின் வெங்கலக் குரல். நர்மதா தெருவை நிமிர்ந்து பார்த்தாள்.

கோலம் தள்ளி ஓரமாக ஒரு கால் ஊன்றிச் சைக்கிள் நிறுத்தி விசாரித்தார் அவர். எப்போதும் மகிழ்ச்சி என்ற கொள்கை உடையவர். அறுபது வயதிலும் தானனனா என்று பாடிக் கொண்டே சைக்கிள் ஓட்டுபவர்.

"ஆமாம் மாமா!" மஹாலக்ஷ்மி புன் முறுவலித்தாள்.

"எந்த ஊரு?"

"திருவனந்தபுரம்"

"அடி சக்கை. அனந்த பத்மநாப சுவாமி. அரமனைக் கொட்டாரம். இது நிச்சயம் தகைஞ்சுரும்."

"ஒம்ம ஆசிர்வாதம்! எப்படியோ முடியணும்."

"முடிஞ்சுரும். தோ கொழந்தை நிக்கறாளே. மொகத்திலே இப்பவே கல்யாணக்களை வந்துடுத்து. பட்டுன்னு என் நெஞ்சிலே பல்லி சொல்றது."

எப்போதும் மகிழ்ச்சி பாலிஸிக்காரர் எதையாவது சொல்லி மகிழ்விக்க வேண்டும். விட்டெறியும் நாலு வாக்கில் ஒன்று பலித்து ஒரு பழம் விழாதா?

அப்புறம் இருக்கவே இருக்கிறது அப்பவே பிச்சமணி சொன்னார் என்ற பிராபல்யம்.

தாத்தா பேத்தியைப் பார்த்தார். பார்வை

யிலேயே பேசினார்.

"பிச்சுமணி வேற ஆசிர்வாதம் பண்றார். என்னைக் காப்பாத்தி கரைதேத்தி விட்டுடு நர்மூ!"

நர்மதாவைப் பார்த்துச் சிரித்துவிட்டு பிச்சுமணி தொடர்ந்தார்.

"அனந்தாச்சாரிவாள்! கல்யாண சாப்பாடு அப்பறம். வரன் ஃபிக்ஸ் ஆனதும் அட்வான்ஸா ஒரு வடை பாயாசச் சாப்பாடு போட்டுடணும்."

அனந்தாச்சாரி அவர் உற்சாகத்துக்கு ஈடு கொடுக்கிற மாதிரி பதிலளித்தார்.

"ஒம்ம வாக்கு பலிதத்துக்கு வடை பாயாசம் லோயர் ராங்க். வாரும்... பிக்ஸ் ஆன நியூஸ் வந்ததும் பெரிய விருந்தே ஜமாய்ச்சுடலாம்."

பிச்சுமணி கலகலவென்று சிரித்து விட்டு சைக்கிள் மிதித்தார்.

திருக்கூடல் முழுவதும் பிச்சுமணியின் முற்பகல் ஒலிபரப்பில் நர்மதாவுக்கு வரன் வரப்போகிற சங்கதி பரவி விடும்.

தாத்தாவை ஒருமுறை முறைத்துவிட்டு நர்மதா திரும்பி நடந்தாள்.

மாலை மூன்று மணிக்கு திருவனந்தபுரத்துக்காரர்கள் வருவதாகத் தபால் போட்டிருந்தார்கள்.

தேரடி மண்டபக் கூட்டத்தை அதனால்தான் அனந்தாச்சாரி ஆறு மணிக்குத் தள்ளி வைத்திருந்தார்.

மூன்று மணி நேர இடைவெளி, சமாளித்து விடலாம்.

ஆனால் மணி மூன்று, நான்கு, ஐந்து என்று ஐந்தே முக்கால் ஆகியும் அவர்கள் வரவில்லை. இனியும் காத்திருப்பது சரியல்லவே!

தேரடி மண்டபத்தில் கூட்டம் கூடி விட்டதாக ஆள் மாற்றி ஆள் வந்து சொல்லிப் போனார்கள்.

"தோ பொறப்டு வந்துடறேன்!" என்று கோட் ஸ்டாண்டில் மாட்டியிருந்த கதர் அங்கவஸ்திரத்தை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டார் அனந்தாச்சாரி.

திரும்பி "கிருஷ்ணா" என்று தம் மகன் கிருஷ்ணமாச்சாரியை அழைத்தார்!

"நான் தேரடி மண்டபத்தில் ஒரு மீட்டிங் போறேன். ரொம்ப முக்கியம். குடிநீர்ப் பிரச்னை. ஊர்ப் பெரியவா எல்லாம் வந்திருப்பா. நான் போய்ட்டு வந்துர்றேன்" என்று கிளம்பினார்.

"இரண்டடி நடந்து திரும்பி "அவா கார்லேதான் வரணும்! மீட்டிங் தாண்டித்தான் கார் வரணும். நான் 'நோட்' பண்ணிண்டே இருப்பேன். கார் வந்ததும் அனுமதி வாங்கிண்டு வந்துர்றேன்"

கிருஷ்ணமாச்சாரி மெதுவாகத் தலையசைத்தார்.

மஹாலக்ஷ்மி எங்கிருக்கிறாள் என்று திரும்பிப் பார்த்துவிட்டு அனந்தாச்சாரி வெளியே நடந்தார்.

கூடத்தில் விரித்திருந்த பெரிய ரத்ன ஜமக்காளத்தின் மீது சன்னதித் தெரு பெண்மணிகள் உட்கார்ந்து கதை பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களோடு நின்றுகொண்டே எதையோ விவரித்த மஹாலக்ஷ்மி அனந்தாச்சாரி போவதைத் திரும்பி கவனித்தாள்.

"தோ வந்துடறேன்" என்று பேச்சை நடுவில் நிறுத்தி வாசல் நடை கடந்து அவர் வெளிமுற்றத்திற்கு இறங்கும் முன் நெருங்கி விட விசையாக நடந்தாள்.

மத்தியானம் இரண்டரை மணியில்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டிக்கு வந்த கதைகளுள், பரிசுக் கதைகள் தவிர, பின்வரும் 13 கதைகளும் பிரசுரத்துக்குத் தேர்வாகியுள்ளன.

1. பொன்விழா காங்கிரஸ் — **வி.எஸ். நாகராஜன்**
2. உரிமை — **நாராயணி கண்ணகி**
3. இலைப் பொறுக்கி— **செ. வரதராஜன்**
4. ஸ்வஸ்திக் சாமிகள் — **வாதூலன்**
5. காந்திதேசம் — **ஜி.ஆர். சுரேந்தர்நாத்**
6. வேரைத் தாங்கும் விழுதுகள் — **ஷாலினி (அறிமுக எழுத்தாளர்)**
7. யாதும் ஊரே — **வைதேஹி நாராயணன்**
8. உஜ்வலா — **விஜயலக்ஷ்மி சுந்தர்ராஜன்**
9. சப்பாணி — **கோதா பார்த்தசாரதி**
10. அப்பாவாகி— **கா.சு. வேலாயுதன்**
11. அப்பா + கோபம் = வேலை — **காரை. சந்திரசேகரன்**
12. திருக்காப்பு — **பி. கலா**
13. சிறுவர்கள் அதிசயம் — **'பதியான்' (அறிமுக எழுத்தாளர்)**

இருந்தே பட்டுப்புடைவை கட்டி அலங்காரம் செய்யச் சொல்லி அம்மா வற்புறுத்திக் கொண்டிருந்ததை, வரட்டும் பார்க்கலாம் என்று தட்டிக் கழித்த நர்மதா அப்போதுதான் முகத்தைச் சோப்பு போட்டு அலம்பி டவலில் துடைத்துக் கொண்டே வந்தாள்.

மஹாலக்ஷ்மியின் வேகம் நர்மதாவுக்குள் ஒரு சிவப்பு விளக்கை எரியச் செய்தது. மணி பார்த்தாள். ஆறு. கூட்டம் நினைவு வந்தது.

இசகு பிசகாக அம்மா எதையாவது கேட்கு முன் தடுக்க வேண்டும். வேகமாக நர்மதா பின் தொடர்ந்தாள்.

மஹாலக்ஷ்மியை அவள் அணுகுமுன் மாமனாரை மருமகள் வழி மறிக்காத குறை.

அனந்தாச்சாரி நின்றார்.

"இந்த நேரத்திலே நீங்க அவசியம் கூட்டத்துக்கு போயாகணுமோ?"

மஹாலக்ஷ்மி முகத்தில் சாது மிரண்ட சீற்றம். நேருக்கு நேர் அவரிடம் அவள் இப்படிக் கேட்பது முதல் முறை.

''அதான் கிருஷ்ணன்கிட்டே சொல்லியிருக்கேனே...''

"அவருக்கென்ன வெவரம் புரியும்?"

"கார் வர்றச்சே நான் மேடையிலேர்ந்து எறங்கி வந்துர்றனே."

திடீரென்று மகாலக்ஷ்மியின் குரல் உயரத் தொடங்கியது.

வந்து கொண்டிருந்த நர்மதா திரும்பி கூடத்தில் உட்கார்ந்திருந்த பெண்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு அம்மாவை நெருங்கினாள்.

"அம்மா... தாத்தா போகட்டும்! இது ரொம்ப முக்கியமான கூட்டம்."

"ஓஹோ... நீயும் சேந்துண்டியாடீ..."

மஹாலக்ஷ்மி கண்களில் எப்போது கொட்டலாம் என்று காத்திருந்த கண்ணீர் புறப்பட்டது.

"போங்கோ. எல்லாரும் போங்கோ." என்று குமுறத் தொடங்கினாள்.

"ஸ்ஸ்... வீதிக்கார பொம்மனாட்டிகள் உள்ள இருக்கா... இப்ப சீன் பண்ணாதே... நீங்க போங்கோ தாத்தா... என்று ஓசை அதிகரிக்காமல் கண்டிப்பாய்ச் சொன்னாள் நர்மதா.

போவதா வேண்டாமா என்று தயங்கினார் அனந்தாச்சாரி.

"போங்கோன்னு சொல்றேன் இல்லே!" நர்மதா கண்ணை அகற்றி விழித்தாள்.

அனந்தாச்சாரி புறப்பட்டார்.

"ஏண்டீ... என் சொல்லுக்கு மதிப்பத்துப் போகணும்... அதானே வேணும் நோக்கு... என் தலையெழுத்து. ஒரு ஜட பரதருக்குக் கழுத்தை நீட்டிட்டு எல்லாத்துக்கும் பெரியவா பெரியவான்னு தொங்கிண்டு நிக்கறேன்"

படியிறங்கிய அனந்தாச்சாரி மீண்டும் நின்றார்.

"தாத்தா... நீங்க போப்போறேளா இல்லியா?"

இருவரையும் மாறி மாறிப் பார்த்தார் அனந்தாச்சாரி. உள் மனசில் அந்த ஒரே சொல் ஒலித்தது. நாராயண... நாராயண.

அதற்குள் ஒரு ஆள் மூச்சிரைக்க ஓடி வந்தான்.

"சர்தார்ஜி... சீக்கிரமா வாங்க. கூட்டத்திலே ஒரு 'டென்சன்' ஆயிட்டிருக்கு"

"டென்ஷனா... என்ன சொல்றே?"

"மோகன்ராஜை அடிச்சுட்டாங்க இல்லே."

"ஆமாம்."

"அதுக்கு ஏன் போலீஸ் நடவடிக்கை எடுக்கலேன்னு மோகன்ராஜ் ஜாதிக்காரங்க ஒரு லாரியிலே ஸ்டேஷனுக்குப் போயிட்டிருக்காங்க."

"அப்புறம்?"

"நம்ம ஆதிகேசவுலு நாயுடு லாரியைத் தடுத்து நிறுத்தி வச்சுட்டு ஓங்களைக் கூட்டியாரச் சொன்னாரு"

ஏனோ உடனே தாத்தாவோடு போகத் தோன்றியது. ஆனால் மஹாலக்ஷ்மியின் மனோ நிலைக்காகத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு திரும்பினாள்.

வீட்டு நடையில் நுழையும் முன்பு ஒரு மோட்டார் பைக் ஒலி. திரும்பினாள்.

நிறுத்திச் சாவியை எடுத்துக் கொண்டு படியேறி வந்தான் பத்ரி.

"ஹலோ" குரலில் ஒரு தனி கண்ணியம்.

தனக்கு என்ன நேர்ந்தது? தன் கம்பீரம் மிடுக்கு எல்லாம் எங்கே அகன்றது? இந்தக் குரலும், இந்த முகமும் ஏன் தன்னை தணிந்து குளிரச் செய்கின்றன?

"ஓங்களுக்கு யார் வேணும்?"

மஹாலக்ஷ்மிக்கு முகபாவத்தை மறைக்கு முன் அவள் நர்மதாவிடம் நேர்ந்த சிறு சலனத்தைக் கிரகித்து விட்டாள்.

"சர்தார் அனந்தாச்சாரி?"

"அவர் மீட்டிங் போயிருக்கார்."

"எப்போ வருவார்?"

"சொல்றதுக்கில்லே. வேணும்னா நேரடி மண்டபத்தாண்ட போய்ப் பாருங்கோ" வெட்டென்று சொல்லிவிட்டு நர்மதாவைப் பார்த்தாள் மஹாலக்ஷ்மி.

"நீ உள்ற வாடி."

"நான் வெய்ட் பண்ணலாமோ?" அவன் மஹாலக்ஷ்மியைப் பார்த்துக் கேட்டான்.

"வாண்டாம். எங்க ஆத்திலே ஒரு முக்கியமான அலுவல்."

உள்ளே போகுமுன் நர்மதாவுக்கு அவனைத் திரும்பிப் பார்க்கத் தோன்றியது.

(தொடரும்)

ஹர்ஷத் மேத்தா விவகாரத்துக்குப் பிறகு அரசாங்கம் சற்றே விழிப்படைந்தது. பங்கு மார்க்கெட்டில் முறைகேடுகள் நடக்காமலிருக்க வேண்டும் என்ற நோக்கில் SEBI - Securities and Exchange Board of India - என்கிற அமைப்பை நிறுவியது.

ஷேர்களின் விலையை 'செயற்கையாக' உயர்த்தி விட்டு, பொதுமக்களிடையே அவற்றுக்கு கிராக்கி உண்டாக்கி, கொள்ளை லாபம் சம்பாதிக்கும் அநீதியான போக்கைக் கட்டுப்படுத்துவதே செபியின் முக்கியப் பணி.

ஷேர்களின் விலையை செயற்கையாக உயர்த்துவதற்குப் பொதுவாக இரு ஏமாற்று

வாட்ச்மேன் கண்ணில் மண்ணைத் தூவி...!

வழிகள் உண்டு.

ஒன்று: புரோக்கர்கள், தங்கள் கைவசம் இல்லாத ஷேர்களைக்கூட விலை உயர்த்தி பங்கு மார்க்கெட்டில் பேசுவார்கள். 'அடடா,




• மும்பை ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச்: போலி விலையேற்றத்தால் தடுமாறிப் போனது.

"இந்துஸ்தான் லீவர்" நிறுவனத்தின் மீது

"செபி" குற்றச்சாட்டு!!

இந்தியாவில் நாம் பிறப்பிலிருந்து இறப்பு வரை கொடுக்கும் லஞ்சத்தை, எல்லா நகரிலும், எல்லா தரப்பினரையும், சந்தித்து 'அவுட் லுக்' என்ற பத்திரிகை ஒரு கணிப்பு வெளியிட்டுள்ளது. தெரிந்தவர்கள் நாம் கொடுக்கும் பணம் சரியானதா என்று பார்த்துக் கொள்ளவும் (அல்லது அதிகமாகக் கொடுக்கிறோமோ என்பதையும் அறியவும்) தெரியாதவர்கள் தெரிந்து கொள்ள உதவுவதே நமது கடமை என்று வெளியிடுகிறோம்.

''என்னது? இந்த பிளான் அப்ரூவ் ஆக இந்த ஆபீஸ்ல தோராயமா எத்தனை லஞ்சம் தரணும்னு கேக்கறீங்களா? ஒரு அம்பது ரூபா வெட்டுங்க சொல்றேன்!''



பிறப்பு சான்றிதழ் பெற - ரூ. 500

பள்ளியில் அட்மிஷன் (நாம் சேரும் பள்ளிகளைப் பொறுத்து) - 5000 முதல் 5 லட்சம் வரை

பள்ளியில் மாணவன் ஒழுங்காகப் படிக்க, ஆசிரியருக்கு 'டியூசன்' என்ற பெயரில் - 500 முதல் 1000 வரை.

தேர்வில் வெற்றி பெற அல்லது கேள்வித் தாள் முன்னதாகவே கிடைக்க - 200 முதல் 50,000 வரை.

கல்லூரியில் நுழைய - கலைக் கல்லூரியில் 50,000

மருத்துவ, இஞ்சினியரிங் கல்லூரிக்கு - 5 லட்சம் முதல் 10 லட்சம் வரை

ரேசன் கார்டு பெற - 500 (உணவு இன்ஸ்பெக்டருக்கு)

வேலை அலுவலகத்தில் இருந்து கார்டு கிடைக்க - 1000

கிளரிக்கல் வேலைக்கு - 3 லட்சம்

ரயில்வேயில் உதவி ஸ்டேஷன் மாஸ்டர் வேலை பெற - 60,000

போலீஸ் கான்ஸ்டபிள் - 25,000

வேலை மாற்றல்/இடமாற்றல் பெற - பல லட்சம். (இடத்தைப் பொறுத்து.)

டெலிபோன் பெற - 500

தற்காலிக இடமாற்றத்திற்கு - 300 முதல் 500

டிராபிக் விதிகளை மீறும்போது - தனியார் பஸ் - 100

லாரி - 300 முதல் 500 வரை

இரண்டு சக்கரம், நான்கு சக்கர கார் - 100

ஓட்டுநர் உரிமம் பெற - இரண்டு சக்கரம் - 500; நான்கு சக்கரம் - 1500

ஒரு முன்னணி நிறுவன ஷேர், இவ்வளவு விலை பேசப்படுகிறதே' என்று பொது மக்கள் அந்த குறிப்பிட்ட நிறுவன ஷேரை விழுந்தடித்துக் கொண்டு விற்க முன் வருவார்கள். எல்லோரும் இப்படி முன் வருகையில், ஷேர்கள் விலை குறைய, அவற்றைப் 'போலியாக' விலை பேசிய புரோக்கர்கள் தயாராயிருந்து கொத்திக் கொள்வார்கள்.

இரண்டு: ஒரு பெரிய நிறுவனத்தின் நிர்வாகத்திலுள்ளவர்கள் அதன் பங்குகள் சிலவற்றைத் தங்கள் வசமே வைத்திருப்பார்கள் இல்லையா?... தங்கள் நிறுவனம் சிறந்த லாபம் காண்கிறது என்னும் போதோ, போனஸ் ஷேர்களை வழங்கப் போகிறது என்று தெரிந்தாலோ, வேறு பெரிய நிறுவனத்துடன் இணையும் திட்டம் இருந்தாலோ நிர்வாகத் தரப்பில் ஷேர் வைத்துள்ளவர்கள் கொஞ்சம் 'விளையாட' ஆரம்பிக்கலாம். தங்கள் வசமுள்ள பங்குகளின் விலையை வேண்டுமென்றே எக்கச்சக்கமாக உயர்த்தி, மார்க்கெட்டில் விலை சொல்வார்கள். செயற்கை மதிப்பினால் கவரப்பட்டு பொதுமக்கள் ஏமாறுவதுண்டு! இதைத்தான் insider trading (நிறுவனத்துக்குள் இருப்பவர்களே பங்கு வர்த்தகம் செய்வது) என்பது!

SEBI அமைக்கப்பட்ட பிறகு, மேற்படி இரு முறைகேடுகள் குறைந்து போயிருந்தன. ஆனால் சமீபத்தில் செபி என்கிற வாட்ச்மேன் கண்ணில் மண் தூவப்பட்டிருப்பதாகச் செய்தி.

ஹிந்துஸ்தான் லீவர் நிறுவனம் எல்லோரும் அறிந்த ஒன்று. ப்ருக்பாண்ட் - லிப்டன் கம்பெனிகளின் சமீபத்திய இணைப்புக்குப் பிறகு, லீவரும் லிப்டன் -

அம்மாடியோவ்!

புதிய குடிநீர் தொடர்பு பெற- 1000

மின்சாரம் முதலில் பெற - 3000

மூன்று ஃபேஸ் மீட்டருக்கு - 30,000

கம்பெனிகள் அதிகமாக மின்சாரம் பெற - 25,000

துப்புறவுத் தொழிலாளி தினமும் தெருவை சுத்தமாக வைக்க - மாதம் 50

கேஸ் புதிய தொடர்பிற்கு - 2000

அடுத்த சிலிண்டர் - 1500

தேவைப்படும் போது சிலிண்டர் மாற்றிக் கொடுக்க - 50 அதிகப்படியாக

ரயிலில் பதிவு செய்த டிக்கெட்டிக்கு - 150 முதல் 200 வரை

இரண்டாவது வகுப்பிலிருந்து முதல் வகுப்புக்கு மாற்ற 200

பாஸ்போர்ட் ஒரே வாரத்தில் கிடைக்க - 15,000

ஒரு மாதத்தில் பெற - 5,000

போலீஸ் அதிகாரியின் சர்டிபிகேட் பெற - 500

போஸ்டல் டிபார்ட்மெண்ட்: நம் கடிதம் நமக்கு ஒழுங்காகக் கிடைக்க - 100

சினிமா: நல்ல படம் ஓடும் போது - 5 மடங்கு அதிகமாகக் கட்டணம்

திருமணம் - திருமண சான்றிதழ் ஒரே நாளில் பெற - 5000

விவாகரத்து பெற, நம் கேஸ் சீக்கிரம் முடிய - 250

ஆஸ்பத்திரியில் அனுமதி: அரசாங்க ஆஸ்பத்திரி - 500 முதல் 2000

சீக்கிரம் ஆபரேஷன் நடத்த - 10,000

கிளினிக்கில் இருந்து இரத்தம் மற்றும் பிற சான்றிதழ் பெற 1,500

தீ விபத்து: போலீஸ் கேஸ் எதுவும் வராமல் தடுக்க - 100

அரசாங்க வீடு கிடைக்க - 20,000

செக்போஸ்டில் இருந்து விடுபட - 1000

புதிய வியாபாரம் துவங்க - பதிவு செய்ய - 25,000 முதல் 25 லட்சம் வரை

அதிக மின்சாரம், மற்ற பிற வசதிகள் கிடைக்க - 35 லட்சம்

பாங்க் லோன் பெற - நாம் கேட்கும் தொகையில் மூன்று சதவீதம்.

இன்சூரன்ஸ் : இன்சூரன்ஸ் தொகை கிடைக்க - 10 முதல் 20%

இன்கம்டாக்ஸ் - கேஸ் போடாமல் இருக்க - 50%

சுடுகாட்டில் - வெட்டியான் மற்றும் பிறருக்குக் கொடுப்பது - 200

இறப்பு சான்றிதழ் பெற - 200

— மணி

ப்ருக்பாண்டுடன் இணையப் போவதாக மார்க்கெட் வட்டாரத்தில் பேச்சு அடிபட்டது. கடந்த ஏப்ரல்/மே மாதத்தில் இந்தப் பராபரி பேச்சு உறுதியாகி இணைப்பு அறிவிக்கப்பட்டது.

இதன்மூலம் ப்ருக் - பாண்ட் - லிப்டன் பங்குதாரர்களுக்கு லீவர் பங்குகள் தாமாக வந்து சேர்ந்து விடும்.


இப்போது செபி ஓர் அதிர்ச்சி தரும் விஷயத்தைக் கண்டுபிடித்திருக்கிறது: லீவர் நிர்வாகத்தினரே insider tradingஇல் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டியிருக்கிறது. அந்த நிறுவன உயரதிகாரிகள், 'பெரிய அளவில்' கோல்மால் செய்திருப்பதாகக் கூறி, லீவர் நிறுவனத்துக்கு 'நோட்டீஸ்' அனுப்பியுள்ளது.

லீவர் அதிகாரிகள், செபி குற்றச்சாட்டை மறுத்துள்ளனர். ஆனால், லீவர் - ப்ருக்பாண்ட், லிப்டன் இணைப்பு அறிவிக்கப்பட்டதுமே இரு நிறுவனப் பங்குகளின் விலையும் ராக்கெட் வேகத்தில் உயர்ந்ததென்னவோ உண்மை!

விசாரணை முடிந்து எல்லாம் வெளிவரும் என்றாலும், கோல்மால் நடவடிக்கைகளினால் பொதுமக்களுக்குப் பங்கு மார்க்கெட் பேரிலுள்ள நம்பிக்கையும் மதிப்பும் தவிடுபொடியாகிவிடும்! இதை சிறிய, பெரிய தனியார் நிறுவனங்கள் மறைக்கலாகாது. இறுதியில் பாதிக்கப்படப் போவது தாங்கள்தான் என்று உணர வேண்டும்.

அடிப்படையான நேர்மையுணர்வு இல்லாவிட்டால், அரசாங்கம் அரை டஜன் வாட்ச்மேன்களை நியமித்தாலும் பலனிருக்காது!

— வி. கோபாலன்



மழைவெப்பமும் மன ஈரமும்

குடை மறந்து
வெளியே போனபோது
நனைந்த
தலைமுடி ஒவ்வொன்றும்
முணுமுணுத்தது
என் மூளைக்குள் சளி, சளி!

சலவைக் கோடுகள்
கரைந்த
சட்டையும் வேட்டியும்
கவலையை மனத்தில்
குட்டையாய்த் தேக்கின.

வேகமாய்க் கடந்துசென்ற
வண்டி வாகனங்கள்
சேற்றைவாரி
ஏசின
என் வசதியின்மையை.

பெருக்கெடுத்த
தெரு வெள்ளத்தில்
சுழன்ற கால் செருப்புகளின்
மூப்பும் பிணியும்
முடிவைத் தழாவின.

வீட்டுக்குத்
திரும்பிய வேளை
சளி ஒழுகு மூக்கோடு
கூரை
நீர்ச்சரடுகளுக்குக் கை
நீட்டிக் கொண்டிருந்தான்
குட்டிப் பையன்.

தொப்பலாய்
நனைந்துவிட்ட மகள்
'அப்பா
தலையை நல்லாத் துவட்டுங்க...'
என்றாள்
கிழியாத அன்பும் கிழிந்த துண்டுமாய்.

"கொஞ்சம் இருங்க
தேத்தண்ணி போட்டுத் தாரேன்..."
தட்டுத்தடுமாறிப்
புகைக்குள்ளிருந்து
புறப்பட்டு வந்தது மனைவி குரல்.

அழுக்குச் சதைபோட்டிருந்த
சன்னல் கம்பிகளில்
மழை எழுத்துகள்
அச்சுக் கோத்துக் கொண்டிருந்தன
ஆகாயக் கவிதையை.

இரவாணத்துக்
குருவிக் கூட்டில்
தாயின் வாய்க்குள் தீனிதேடும்
குஞ்சுகளின்
ஓசைக் கிறுக்கல்கள்.

இப்போது
மழை வெப்பம்
பிசுபிசுத்துப் போக,
மறுபடியும்
குடைமறந்து வெளியே போக
ஏங்கும் என் மனம்.

— தமிழன்பன்



ISKCON

(International Society for Krishna Consciousness)

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம், 59,
பர்கிட் சாலை, தி.நகர், சென்னை - 17.

Ph. No. 4343266/4348610 Fax : 4345929 Internet : sd@com.org

ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி உத்ஸவம்

இடம் : ஸ்ரீ குசலாம்பாள் கல்யாண மண்டபம், சேத்துபட்டு, சென்னை.

अहं सर्वस्य प्रभवो मत्तः सर्वं प्रवर्तते
इति मत्वा भजन्ते मां बुधा भावसमन्विताः

"நான்தான் இந்த ஜட மற்றும் ஆன்மீக உலகின் ஆதாரம். என்னிடமிருந்துதான் எல்லாம் உண்டாகின்றன. இதைப் பற்றி முழுமையாக உணர்ந்த மதியுடையோர் எனக்கு பக்தியுடன் சேவை புரிந்து இதய பூர்வமாக என்னை வழிபடுகின்றனர்" - பகவத் கீதை (10.8)

முழு முதற்கடவுள் ஸ்ரீ கிருஷ்ணர் நமக்காகவே இந்த உலகில் அவதரித்து பல லீலைகள் செய்து பக்தர்களுக்கு அருள் புரிந்தார். ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்த நாளை ஸ்ரீ கிருஷ்ணா ஜன்மாஷ்டமி என்று கொண்டாடப்படுகிறது.

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியார் ஸ்ரீல ஸ்ரீ பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்கள் இந்த பக்தி இயக்கத்தை உலகம் முழுவதும் பரப்பி, வேத சாஸ்திரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து கிருஷ்ண உணர்வின் விஞ்ஞானத்தை பிரச்சாரம் செய்துள்ளார். அவர் மேலும் இந்த ஞானத்தை பரப்ப, உலகமெங்கும் ஆலயங்களை நிறுவினார். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் இன்றைய தேதியில் 500 க்கும் மேற்ப்பட்ட ஆலயங்களையும், வேத கால வாழ்வு மையங்களையும் நிர்வாகம் செய்து உள்ளது. அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, ஆசியா, ரஷ்யா, ஆஸ்திரேலியா என்று எல்லா தேசங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. இவ்வியக்கம் கிருஷ்ண ஜன்மாஷ்டமி தினத்தை சிறந்த முறையில் கொண்டாடி சமுகத்திற்கு தொண்டு செய்து வருகிறது.

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் சென்னை கிளையும் ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி பண்டிகையை ஆகஸ்ட் 25ம் தேதியிலும், ஹரே கிருஷ்ண இயக்கத்தை நிறுவிய ஆச்சாரியார் பிரபுபாதா அவர்களின் 101வது பிறந்த தின விழாவையும் வெகு விமரிசையாக கொண்டாட திட்டமிட்டுள்ளது.

* பல்லாயிரகணக்கான பேர்களுக்கு அன்னதானம்
* வேத, ஆன்மீக புத்தகங்கள் வெளியிடுதல், விநியோகம் செய்தல்
* ஆன்மீக சொற்பொழிவுகள்
* ஸ்ரீ கிருஷ்ணரின் புகழை பாடி துதித்து சங்கிர்த்தனம் செய்தல்
* கலை, நாடக, நாட்டிய நிகழ்ச்சிகள். இன்னும் இது போன்ற பல திருவிழாக்கள்
* பள்ளி மாணவர்களுக்கு பல வகை போட்டிகள் வைத்து நற்பண்புகளையும் உயர்வான கலாசாரத்தையும் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தல்.

நிகழ்ச்சி நிரல்

ஆகஸ்ட் 15, 17, 24 தேதிகளில் சிறுவர்களுக்காக ஹரே கிருஷ்ண இயக்கத்தின் மூலம் நடத்தப்படும் பலவகை போட்டிகள், கலை நிகழ்ச்சிகள்.

ஆகஸ்ட் 25, திங்கட் கிழமை ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி

மாலை 5.30 : ஆரத்தி, பரிசு வழங்குதல், பிரசாத விநியோகம்

7.30 : விழாவின் தலைமை விருந்தினர் தவத்திரு விஸ்வதீர்த்த சுவாமிஜி, பேஜாவர் மடம், உடுப்பி அவர்களின் சிறப்புரை

8.00 : நாடகம் - ISKCON பக்தர் குழுவினர்

9.00 : ஸ்ரீ கிருஷ்ண அவதாரம்/பேருரை தவத்திரு பானு சுவாமி மஹாராஜ், மண்டல செயலாளர், தென்னிந்திய ISKCON

11.45 : ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ண ருக்மினி சத்யபாமாவிற்கு மஹா அபிஷேகம்

அகஸ்ட் 26 செவ்வாய் கிழமை நந்த உத்ஸவம். மற்றும் அகில உலக கிருஷ்ண உணர்வின் ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ பிரபுபாதா அவர்களுக்கு மஹா வியாஸ பூஜை

அனைவரும் கலந்து கொண்டு முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணரின் பரிபூர்ண ஆசியும், ஆன்மீக உணர்வும் பெருவதற்கு வாருங்கள் என அழைக்கிறோம்.

ஆன்மீக, வேத இலக்கிய புத்தக கண்காட்சியில் சிறப்பு தள்ளுபடியுடன் (Discount) விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

AAAAA Trust (Regd No. 1488)

ஆல் வேல்டு அக்கவுண்டிங் அட்மினிஸ்ட்ரேடிவ் அண்ட் டெக்னலாஜிகல் அகாடமி(AAAAA)

All-World Accounting Administrative and Technological Academy.

படித்த அனுபவம் மிக்க நிபுணர்களின் சீரிய நிர்வாகம்	கௌரவமான வருமானம்	மரியாதையான சேவை

In Education from 1979

நமது மாணவர்களின் எண்ணிக்கை மதிப்பீடு: வருடத்திற்கு 1 லட்சம் பேர். 150 பேராசிரியர்கள் சேவை செய்கிறார்கள். துபாய், ஷார்ஜா, அபுதாபி, குவைத், பிலிப்பைன்ஸ் போன்ற வெளிநாடுகளிலிருந்தும் படிக்கின்றனர்.

நடத்தப்படும் படிப்பு பயிற்சிகள் IAS, IPS, IIT, BE, MBBS, BL, MBA, MCA, AIPMD, SSC, AMIE, Chartered Manager Courses, TNPSC, Spoken English/Hindi, BSRB, RBI, SBI, LIC, GIC, Computer courses, GMAT, GRE, TOEFL, Business Technology, etc

வாடிக்கையாளர் வசதி திட்டம்: (TM)

30 தினம் 18% PA, 45 தினம் 19% P.A.
60 தினம் 20% PA, 90 தினம் 21% P.A.

எப்போது வேண்டுமானாலும் பணம் எடுத்துக் கொள்ளலாம். புதுப்பிப்பதற்காக வர வேண்டிய அவசியமில்லை.

மாதப் பென்ஷன் திட்டம்

டெபாசிட்	காலம்	மாதவட்டி ரூ.
5000	1 வருடம்	125
10000	1 வருடம்	250
10000	3 வருடம்	300
10000	5 வருடம்	320

சேமிப்பு கணக்கு: 15%P.A. தினசரி புராடக்ட், மாதாமாதம் வரவு.

மத்திய நிதி மந்திரி என்ன சொல்கிறார்?

ஜனங்கள் தங்கள் சேமிப்பை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ, சர்க்காரின் திட்டங்களிலோ போடலாம், மேலும் பணம் இருந்தால் கல்வி நிறுவனங்களில் முதலீடு செய்யலாம்.

ஆதாரம் : 'இந்து' பத்திரிக்கை 28.12.96. பக்கம் - 6.

ரிசர்வ் வங்கி என்ன சொல்கிறது?

ரிசர்வ் வங்கி திருத்தச் சட்டம் 1997 பிரிவு 45 S வர்த்தக காரியங்களுக்காக டெபாசிட் பெறுவதை தடை செய்யவில்லை. பதிவு செய்யப் படாத நிறுவனங்கள் கடன் கொடுப்பதற்காக டெபாசிட் வாங்குவதையே தடை செய்கிறது.

ஆதாரம் : 'இந்து' பத்திரிக்கை. 26.2.97. பக்கம் - 18.

மனநிம்மதியான முதலீடு - பரிபூரண பாதுகாப்பு (TM)

உங்கள் டெபாசிட்டுகள் T. நகரில் உள்ள பிரதான அசையா சொத்தால் (டோர் நம்பர் 27சி, பிளாக் 5488/1, ராமேஸ்வரம் ரோடு) பாதுகாக்கப்படுகின்றன.

தலைமை கார்யாலயம்: *"வித்யாலயா", 27சி, ராமேஸ்வரம் ரோடு, மாம்பலம் ரயிலடி சமீபம்,* Next to DAV School, T. *நகர், சென்னை - 17.*

கிளை: 7, முதல் மாடி, ஸ்டேஷன் ரோடு, தாம்பரம் சானடோரியம், சென்னை - 47.

கிளை: 5, 2வது மெயின் ரோடு, நியு காலனி, குரோம்பேட்டை, சென்னை - 44.

கிளை: 13, காலேஜ் ரோடு, நங்கநல்லூர், சென்னை - 114.

மும்பை: 1, தீபால் அபார்ட்மென்ட்ஸ், ஜெய் ஹிந்த் காலனி, குப்தேரோடு, டோம்பிவ்லி மேற்கு - 421 202

உங்கள் வீட்டிற்கும் வந்து சேவை செய்கிறோம். போன் : 4348560, 4347025.

AAAAA — பாதுகாப்பின் சின்னம்.

Prof. V. **விவேகானந்த்**
B.Com, (Distn), DOA, MBA (Distn), CAIIB
(All India First), EKSAMD (Germany)
(Distn), B.L.
Managing Trustee.

Dr. **பரமேஸ்வரி,** MBBS,
Managing Trustee.

சொத்து பாதுகாப்பு, மாத வட்டிக்கும், அசலுக்கும் முன்கூட்டியே செக்.

Sunday Working Day

(TM) :Trade Mark

குல்ஷன் குமார் கொலை!

“பாலிவுட்”டில் பீதி!!

“ஒரு படத்துக்கு நான் — கோடிகள் வாங்குகிறேன்” எனப் பேட்டிகளில் தம்பட்டமடித்துக் கொண்டது -

ஷார்ஜா கிரிக்கெட் போட்டிகளில், தாவூத் இப்ராஹிமுடன் சிரித்துக் கொண்டு, டீ.வி.யில் காட்சி தந்தது -

தாவூத் வீட்டு கல்யாணங்கள், பர்த்டே பார்ட்டிகள் என்று. இவர்கள் கும்பலாகச் சென்று கும்மியடித்தது என்று தோழமையில் ஆரம்பித்தது தொந்தரவாக மாறியபோதும், அதைப் பற்றி போலீஸிடம் மூச்சு விடாமல் மூடிமறைத்தது -

எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து ஒட்டுமொத்தமாகத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறது பாலிவுட்!

முதலில் தயாரிப்பாளர் முகேஷ் தகலை தீர்த்துக் கட்டியபோதே அண்டர்வர்ல்ட் (அபாய) மணியடித்து, பூசை போடத் தொடங்கி விட்டது! அடுத்து, ராஜீவ்ராய் மண்டையில் அடித்துத் தேங்காய் உடைத்து, சுபாஷ் காயிடம் மிரட்டல் மந்திரங்களை உரத்த குரலில் உச்சாரணம் செய்து, முடிவில் குல்ஷன் குமாரை பலிபோட்டு விட்டது!

காய், ஒரு கோடி “தட்சிணை” கொடுத்திருப்பதாக வதந்தி! குமார் அளித்த 50 லட்சம் அவர்களுக்குப் போதாததால் (10 கோடிகள் எதிர்பார்த்திருக்கிறார்கள்), அவரையே பலிகடாவாகி விட்டார்கள்!



காசுக்காகக் கொலையுண்ட காசட் மன்னன்!

காசட் உலகின் முடிசூடா மன்னனான குல்ஷன் குமார், மும்பையில் அடி எடுத்து வைத்தபோது, கொண்டு வந்தது கண்களில் கனவையும், மனத்தில் உரத்தையும், கைகளில் திறமையையும் மட்டுமே! தந்தை சந்திரபான் துவா அகதியாக தில்லிக்கு வந்து, பழரசக்கடை வைத்துப் பிழைப்பு நடத்தியவர். தேசபந்து காலேஜில், படிப்பதாகப் பெயர் பண்ணிக்கொண்டு, சினிமா தியேட்டர்களை வலம் வந்து கொண்டிருந்த பிள்ளை குல்ஷனை, கடையிலே கட்டிப் போட, கொஞ்ச நாள் தர்யாகஞ்சில் ஜூஸ் விற்றுக் கொண்டிருந்தார் குல்ஷன்.

ஆனால் அவருக்கென்று ஒரு பெரிய கனவுத் தொழிற்சாலை விரிந்து திறந்திருந்ததே! டில்லியிலும் (நோய்டா), மும்பையிலுமாக வருடம் 250 கோடி டர்ன் ஓவருள்ள பிஸினஸுக்கும், ஆறு மெர்ஸிடஸ் கார்களுக்கும், பங்களாக்களுக்கும் சொந்தம் கொண்டாடும் யோகமிருந்த போது, எத்தனை நாள் ஜூஸ் விற்க முடியும்?

'பைரஸி பைரஸி' என விஷயமறிந்தவர்கள் அலற அலற, காப்பிரைட்ஸ் சட்டத்திலுள்ள

ஓட்டைகளை எல்லாம் பயன்படுத்திக் கொண்டு, லதா, கிஷோர் போன்றே பாடக் கூடியவர்களை வைத்து, அவரே தயாரித்து வெளியிட்ட விலைமலிவான காசட்டுகள், "ஜங்கார் பீட்"ஸாக மார்க்கெட்டை ஆக்ரமித் தன. 15 ரூபாயில், கறிகாய்க்கடைக்காரரி லிருந்து, காண்டஸா காரில் செல்பவர் வரை எல்லோருக்கும் இந்த இசை விருந்து கிட்டியது. "டீ ஸீரிஸ்!" என்றொரு மியூசிக் கம்பெனியைத் துவக்கி, அனுராதா போட்வால், அல்கா யக்னிக், ஸப்னா முகர்ஜி, ஸோனு நிகம், குமார்ஷானு போன்ற பல இளம் இசைக் கலைஞர்களை ஊக்குவித்து, அவர்களைப் பிரபலமாக்கினார் குல்ஷன்குமார்.

அடுத்து, தம்பி கிஷன்குமாரை நட்சத்திர மாக்க, படத் தயாரிப்பிலும் இறங்கி சக்கை போடு போட்டார். ஆனால் அவ்வப்போது சர்ச்சைகளுக்கும் ஆளானார். லேட்டஸ்ட் கசமுச - மாயாவதி பற்றிப் படம் துவங்கி, தாக்கரேயின் கோபத்துக்கு ஆளானது.

'இதிகாஸ்' படத்துக்கு அல்கா பின்னணி பாடியிருக்க, அதன் ஆடியோ உரிமைகளை எடுத்துக் கொண்டபின், அதே பாடல்களை அனுராதா குரலில் ரிகார்டு செய்து, மார்க் கெட்டில் அறிமுகப்படுத்தினார்.

எப்படியோ! இவர் தொட்டதெல்லாம் பொன்னாக, நன்றிக்கடனாக, பக்திமாலை களைத் தொடுக்க ஆரம்பித்தார். 'கங்கா மாயி'யிலிருந்து சனீஸ்வரன் வரை ஒருவரை யும் விட்டு வைக்கவில்லை! இவர் எடுத்த டீவி. சீரியல் சூரியகுமாரனால், நாசிக் அருகிலுள்ள 'சனி ஷேங்கணாப்பூர்' என்ற சனீஸ்வர க்ஷேத் திரம் பிரபலம் கரடுமுரடாயிருந்த வைஷ்ணவிதேவி ...லுக்கான பாதையைச் செப்பனிட்டு, வழியெல்லாம் பஜனைப் பாடல்களை ஒலிக்கச் செய்த புண்ணியம் "டீ. ஸீரி"ஸையே சாரும்!

கடைசியாக அவர் கொலையுண்ட, அந் தேரி வர்ஸோவா லிங்க் ரோடிலுள்ள சிவன் கோயிலும், அவர் உதவியோடு கட்டியதுதான். காலை 10:30 மணிக்கு, கோயில் சென்று பூஜையை முடித்துக் கொண்டு, தன் மாருதி எஸ்டீமில் ஏற இருந்தவரை, 'ரொம்பவே பூஜை செய்து விட்டாய்.... போதும்' என்றவாறே மூன்று ரவுடிகள் வெளியே இழுக்க, தப்பித்து ஓடி, அருகிலிருந்த குடியிருப்புகளின் கதவைத் தட்ட, அவை பீதியில் மூடிக் கொள்ள, பாத்ரூம் பக்கமாக இவர் ஓட, துரத்தி வந்தவர் கள் இவர் மீது புல்லெட் மழை (15-17) பொழிந்தனர்.

மேலே மாட்டப்பட்டிருந்த வைஷ்ணவி தேவியின் படத்துக்கடியில், அவருக்குக் குருதி யால் அபிஷேகம் செய்த நிலையில் குல்ஷன் சாய்ந்தார்... அருகிலுள்ள கூப்பர் ஹாஸ்பிட லுக்கு செல்லுமுன்னே கதை முடிந்து விட்டது.

ஆனால் வேறு புதிய கதைகள் வெளிச் சத்திற்கு வந்துள்ளன. தாவூதின் வலது கை அபுஸலீம்; துபாயிலிருந்து இயங்கும் இவனுக்கு மும்பையில் எட்டு குழுக்கள். ரூ 2000 கொடுத்தாலே, 'வெட்டு' ஒண்ணு 'துண்டு' ரெண்டு என இயங்கும் ரகங்கள். அண்மை யில், ஒரு கேஸில் பிடிபட்டு 'உள்ளே'யிருந்து 'வெளியே' வர 20 லட்சங்கள் செலவாகி யுள்ளன.

தாவூத் கராச்சியில் அடங்கிக் கிடக்க, அண்டர்வர்ல்டுக்கு வற்றாத ஜீவநதியாக இருந்த கட்டடத் தொழிலும் இப்போது முடங்கிக் கிடக்க, தளர்த்தப்பட்ட சட்டங்கள் தங்கக் கடத்தலுக்குத் தடங்கலாக இருக்க, பணம் புரளும் படவுலகம் அடுத்த இலக்கா யிற்று.

ராயின் 'குப்த்', சுபாஷ் காயின் 'பர்தேஸ்' படங்களுக்கான ஓவர்ஸீஸ் ரைட்ஸ் தனக்கு மறுக்கப்பட்ட குமைச்சலில், ஸலீமின் முதல் குறி ராய்தான்! அவர்கள் தப்பித்துவிட, "ஸலீம் வெத்து வேட்டு" என்ற களங்கத்தைத் துடைத்து, வீரத்தை நிலைநிறுத்த, ஒரு முழுக் கொலை அவனுக்கு அவசரத் தேவையாக இருந்தது; பரிதாபமாகச் சிக்கியவர், சலீம் தயாரித்திருந்த ஹிட்லிஸ்டில் இடம்பெற்றிருந்த 40 பெயர்களில், 3வது இடத்தில் இருந்த குல்ஷன் குமார்!

குமாருக்கு, உ.பி. போலீஸ், ஒரு துப்பாக்கி ஏந்திய மெய்க்காப்பாளரை முன்பே தந்திருக் கிறது! (இரண்டு நாளாக அவருக்கு ஜுரம்!) மும்பை போலீசுக்கு குமார், ஹிட் லிஸ்டி லிருந்த தகவல் தெரிந்திருந்தும், அவரிடமிருந்து எந்தவிதப் புகாரும் இல்லாததால் ஆக்ஷன் எடுக்கவில்லையாம்.

"திரை உலகுக்கும் அண்டர்வர்ல்டுக்கும் கொடுக்கல் வாங்கல் சகஜம்; அவர்களைப் பற்றி இவர்கள் புகார் செய்தால், இவர்களைப் பற்றிய வண்டவாளங்கள் வெளியே வந்து விடுமோ என்ற பயம்" - இது போலீசின் சால் ஜாப்பு!

"திரைத் துறையை ஒரு தொழிலாக நாம் அங்கீகரிப்பதில்லை; வங்கிகள், நிதி நிறுவனங் களின் உதவி இவர்களுக்குக் கிடைக்காததால், டான்கள் மூக்கை நுழைக்கிறார்கள்" என, துணை முதல்வர் கோபினாத் முண்டே துப்பறிந்திருக்கிறார்.

இருந்தாலும் பாலிவுட்டில், "இன்று ஆடியோ மன்னன்; நாளை யாரோ?" என்ற நடுக்கம்தான். லாதூர் பூகம்பம் ஏற்படுத்தியு தைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான ஆழமான நடுக்கம் இது!

— ஜெயஸ்ரீராஜ்

வட்டமேஜை

✉ தலையங்கம் கண்டேன். ஒவ்வொரு வரியும் ஜனநாயக மரபை மீறும் தலைவர்களின் நெற்றிப் பொட்டில் 'நச்'சென்று அறைவது போல் இருந்தது.
திருச்சி - 22, மு. கருணாநிதி.

✉ லாலுவின் செயல்களுக்கு சப்பைக்கட்டு கட்டும் முதல்வர் கருணாநிதியையும் உள்துறை அமைச்சரையும் சாடியது சிறப்பு. நல்லதை மனந்திறந்து, வஞ்சனையின்றிப் பாராட்டுவதிலும் தவறு கண்டால் அஞ்சாது சாடுவதிலும் கல்கிக்கு நிகர் கல்கியே! தொடரட்டும் நற்பணி.
பவித்திரமாணிக்கம், ஆரூர். அரசு.

✉ மூன்றும் முத்தான கார்ட்டூன்கள்தாம். என்றாலும் தாமும் முதல்வராக வாய்ப்புள்ளது எனும் நப்பாசையில் சசியும், ஜாடையாக நோக்கும் 'ஜெ'யும் ஒண்டர்ஃபுல்! ஒண்டர்ஃபுல்!!
கும்பகோணம், கே. என். பாலகிருஷ்ணன்.

* ரணதுங்கா



அதிரடி ரிசல்ட்!

✉ தலைமறைவாக இருக்கும் இளவரசனைப் படத்துடன் போட்டாலும் போட்டீர்கள். தமிழக காவல்துறை கையும் களவுமாகப் பிடித்து விட்டது. தங்களின் ஆண்டிமடம் நேரடி ரிப்போர்ட்டுக்குக் கிடைத்த அதிரடி ரிசல்ட் இது!
நெல்லையப்பபுரம், டி. செல்வன்.

✉ 'இதோ இவர்கள் நம்பிக்கை தருகிறார்கள்' கட்டுரை இக்கால இளைய தலைமுறையினருக்கு, பொன்விழாச் சுதந்தரம் காணும் நேரத்தில் வெளியான பொன்னான வரப்பிரசாதம்!
நெய்வேலி, எஸ். இந்துமதி.

✉ ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை மதச்சார்பு இயக்கமாகவும், வன்முறை இயக்கமாகவும் சித்திரிக்கும் இந்தக் காலகட்டத்தில், பரிதாபாத்தில் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்களின் சேவையைப் பாராட்டி எழுதி, கல்கி தேசிய நலனின் அக்கறை கொண்ட மதச்சார்பற்ற நடுநிலை ஏடு என்பதைத் தெளிவுபடுத்தி விட்டது.
தூத்துக்குடி, கே. சதர்ஷன்.

✉ விபத்தின்றி ஓட்ட வழங்கிய டிப்ஸ் அனைவருக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று. லைசென்ஸ் பெறும்போது இதனை ஜெராக்ஸ் எடுத்து வழங்கினால் நல்ல பலன் கிடைக்கும்.
சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

✉ சாருநிவேதிதாவின் 'மயக்கம்' சிறுகதையின் வடிவமைப்பு வித்தியாசமாக இருந்தது. கதையின் முடிவு யதார்த்தமாய் மனதைத் தொடும் வகையில் இருந்தது. பாராட்டுக்கள்.
வலையபட்டி, எம். பாலசுப்ரமணியன்.

✉ நம் கிரிக்கெட் டீம் செலக்ஷன் பற்றி மொகிந்தர் அமர்நாத் கூறியது முற்றிலும் சரியே. என்றைக்குத் தங்களது விருப்பு வெறுப்புக்களை மறந்து, திறமையாளர்களைச் சேர்த்துக் கொள்ள கமிட்டி முன்வருகிறதோ அன்றுதான் கிரிக்கெட்டில் நம் நாட்டின் புகழ் மீண்டும் ஓங்கும்.
திருப்பரங்குன்றம், டி. கே. சுப்பிரமணியன்.

✉ துன்பம் ஒருவரையே துரத்தும் என்பது போல, தாயுமானவன் சிறுகதை காயத்ரி நிலைகண்டு கலங்கினேன். இதுபோல் துன்பம் யாருக்கும் வரக்கூடாது.
குமராட்சி, எம். பிரபு.

✉ 'நீங்கள் கேட்டவை' பகுதியில் இலங்கை அணி பற்றிய வாசகரின் கேள்விக்கு பதிலாக, கேப்டன் ரணதுங்காவைப் பற்றிக் கூறிவிட்டு ஜெயசூரியாவின் படத்தைப் போட்டு விட்டீரே!
சென்னை, கே. ஆர். உதயகுமார்.

(தவறுக்கு வருந்துகிறோம். இதோ ரணதுங்கா போட்டோ. - ஆர்.)

✉ நல்ல தூக்கம் தூங்க ஆசையா? 'டிப்ஸ்' களைப் படிக்க.. படிக்க.. தூக்கமோ தூக்கம். தூங்குபவர்களை எழுப்பவும் கொஞ்சம் 'டிப்ஸ்' தருவீர்களா!
கோவை, ஏ. எஸ். இராமசாமி.



''திருடப் போகும்போது நேத்து வீட்டுக்காரங்க என்னை பிடிச்சுட்டாங்க!''

''அடடா, அப்புறம்?''

''போலீஸ் வந்ததுக்கப்புறம்தான் எனக்கு மூச்சே வந்தது!''

— பா. ஜெயக்குமார்



''நான் கல்லூரியில் படிக்கும்போது தேர்வில் 'காப்பி' அடித்தேன் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் கூறுவது தவறான குற்றச்சாட்டாகும்! உண்மையில் நான் கல்லூரி கேன்டீனில் சப்ளையராக வேலை பார்க்கிறபோதுதான் 'காப்பி' அடித்தேன் என்று தெளிவுபடுத்த விரும்புகிறேன்!''

— ஜீயெஸ்



''அந்த கண் டாக்டர் போலியா? எப்படி சொல்ற?''

''எல்லாம் ரெண்டு ரெண்டாக தெரியுதுன்னு சொன்னா ஒரு கண்ணை மூடிக்கிட்டுப் பாருன்னுட்டாரே!''

— பொன்மலை ஆர். பிரகாஷ்



''நர்ஸ், நான் பண்ணிய முதல் ஆப்ரேஷன் எப்படி?''

''கொன்னுட்டீங்க போங்க!''

— எஸ். மோகன்

ஸ்மைல் ப்ளீஸ்...!

சிவாஜிக்குப் பாராட்டு விழா!

கோவையில் கோலாகலம்!

தாதா சாகிப் பால்கே விருது பெற்ற சிவாஜிக்கு, முதலில் பாராட்டு விழா நடத்தும் பெருமையைத் தட்டிக் கொண்டு போனது கோவை (மெட்ரோ) ரோட்டரி சங்கம்.

பி.எஸ்.ஜி மருத்துவக் கல்லூரி அரங்கில் பிரம்மாண்டமான விழா. விழா மொத்த செலவையும் ஏற்று சந்தோஷப்பட்டது பொன்விழா காணும் கோவை கிருஷ்ணா ஸ்வீட்ஸ். ஒரு பேச்சாளர், விழாவில் பூமாலைக்கு பதிலாக, 'மைசூர்பா' மாலை போடுவார்களோ என்று எதிர்பார்த்ததாய்க் கூறி விழாவைக் கலகலப்பாக்கினார்.

விழாவில் பிரமுகர்கள் பேசியதன் சில பகுதிகள் :

கிருஷ்ணராஜ் வானவராயர் :
சிவாஜி, சென்னையில் காங்கிரஸ் மாநாடு நடந்தபோது, வீரபாண்டிய கட்ட பொம்மன் நாடகம் போட்டார். சிவாஜியின் நடிப்பில் மெய் மறந்த பண்டித நேரு, சிவாஜியின் நடிப்பைப் பார்த்த பின்பு, என் உடம்பில் தேச பக்தி இன்னும் அதிகமாகி விட்டது என்று பாராட்டினார்.

கப்பலோட்டிய தமிழன் பார்த்த வ.உ.சி.யின் பிள்ளை, என் தந்தை மறுபடியும் உயிர் பெற்று வந்தது போல உணர்ந்தேன் என்றார்.

இதையெல்லாம் விடப் பெரிய பாராட்டு, கௌரவம் சிவாஜிக்குத் தேவையில்லை!

ஏவி.எம். சரவணன் :
இரண்டாண்டுகளுக்கு முன், அனைத்து திரைப்பட அமைப்புகளின் சார்பாகவும், பால்கே விருதுக்கு, சிவாஜி பெயரை ஏகமனதாய் சிபாரிசு செய்தும், அவர் புறக்கணிக்கப்பட்டார்.

இந்த முறை அவருக்கு விருது கொடுத்ததற்காக, மத்திய அமைச்சரைப் பாராட்டப் போனபோது, "நான் பாராட்டை ஏற்க முடியாது. காரணம், விருதுக்குரியவரைத் தேர்ந்தெடுக்க ஒரு கமிட்டி போட்டோம். கமிட்டி சிவாஜியைத் தேர்ந்தெடுத்தது. நான் அந்த விஷயத்தில் தலையிடவே இல்லை" என்றார். உடனே நான், "கமிட்டி அமைத்து, அதன் பின் தலையீடு எதுவுமில்லாமல், சுதந்தரமாய் தகுதியானவரைத் தேர்ந்தெடுக்க வழி செய்ததற்கே உங்களைப் பாராட்டியாக வேண்டும்" என்றேன். அமைச்சர் சிரித்து விட்டார்!

சத்யராஜ் :
58-ல் என் சித்தப்பா கல்யாணத்துக்கு சிவாஜி வந்திருந்தார். நான் அப்போ சின்ன பையன். அவர், என்னைத் தன் மடியில் உட்கார வெச்சு கொஞ்சினாரு. அப்போ காத்தவராயன் படம் ரிலீஸ் ஆகியிருந்தது. நான், சிவாஜி பேரு காத்தவராயன்னே நெனைச்சிகிட்டிருந்தேன்.

பிற்காலத்தில் நடிகனாக முயற்சி செய்தபோது. சிவாஜியை சந்திச்சேன். 'என்ன மூஞ்சியில தாடி! அதை முதல்ல எடு! நடிகன்னா, மழமழன்னு முகம் இருக்கணும். அப்பதான் எது மாதிரி வேணும்னாலும் மேக்அப் போட முடியும்'னு அட்வைஸ் பண்ணினாரு. நானும் தாடியை எடுத்தேன். சினிமா வாய்ப்புகள் கிடைத்தது. இன்னிக்கு ஓரளவுக்குப் பிரபலமாகி, உங்க முன்னாடி நிற்கிறேன்.

சிவாஜி பேர்ல ஒரு அவார்டு ஏற்படுத்தி, என்னை மாதிரி கத்துக்குட்டிங்க எல்லாம் எப்பவாவது நல்லா நடிச்சா, அந்த விருதைக் கொடுத்து, கௌரவிக்கணும்ங்கறது என்னோட ஆசை.

பாக்யராஜ் :
நான் தாவணிக் கனவுகள் எடுத்தப்போ,



• ஏவி.எம். சரவணன்



• சோ



• பாக்யராஜ்



• சத்யராஜ்

"சிவாஜி, அன்சக்ஸஸ்ஃபுல்



அரசியல்வாதியாகவே இருக்கட்டும்!"

சிவாஜி சார் நடிச்சா நல்லா இருக்கும்னு நினைச்சேன். ஆனா, நேரடியா போய்க் கேட்க பயம். ஒரு தூது விட்டுப் பார்த்தேன்.

அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா?

"நான் நடிகன். யார் படத்துலயும் நான் நடிக்கத் தயார். கதையும், என் கேரக்டரும் எனக்குப் பிடிக்கணும். அவ்வளவுதான்! பாக்கியராஜை வந்து கதை சொல்லச் சொல்லுங்க."

எனக்கு இப்ப நெனைச்சாலும் புல்லரிக்குது!

ஷூட்டிங்கின் போது, நடந்த சம்பவம் இது. காலை ஏழரை மணிக்கு ஷூட்டிங்னு சொல்லியிருந்தேன் சிவாஜி சாரிடம். நான் கொஞ்சம் முன்னாடியே ஸ்பாட்டுக்குப் போயிட்டதால, கேமராவை ரெடி பண்ணி, சில இயற்கைக் காட்சி ஷாட்களை எடுத்துக்கிட்டு இருந்தேன். கரெக்டான டயத்துக்கு வந்தார் சிவாஜி. ஷூட்டிங் நடந்துகிட்டிருக்கிறதைப் பார்த்தும் அவர் அப்செட் ஆயிட்டார்.

"நீங்க கரெக்ட் டயத்துக்கு வந்துட்டீங்க. நான்தான் கொஞ்சம் முன்னாடி வந்திட்டதால, சில ஷாட்ஸ் எடுத்துக்கிட்டிருந்தேன்" என்றேன்.

"அது உனக்கும், எனக்கும் தெரியும். மத்தவன் எல்லாம் என்ன நினைப்பான்? ஷூட்டிங்குக்கு லேட்டா வரரார் சிவாஜின்னு தானே?" என்றார். அவர் அந்த அளவுக்கு நேரம் தவறாமை பற்றி சென்சிடிவ் ஆனவர்.

சோ :

தேச விரோதியாய் அந்த நாள் படத்தில், நேரெதிராய் கப்பலோட்டிய தமிழனில் தேச பக்தர் வ.உ.சி. திரும்பிப் பாரில் ஸ்திரி லோலன் அதற்கு நேரெதிராய் தவமே உருவான அப்பர் கேரக்டர். பொறுப்பில்லா பிள்ளையாய் சபாஷ் மீனாவில். மோட்டார் சுந்தரம் பிள்ளையிலோ ஒரு கண்ணியவானாக – இப்படி நேரெதிரான கேரக்டர்களில் திறம்பட நடிக்க முடியுமென்றால் அது சிவாஜியால் மட்டுமே சாத்தியம்.

இவருக்கு ரெண்டே கண்தான். ஆனால் அதை வைத்துக் கொண்டு, எத்தனை விதமான பார்வைகளை இவர் காட்டுகிறார் என்று நான் வியப்பதுண்டு.

கேமராவை வெச்சிட்டா, இவரைப் போல நடிக்க முடியாது. கேமராவை எடுத்துட்டா, இவருக்கு நடிக்க வராது.

இவரை அன்சக்ஸஸ்ஃபுல் அரசியல்வாதின்னு இங்கே சிலர் குறிப்பிட்டார்கள். அரசியல்ல வந்து லஞ்சம் வாங்கி, ஊழல் பண்ணி ஜனங்களை ஏமாத்தி, கொள்ளையடிச்சு, கடைசியில பதவி பறிபோகறபோது, மனைவியை முதலமைச்சராக்கறவர்தான் வெற்றிகரமான அரசியல்வாதின்னா, இவர் அன்சக்ஸஸ்ஃபுல் அரசியல்வாதியாகவே இருக்கட்டும்.

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**

● கே. ரமேஷ்ராமன், சென்னை - 52

? 'என்னை நம்பிக் கெட்டவர்கள் இல்லை...' ஜெயலலிதாவின் பேச்சு பற்றி...?

! 'ஊழல் வழக்குகளைச் சந்தித்துக் கொண்டிருப்பவர்களைத் தவிர' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டிருப்பார்!

● பா. ரவிச்சந்திரன், அசூர்.

? 'இன்னும் ஒன்றரை ஆண்டுகளில் ஆட்சியைப் பிடிப்போம்' என்கிறாரே சீதாராம் கேசரி?

! 'ஹய்யா! ஜாலி! இன்னும் ஒன்றரை ஆண்டுகளுக்கு நம்ம ராஜ்யம்தான்' என்று ஐ.முவினர் சந்தோஷப்படுகிறார்கள்!

● எல். முருகன், மதுரை - 1

? லாலுவுக்கு நெஞ்சு வலியாமே...?

! நெஞ்சுவலி ஒரு தேசிய நோய். தேர்ந்த அரசியல்வாதிகளுக்கு மட்டுமே வருவது. அதுவும் குறிப்பிட்ட சில சமயங்களில் மட்டும்... இந்த நோய் வடக்கே தோன்றினாலும் பின்னால் அதை மிகத் திறம்பட பயன்படுத்திய பெருமை தமிழனையே சாரும் என்பதை நினைக்க, புல்லரிக்கிறது போங்கள்!

● லீலா ராம், தக்கலை.

? 'சுதந்திரம்' என்ற பதம் கல்கியில் 'சுதந்தரம்' என ஆனது ஏன்?

! அகராதியில் இரண்டுமே இடம் பெற்றுள்ளன.



• தேசிய நோய்!

லாலுவுக்கு நெஞ்சு வலியாமே?

● ஜி. கருணாகரன், கடலூர்.

? நம் நாட்டின் மிகப் பெரிய எதிரி ஊழல் தான் என்கிறாரே பிரதமர்?

!ஆமாமாம்! அதிலும் அடிமட்டத்தில் இருப்பவர்களைத்தான் குறி வைக்கிறார். நாமெல்லாம் டெலிபோன், மின்னிணைப்பு வேண்டி அரசு அலுவலகங்களில் லஞ்சம் தராமல் இருந்து விட்டால் ஊழலும் ஒழிந்துவிடுமாம்! வேரில் கரையான் அரித்துக் கிடக்க, இலையில் பூச்சி மருந்து அடிக்கிற கதைதான்.

● வெ. சந்திரா, விழுப்புரம்.

? 'எனக்கெதிரான வழக்குகளை மீண்டும் விசாரிக்க மாயாவதி அரசு முயற்சி செய்தால், தீக்குளித்து தற்கொலை செய்து கொள்வேன்...' என்று பூலான் தேவி கூறியிருப்பது பற்றி உங்கள் கருத்தென்ன?

! மாயாவதி நடத்துவது 'drama' என்றால் பூலான் தேவியினுடையது melodrama.

● ப.செ. குமார், சென்னை - 94

? 'ஆங்கிலத்தைக் கலந்து பேசி தமிழைக் கெடுக்காதீர்கள்' என்று அமைச்சர் தமிழ்க்குடிமகன் திருவையாறில் பேசியிருக்க, முதல்வரோ கல்கி பேட்டியில் (20.6.97) "நான் காலையில் வாக்கிங் போவேன், மஸாஜ் செய்து கொள்வேன்" என்றும் 'பட்ஜெட்', 'ராங்க்', 'ஃபைல்', 'கார்டன்' என்று ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தியும் பதில் கூறியிருக்கிறாரே... முரண்பாடாக இல்லையா?

! இன்றைய சூழலில் பல ஆங்கிலச் சொற்கள் தமிழாகிவிட்டன. உணர்வில் கலந்தவற்றை ஒதுக்க முயன்று, செயற்கையாகப் பேசுவதை விட இது மேல்.

● ப. இராம் முருகன், சிவகங்கை.

? 'கொச்சையான வார்த்தைகளைப் பயன்படுத்திப் பாடுவதில் தவறில்லை. மக்களைச் சுலபமாகச் சென்றடைய இது நல்லவழி' என்கிறாரே இசையமைப்பாளர் சிற்பி... இது பற்றி?

! எதை சுலபமாக மக்களிடம் எடுத்துப் போகிறார்களாம்? ஆபாசத்தைத் தானே! அதனால் இது நல்ல வழி அல்ல; கெட்டவழி ஆகிறது!

● அ. சுகுமார், காட்டுக்கானூர்.

? ராப்ரி தேவி முதல்வரானது குறித்து எந்த பெண்கள் அமைப்பும் குதூகலிக்கவில்லையே...?

! ஆண் ஆதிக்கத்தின் உச்சம் அது என்னும் போது எப்படி குதூகலிக்க முடியும்!


● ஆர். ராஜதுரை, சீர்காழி.

? "நடிகர்

• நல்முத்து!



• 'நத்திங் ஸ்பெஷல்!'







❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
மு. முருகேசன்,
28 B, லெ. தீ. தெரு,
ராமேஸ்வரம் - 623 526.

• நடிப்புப்...

• ....போட்டி...!

சங்கக் கடனை நடிகர்கள்தான் கட்ட வேண்டும். அது நம் கடன். அதற்கு எப்படி பொது மக்கள் வரிப்பணத்தைக் கேட்க முடியும்?'' என நடிகை ரேவதி பேசியுள்ளாரே?

! நடிகை உதிர்த்த நல்முத்து!

● எம். மும்தாஜ், எலந்தங்குடி.

? ஸ்டெர்லைட் விவகாரத்தை முதல்வர் ஆறப்போடுவது புத்திசாலித்தனமா அல்லது அதிபுத்திசாலித்தனமா?

! பழி ஓரிடம்; பாவம் ஓரிடம் என்பதை ஆய்வுக் கமிட்டி உறுதிப்படுத்தி விட்டதால் ஸ்டெர்லைட் மறுபடி இயங்க அனுமதி கிடைத்துவிட்டதே!

● பாலு. கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்.

? ஆண்டிமடம் காவல் நிலையத்தையே சூறையாடிய தீவிரவாதிகளைப் பிடிப்பதில் இன்றுவரை எந்தத் துப்பும் துலங்காமல் இருப்பது பற்றி?

! இளவரசன் பிடிபட்டதும், தொடர்ந்து சென்னையில் குண்டுகள் வெடிப்பதும் முறையே முன்னேற்றம், பின்னேற்றம்.

● வசந்தா சித்திரவேலு, கருப்பம்புலம்.

? கணவருக்குக் கஷ்டத்தில் உதவுவதுதானே மனைவியின் கடமை?

! கடமைதான். ஆனால் கஷ்டம் எப்படி, ஏன் வந்தது என்பதையும் யோசிக்க வேண்டும். கணவனுடைய குற்றங்களால் வந்திருந்தால் அவர் திருந்துவதாக ஒரு வாக்குறுதியாவது வேண்டுமல்லவா?

● எம். புஷ்பராசன்,
பெங்களூர் - 47.

? 'கருணாநிதி உண்மையில் தமிழரே கிடையாது; அவரது பூர்வீகம் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். விவரம் கிடைத்ததும் அம்பலப் படுத்துவேன்...' என்று சு. சுவாமி பேசியுள்ளாரே?

! இப்படி உப்பு பெறாத விஷயங்களில் நேரத்தை வீணடிக்கும் இன்னொரு அரசியல்வாதி தேடினாலும் கிடைக்க மாட்டார்.

● எல். கோபாலகிருஷ்ணன், வேலூர் - 6.

? ஐம்பதாண்டுகளின் சாதனைகள், வேதனைகள் சோதனைகள்...?

! கல்கி சுதந்தரப் பொன்விழா மலரில் காண்க.

● ஏ. கனகசபாபதி, திருச்சி - 18.

? சென்னை மேயர் ஸ்டாலின் தன்னைத்தான் சிங்காரித்துக் கொள்கிறார் என்ற வை.கோ கூற்றுக்கு சென்னைவாசியான தங்கள் பதில் என்ன?

! ஸ்டாலின் மேயரான பிறகு சென்னையில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான மேம்பாடு இல்லை என்பதே உண்மை.

● மு. முருகேசன், ராமேஸ்வரம் ❑

? அ.தி.மு.க.வினர் முன்பு ப. சிதம்பரத்தின் காரை நொறுக்கியதற்கும், தி.மு.க.வினர் இன்று செல்வகுமாரின் காரை நொறுக்கியதற்கும் உள்ள வேற்றுமை என்ன?

! அன்று தலைமையே முறைச்சிக்கிட்டு இருந்தது. இன்று தொண்டர்கள் வரைக்கும்தான் முறைச்சிக்கிட்டிருப்பதாகச் சொல்லிக்கறாங்க!

• மனத்துக்குள் ஒன்று...



• ஐ.மு.வுக்கு ஆறுதல்!




• வேரை விடுத்து...!



• அன்றும்...



• ....இன்றும்!



வருந்திச் சுமக்கிறவர்களே, வாருங்கள்!

இயேசுபெருமான் மக்களுக்கு மத்தியில் ஒவ்வொரு நாளும் பேசினார். கூளாங்கற்களைச் சலவை செய்கிற நதிகளின் ஓரத்தில், நாணல் படுக்கையில் உட்கார்ந்தவண்ணம் மக்கள் அவரைக் கேட்டார்கள்.

அவரை மடக்கிவிட வேண்டுமென்றே பலரும் அவரைக் கேள்வி கேட்டார்கள். அவரோ சாந்தமாக இருந்தார். பலருக்கும் மௌனமே பதிலாக அமைந்தது. அவரது இறுதி நாட்கள் வந்து விட்டதை அவர் உணர்ந்தார். ஆகவே தனது வேலையை முடிப்பதிலேயே முழுக்கவனமாக அவர் இருந்தார்.

கடைசியாக இயேசு எருசலேமை நோக்கிச் செல்லத் தீர்மானித்தார். ஆகவே தமக்கு முன் சில தூதர்களை அனுப்பினார். அவருக்கு இடம் ஏற்பாடு செய்வதற்காக அவர்கள் அன்றைய சமுதாயத்தில் தாழ்த்தப் பட்டிருந்த சமாரியருடைய ஓர் ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

இயேசு வழி நடந்தபோது ஒருவர் அவரை நோக்கி, "நீர் எங்கே சென்றாலும் நானும் உம்மைப் பின்பற்றுவேன்" என்றார். இயேசு அவரிடம், "நரிகளுக்கு வலைகளும், ஆகாயத்துப் பட்சிகளுக்குக் கூடுகளும் உண்டு. மானிடமகனுக்கோ தலை சாய்க்கக் கூட இடமில்லை" என்றார். பின்பற்றுவேன் என்று பேசியவர், "முதலில் நான் போய் இறந்து போன என் தந்தையை அடக்கம் செய்து விட்டு வர அனுமதியும்" என்றார். இயேசு அவரைப் பார்த்து, "இறந்தோரைப் பற்றிக் கவலை வேண்டாம். இறந்தோரைப் பற்றி இறந்தவர்களே கவலைப்பட வேண்டும். அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள். நீர் போய் இறையாட்சியைப் பற்றி அறிவியும்" என்றார்.

வேறொருவரும், "ஐயா, உம்மைப் பின்பற்றுவேன்; ஆயினும் முதலில் நான் போய் என் வீட்டில் உள்ளவர்களிடம் விடைபெற்று வர அனுமதியும்" என்றார். இயேசு அவரை நோக்கி, "கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் என்னைப் பின்பற்றத் தகுதியுள்ளவர் அல்ல" என்றார்.

இதற்குப் பின்பு இயேசுபெருமான் வேறு எழுபத்திரண்டு பேர்களைத் தமது சீடர்களாக நியமித்தார். அவர்களைத் தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்னே இருவர் இருவராக அனுப்பினார். அப்போது அவர் அவர்களை நோக்கிக் கூறியதாவது :

"அறுவடை மிகுதி; வேலையாட்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி, அறுவடையின் உரிமையாளராகிய ஆண்டவரிடம் மன்றாடுங்கள். புறப்பட்டுப் போங்கள்; ஓநாய்களிடையே ஆட்டுக் குட்டிகளை அனுப்புவது போல் உங்களை நான் அனுப்புகிறேன். பணப்பையோ வேறு பையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம்; வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம். நீங்கள் எந்த வீட்டுக்குள் சென்றாலும், 'இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக!' என முதலில் கூறுங்கள். அமைதியை விரும்புபவர் அங்கு இருந்தால், நீங்கள் வாழ்த்திக் கூறிய அமைதி அவரிடம் தங்கும்; இல்லாவிட்டால் அது உங்களிடமே திரும்பிவிடும். அந்த நாளில் அவ்வூர் பெறும் தண்டனை சோதோம் நகரினர் பெறும் தண்டனையை விடக் கடினமாகவே இருக்கும் என உங்களுக்குச் சொல்லுகிறேன்."

"கொராசின் நகரே, ஐயோ! உனக்குக் கேடு! பெத்சாய்தா நகரே, ஐயோ! உனக்குக் கேடு!

சொர்க்கத்தை சொந்தம் கொண்டாட

அறிஞர் விருப்பம்!

இயேசுநாதரின் அதிரடிக் கேள்விகள்!!

ஏனெனில் உங்களிடையே செய்யப்பட்ட வல்ல செயல்கள் தீர, சீதோன் நகரங்களில் செய்யப்பட்டிருந்தால், அங்குள்ள மக்கள் முன்பே சாக்கு உடை உடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து, மனம் மாறியிருப்பர். எனினும் தீர்ப்பு நாளில் தீருக்கும் சீதோனுக்கும் கிடைக்கும் தண்டனையை விட உங்களுக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும். ஆயினும் தீய ஆவிகள் உங்களுக்கு அடிபணிகின்றன என்பது பற்றி மகிழ வேண்டாம். மாறாக, உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப் பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள்" என்றார்.



திருச்சட்ட அறிஞர் ஒருவர் எழுந்து அவரைச் சோதிக்கும் நோக்குடன், "போதகரே, சொர்க்கத்தை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "திருச்சட்ட நூலில் என்ன எழுதியிருக்கிறது? அதில் நீர் என்ன வாசிக்கிறீர்?" என்று அவரிடம் கேட்டார். அவர் மறுமொழியாக 'உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும் முழு மனத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக; உன் மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்று எழுதியுள்ளது" என்றார்.

அவர், தம்மை நேர்மையாளர் எனக் காட்ட விரும்பி, "எனக்கு அடுத்திருப்பவர் யார்?" என்று இயேசுவிடம் கேட்டார். அதற்கு அவர் மறுமொழியாக ஒரு கதையைக் கூறினார்.

ஒரு மனிதர் எருசேலம் பட்டணத்திலிருந்து எரிக்கோ பட்டணத்திற்குப் போனார். வழிநெடுக மணற் குன்றுகள். எங்கும் பள்ளத்



தாக்குகள். உயரமும் ஒருவகைப் பள்ளமே என்பதைக் காட்டுகிற மாதிரி திட்டுத் திட்டான திடல்கள் காணப்பட்டன. முள் செடிகளால் மணற்குன்றுகள் மறைந்து கிடந்தன.

தன்னந்தனியாக பயணப்பட்ட மனிதனை இரக்கமற்ற அரக்கர்களான திருடர்கள் அடித்துப் போட்டுவிட்டு அவனிடமிருந்த பொருட்களை எல்லாம் வாரிக் கொண்டு போனார்கள். அடிபட்டவனுக்கு, பொருளைத்தான் பறித்தார்கள்; நம்மை ஏன் போட்டு அடிக்கிறார்கள் என்பது புரியவே இல்லை. உண்மை என்னவென்றால் கொண்டு வந்ததுதான் கொண்டு வந்தாயே, கூடுதலாக ஏன் கொண்டு வரவில்லை என்று கருதி அத்திருடர்கள் இவனை அடித்து உதைத்தார்கள்.

குற்றுயிரும் குலை உயிருமாக இரத்த வெள்ளத்தில் அந்த மனிதர் கிடந்தார். மயக்கமான நிலையில் அந்த மனிதர் கிடந்தபோது மோசேயின் சட்டங்களை முழுவதுமாக அறிந்த அறிஞர் ஒருவர் அவ்வழியாக வந்தார். அடிபட்டுக் கிடந்தவனைப் பார்த்த அவர் முகத்தைத் திருப்பிக் கொண்டு போனார். அடிபட்டுக் கிடந்தவன் ஏதோ சொல்லுவதற்கு முயன்றான். மெத்தப் படித்த அந்த மேதாவியோ, அவனது முனகலைக் கேட்டும் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

அடுத்து அவ்வழியாக ஆண்டவனுக்கும் மக்களுக்கும் இடையில் பாலமாக இருக்கிறோம் என்று பரவசப்படுகிற குரு ஒருவர் குறுகி வழிநடந்தார். இரத்தத் தடாகத்தில் சொர்ண விக்கிரகமாகக் கிடந்தவனை அவர் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. வழியில் என்ன அபசகுனம் என்று மனதிற்குள்ளேயே முனங்கிக் கொண்டு அவரும் அப்பாலே நடந்தார். குருவானவரின் கருணை மிகுந்த கடவுள், பளிங்குக் கல்லால் ஆன பீடத்தில் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருப்பதாகத்தான் அவர் கருதினார். அதே கடவுள் ஏழையான மனிதனிடத்தில் எப்போதும் இருந்ததில்லை என்று உறுதியாக நம்பினார்.

அடிபட்டுக் கிடந்தவனை உச்சிச் சூரியன் வேறு உரித்து எடுத்தான். மூன்றாவதாக சமாரியன் ஒருவன் அந்த வழியாக வந்தான். சமாரியர்கள் அக்காலத்தில் தீண்டப்படாதவர்கள். மேல்சாதிக்காரர்கள் எவரும் அவர்களிடத்தில் அருந்துவதற்குக் கூட தண்ணீர் கேட்க மாட்டார்கள். ஆனால் அந்தச் சமாரியன் அறுபட்டுக் கிடந்தவனின் சாதி, சமயத்தைப் பாராமல் அவனைத் தனது கோவேறுக் கழுதையில் தூக்கி வைத்தான். அவனைப் பத்திரமாகப் பிடித்துக் கொண்டு நடந்து ஒரு சத்திரத்தை நோக்கிப் புறப்பட்டான்.

வழியில் அடிபட்டவன் வேதனையால் துடித்ததைக் கண்டு இரங்கி, அவனது காயங்களில் திராட்சை மதுவையும், எண்ணெயையும் வைத்துக் கட்டினான். சத்திரத்தைச் சேர்ந்தவுடன் அங்குள்ள நாட்டு மருத்துவரிடம் கனிவாகப் பேசினான். அடிபட்ட மனிதனுக்குக் கட்டுப் போடும்படியும், அதற்கு மேல் ஆகிற மருத்துவச் செலவுகளுக்குப் பணம் தருவதாகவும் சொல்லிவிட்டுப் போனான்.

தன்னை ஆரத்தழுவி அன்பு காட்டி தனது காயங்களுக்குக் கட்டுப் போட்டு, மருத்துவச் சத்திரத்தில் சேர்ப்பித்த சமாரியனை அந்த நோயாளி தனது கண்களுக்குள் பதியம் வைத்துக் கொண்டான் என்று கதையை முடித்தார் கர்த்தர்.

"கள்வர் கையில் அகப்பட்டவருக்கு இம்மூவருள் எவர் அடுத்திருப்பவர் என உமக்குத் தோன்றுகிறது?" என்று இயேசுபெருமான் கேட்டார். அதற்குத் திருச்சட்ட அறிஞர், "அவருக்கு இரக்கம் காட்டியவரே" என்றார். அப்போது இயேசு பெருமான் "நீரும் அப்படியே இரக்கம் காட்டும்; வருந்திச் சுமை சுமக்கிறவர்களே என் அருகே வாருங்கள், நானே உங்களைத் தேற்றுவேன்" என்றார்.

(முற்றும்)



"உங்க படத்துல சம்பந்தம் இல்லாம ஹீரோயினை நாய் கடிக்கிற மாதிரி சீன் வச்சிருக்கீங்களே, ஏன்?"

''ஹீரோயினோட தொப்புளைக் காட்டறதுக்கு எனக்கு வேற ஐடியா தோணலை...''



"எப்படிங்க தலையில இவ்வளவு பெரிய அடிபட்டுது..?"

''நேத்து சாப்பிடும் போது புரை ஏறிடுச்சி... அப்ப என் மனைவி பக்கத்துல இருந்தா...!"

\- செங்குன்றம் கே. ரமேஷ்ராமன்

வியர்வைப் பெருக்கு!
"டீன்-ஏஜ்" பருவத்தினர் கவலை!!



வியர்வை கண்டு அயராதீர்கள்!

வியர்வை நாற்றம் - இந்தப் பிரச்னை கணிசமானவர்களுக்கு உண்டு. முக்கியமாக டீன் ஏஜ் பருவத்தினருக்கு. இது குறித்து அதிகம் கவலைப்படுபவர்கள் அவர்கள்தாம்!

என்றாலும் "ஏன்தான் இப்படி வியர்த்துத் தொலைக்கிறதோ?" என்று எரிச்சல்பட வேண்டாம். வியர்ப்பது என்பது உடலின் இயல்பான ஓர் இயக்கம். அதிகப்படி நீர்ச்சத்தை வெளியேற்றுவதோடு, உலர்ந்த சருமத்தை கொஞ்சம் ஜில்லென்று வைத்துக் கொள்வதும் வியர்வை உண்டாகக் காரணம்.

வியர்வை மிக அதிகமாக வெளியேறுமிடம் அக்குள். காரணம் வியர்வைக்குக் காரணமான "அபோக்ரைன் சுரப்பிகள்" இந்த இடத்தில்தான் அடர்த்தியாகக் காணப்படுகின்றன. அதுவும் குழந்தைப் பருவத்தை தாண்டிய பிறகு, இளமையில் அக்குளில் ரோமங்கள் அதிகமாக வளரும் காலகட்டத்தில், வியர்வைத் தொல்லை மிக அதிகமாக இருக்கும்.

பொதுவாக வியர் வையில், நாற்றமடிப்பதற்கு எதுவுமில்லை. ஆனால் தோலில் உள்ள பேக்டீரியாக்கள் இந்த வியர்வையுடன் கலக்கும்போது, துர்நாற்றம் எழுகிறது. இந்த பேக்டீரியா கிருமிகள் உயிர்வாழ லேசான ஈரப்பதம் அவசியம். எனவே ரோமம் படர்ந்த பகுதிகளில் இவை அதிகம் தென்படுகின்றன.

"வியர்கிறதா? நன்றாக சோப்பு தேய்த்துக் குளியுங்கள்" எனறு சுலபமாகச் சொல்லிவிடலாம். இது நல்லதொரு தீர்வும் கூட. இருந்தாலும் குளித்துவிட்டுப் போன கொஞ்ச நேரத்திலேயே கசகசவென்று வியர்வை பொங்கினால், மறுகுளியலுக்காக வீட்டுக்கு வருவதற்கு எத்தனை பேரால் சாத்தியப்படும்?

டால்கம் பவுடரை உடல் மீது - முக்கியமாக வியர்வை சுரக்கும் பகுதிகளில் சற்று அதிகமாகவே - தூவிக் கொள்ளுங்கள். பலரும் டால்கம் பவுடர் என்பது முகத்தில் பூசிக்கொள்ள மட்டுமே என்று எண்ணுகிறார்கள். உண்மை நேர்மாறானது. உடல் மீது பரவலாக தடவிக் கொள்ளத்தான் டால்கம் பவுடர் தயாரிக் கப்படுகிறது. குளித்தவுடன் இப்படி தடவிக் கொள்வது நல்லது.

இப்போதெல்லாம் தரமான நிறுவனங்களின் "டியோடரண்ட்"டுகள் விற்பனைக்கு வந்துவிட்டன. அவற்றையும் பயன்படுத்தலாம்.

வியர்வை நாற்றத்துக்கு நம் உடல் மட்டுமல்ல, நாம் அணியும் உடைகள் கூடக் காரணமாக அமைந்து விடுவதுண்டு. செயற்கை இழை கொண்ட துணிகளால் 'மூச்சு விட முடியாது'. எனவே இவற்றை அணியும் போது துணியில் வியர்வை தங்கி அதிக நாற்றத்தை ஏற்படுத்தும். பருத்தி ஆடைகளில் இந்தத் தொல்லை குறைவுதான்.

சில பேருக்கு உள்ளங்கையில் எக்கச்சக்கமாக வியர்த்துக் கொட்டும். நரம்புகள் வெகு சீக்கிரம் தூண்டப்படுவதால்தான் இந்த நிலை என்று சொல்லிவிடலாம். ஆனால் சம்பந்தப்பட்டவருக்கு இது ஆறுதல் அளித்துவிடாது. அடிக்கடி கைகளை நீரில் கழுவிக் கொண்டு, கூலாக அவற்றை வைத்திருப்பது ஓரளவிற்கு உதவும்.

— அருண் சரண்யா



புது உலக

எஸ். ஐ. ஆர்.

நான் ஒரேயொருத்திதான். என்னால் எல்லாவற்றையும் செய்து விட முடியாது என்றாலும் சில வற்றையாவது செய்ய முடியும். அப்படி என்னால் செய்ய முடிகிற காரியங்களைச் செய்ய முடியாது என்று நான் எப்போதும் சொல்ல மாட்டேன்.

— ஹெலன் ஹெல்லர்

அது 1950-ம் ஆண்டு. நான் மருத் துவராக வேலை பார்க்கும் அந்த மருத் துவக் கல்லூரியின் தலைவர் என்னை அழைத் திருந்தார். அவருடைய அறைக்குச் சென்ற போது, அவருடைய அறையில் ஐந்து பெற்றோரும் இருந் தனர். எதற்காக அவர்கள்?

அந்த ஐந்து பெற்றோருக்குமே ஐந்து குழந்தைகள். அந்த ஐந்து குழந்தைகளுமே மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள்.

அந்தக் குழந்தைகள் மூளை வளர்ச்சி குன்றிய

முதல் மனிதன்!

டாக்டருக்குப் புதுப்பதவி!

அமெரிக்க ஜனாதிபதி அறிவிப்பு!!

காரணத்தாலேயே, மற்றவர்களுக்குச் சிகிச்சையளிக்கும் இடங்களில் சரிவர நடத்தப்படவில்லை. சரியானபடி சிகிச்சை கிடைக்காதது மட்டுமல்ல; சமயங்களில் அவமானப் படுத்தவும் பட்டார்கள். அதனால் நொந்து போன நிலையிலிருந்தனர் அந்தப் பெற்றோர்.

அவர்கள் என்னிடம் வேண்டிக் கேட்டுக் கொண்டது ஒன்றே ஒன்றுதான்: "எங்கள் குழந்தைகளுக்குச் சிகிச்சையளிப்பதற்காக தனி கிளினிக் ஒன்றை ஆரம்பியுங்கள். வாரத்திற்கு ஒரு முறை - ஒரேயொரு முறை சிகிச்சையளித்தால் போதும். தயவு செய்து செய்யுங்கள்!"

அந்தப் பெற்றோரின் வேண்டுகோள் என்னை மிகவும் இளகச் செய்து விட்டது. தங்களது குழந்தைகள் மூளை வளர்ச்சி குன்றியவர்கள் என்பதாலேயே அவர்கள் படுகிற கஷ்டங்களும் அவமானங்களும் என்னை ரொம்பவே பாதித்து விட்டன. எனவே உடனடியாக ஒரு கிளினிக்கைத் தொடங்கினேன். வாரத்தில் ஒரு நாள் காலையில் அந்தக் குழந்தைகளுக்குச் சிகிச்சையளிக்கத் தொடங்கினேன். அதுதான் என் வாழ்க்கையில் மிகப் பெரிய திருப்புமுனையாக அமையப் போகிறது என்பது எனக்கு அப்போது தெரியாது!

மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக நான் ஆரம்பித்ததுதான், உலகத்திலேயே அப்படிப்பட்ட குழந்தைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட முதல் கிளினிக்! மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்து, என்னிடம் சிகிச்சை பெற ஆரம்பித்தனர்.

கூட்டம் பெருகப் பெருக அவர்களுக்குச் சிகிச்சையளிக்க வாரத்தில் ஒருநாள் எனக்குப் போதவில்லை. என்ன செய்வது? ஒன்று, வாரத்தின் எல்லா நாட்களுமே நான் அவர்களுக்குச் சிகிச்சையளிக்க வேண்டும். அதாவது எனது மருத்துவ வாழ்க்கை முழுவதையுமே மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்காக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் அல்லது இவர்களுக்குச் சிகிச்சையளிப்பதிலிருந்து நான் முற்றிலுமாக விலகிக் கொண்டு விட வேண்டும் என்கிற இக்கட்டான சூழ்நிலை.

நான் என் வாழ்க்கையையே மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்காக அர்ப்பணித்துக் கொண்டு விடுவது என்று தீர்மானித்தேன்.


என்னிடம் முதன்முதலாகத் தங்கள் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்தார்களே, ஐந்து பெற்றோர், அவர்கள் என்னைத் தங்களது மருத்துவராக மட்டும் கருதவில்லை. தங்களைப் போல் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளைக் கொண்ட பெற்றோரின் - குழந்தைகளின் பிரச்னைகளைச் சமூகத்துக்கு எடுத்துச் சொல்லுகிற வழக்குரைஞராகவும், அப்படிப்பட்ட குழந்தைகளுக்குச் சிகிச்சையளிக்கும் புதுப்புது முறைகளைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியாளராகவும் கருதினார்கள்! மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்காக National Association for Retarded Citizens என்கிற அமைப்பையும் தோற்றுவித்தார்கள், அவர்கள்.

அமெரிக்க ஜனாதிபதியான ஜிம்மி கார்ட்டர் என்ன செய்தார் தெரியுமா? 'National Institute of Handicapped Research'ன் முதல் இயக்குனராக என்னை நியமித்தார்!

- இப்படித் தம் கதையைச் சொல்பவர் யார் தெரியுமா? அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் மார்கரெட் ஜெ. ஜியானினி. (Margaret J. Giannini, M.D.)

ஆக, சிறு சிறு துளிகள் சேர்ந்துதான் பெரும் வெள்ளத்தை உருவாக்குகிறது. எத்தனை பெரிய கட்டடமும் ஒவ்வொரு செங்கல்லாகத் தான் எடுத்து வைத்துக் கட்டப்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டால் வெற்றி நிச்சயம்.


நடக்குமென்பார்,



மேஷம் :

உபயோகமில்லாம ஊர் சுத்தற ராசி சார் உங்களுக்கு. என்னவோ வேண்டுதல் மாதிரி மாங்குமாங்குனு அலைவீங்க. ஆனா பைசா பிரயோஜனமில்லை. அட, பிரயோஜனமில்லாட்டா போகட்டும். கைக்காசு வேற பிக்பாக்கெட்டுல போச்சுன்னா என்னாங்க பண்றது? கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்துக்கங்க. இதுல முக்கியமான சமாசாரம் என்னன்னா, இந்த மாதிரி ரப்சர்னால கொஞ்சம் டென்சனாகி, 'ஆவூ'ன்னு கத்துவீங்க. நிம்மதி காணாமப்பூடும். இந்த ஒரு வாரம் மட்டும் உணர்ச்சிவசப்படாம புத்தர் மாதிரி இருந்து பாருங்க. அப்பால பிராப்ளம் இல்லை!

ரிஷபம் :



இந்த... கதை கிதை எளுதறவங்க, பாட்டு, டான்ஸுன்னு கலை வாழ்க்கை வாழுறவங்களுக்கு இந்த வாரம் சூப்பரா இருக்குது சார்! புதுசு புதுசா சில நல்ல சான்ஸ் அடிக்கும். கவனமா பயன்படுத்திக்கங்க. பிறகு, இந்த ராசி ஆளுங்களுக்குக் கல்யாணம் ஆவாம இருந்திச்சின்னா, இந்த வாரத்துல பட்சி சிக்கிடும் – சிலருக்கு ஆபீஸ்தான் கொஞ்சம் அலைக்கழிக்கும். ராத்தூக்கம் காணாமப் போறாப்பல சோலி சும்மா மென்னியப் புடிக்கும். உடம்பைப் பார்த்துக்கிடுங்க உங்க உடம்பை இல்லைங்க. உங்க அம்மா உடம்பை! கொஞ்சம் அவங்களுக்குப் படுத்தும்னு தெரியுது.



மிதுனம் :

இந்த டாக்டருங்கள்ளாம் சொல்வாங்களே, இப்ப கொஞ்சம் பெட்டர்னு? உங்களுக்கு அந்த மாதிரிதான். போன வாரத்தை விட இந்த வாரம் கொஞ்சம் ஹாயா இருக்கலாம். செய்யற வேலைல டென்ஷன் இருக்காது. முன்னேற்றத் தடையெல்லாம் புஸ்ஸுனு காணாமப் பூடும். ஆனா சில பேருக்கு வெளியூர் டிரான்ஸ்பர் வராப்பல தெரியுது. மூட்டை முடிச்செல்லாம் கட்டி வெச்சிக்கங்க. சாமான் எதனாச்சும் வாங்கற, விக்கற ஐடியா இருந்தா ஒரு பத்து நாள் தள்ளிப் போடுங்க. சரியா படியாதுங்கறதால சொல்றேன்.

கடகம் :



பரிதாபமா இருக்குதுங்க. இந்த வாரம் கொஞ்சம் நல்லாவே கஷ்டப்படப் போறீங்களோன்னு. பணப் பிரச்னை வரும். கடன் மட்டும் வாங்கிடாதீங்க. பல்லைக் கடிச்சிக்கிட்டு இருங்க. பசங்க கூட சில ஏமாற்றங்களைச் சந்திக்க வேண்டி வரும். குறிப்பா, பரீட்சை ரிஸல்ட்டுல. வீடு கிடு வாங்க முனையாதீங்க இப்ப. நிம்மதி போகறாப்பல எதாச்சும் நடக்கலாம்! ரொம்ப முக்கியம் வாயைக் கட்டுங்க! அட, தீனியைச் சொல்லலைங்க. அநாவசிய பேச்சு வேணாங்கறேன். இந்த வாரம் பேசிப் பேசியே கெட்ட பேர் சம்பாதிக்கற நேரம் உங்களுக்கு. பேசாம மகாத்மா மாதிரி ஒரு வாரத்துக்கு மௌன விரதம் இருந்துடுங்களேன். என்ன, கஷ்டமா? கஷ்டமெல்லாம் இந்த வாரம் மட்டும்தாங்க. அடுத்த வாரம் பிரமாதமா மாறிடும் பாருங்க!

சிம்மம் :



எப்பனாச்சும் வயித்துவலி வருதுங்களா? உடனே கவனிச்சிருங்க. இந்த ராசிக்காரங்க பலருக்கு இந்த வாரம் வயிறு சம்பந்தமான பிராப்ளம் வரலாம். சமாளிக்கப் பாருங்க. ஆனா உடம்புதான் படுத்துமே தவிர வெளியில, உங்களுக்குப் பெரிய லக்கு அடிக்கப் போகுது சார்! உத்யோக ரீதியிலே பிரமாதமான முன்னேற்றம் தெரியுது. ஜோரா ஒரு ப்ரொமோஷன் வராப்பல இருக்குது. சில பேர் ஜாலியா டூர் அடிக்கப் போறீங்க. காது நிறைய புகழ் மொழி கேட்கப் போறீங்க. ஜமாய்ங்க!

கன்னி :




யாருக்குமே இப்படியொரு ஃபுல் லென்த் யோகம் அடிக்காதுங்க. உங்களுக்கு அடிக்கப் போறா மாதிரி. ஃபாரின் டிரிப்பு, பணவரவு, வியாபார

நடக்கும்!


முன்னேற்றம், வீட்டுல சுபநிகழ்ச்சி... அட, எல்லாமேவா ஒண்ணா சேர்ந்து வரும்? என்சாய்...!

துலாம் :



நேத்து வரைக்கும் மென்னியப் புடிச்சிட்டிருந்த பிராப்ளமெல்லாம் இன்னிலேருந்து தீர ஆரம்பிச்சிடுங்க. நீங்க செய்ய வேண்டிய முக்கியமான காரியம் வேலைகளை ஒழுங்கு படுத்திக்கங்க. கட கடன்னு பிறகு செய்ய ஆரம்பிச்சீங்கன்னா ஒண்ணொண்ணா க்ளிக் ஆயிட்டே வந்துடும். இந்த ராசிக்கார மனைவிமார்களுக்கு இந்த வாரம் சூப்பரா இருக்குது. வீட்டுக்காரர் கிட்ட பாலியஸ்டர் புடைவை கேளுங்க. பட்டுப் புடைவை வந்து சேரும்! அட, பாசம் பிச்சிக்கிட்டு கொட்டுவாங்கன்னா பாருங்களேன். புள்ளைங்க உடம்பு சரியா இல்லாமப் போகலாம். கவனிச்சிக்கங்க. மத்தபடி யோகம்தான்!

விருச்சிகம் :



பொறுமையே இல்லைங்க உங்களுக்கு. அதனாலேயே இந்த வாரம் கச்சாமுச்சான்னு நிறைய சிக்கல்ல மாட்டிக்கப் போறீங்க. நீங்க ஒண்ணு நெனைப்பீங்க. நடக்கறது வேற ஒண்ணா இருக்கும். நமக்கு நாமே எதிரிம்பாங்களே... அது யாருக்குப் பொருந்துதோ இல்லையோ, இந்த வாரம் உங்களுக்கு 'ஆட்ட்'டா ஃபிட் ஆகுது! சாக்கிரதையா இருந்துக்கிடுங்க. ஒரே ஆறுதல் என்னன்னா, பிள்ளைங்க மூலமா கொஞ்சம் சந்தோஷம், நிம்மதி வரும். அதுல கொஞ்சம் குளிர்காஞ்சிக்கங்க. மத்தபடி மனஉறுதியோட இருக்கணும் இந்த வாரம்.

தனுசு :



இந்த ராசிக்கார அம்மாங்க எல்லாம் 'சின்னம்மா' ஆவப் போறீங்க. (கேஸை இல்லீங்க! நிறைய நகை வாங்கற வாய்ப்புன்னு சொல்ல வாரேன்!) வாரக் கடைசில ஒரே குஷிதான். வீட்டுல நல்ல காரியங்கள்ளாம் நடக்கப் போகுது. பிள்ளைங்களுக்கு, உத்யோக உயர்வு வரும்னு கிரகங்கள் சொல்லுது. எப்படிப் பார்த்தாலும் இந்த வாரம் ஓஹோ!

மகரம் :




பிளான்களெல்லாம் கரெக்டா போடறீங்க. பின்னே ஏன் ஒர்க்-அவுட் ஆவ மாட்டேங்குது? தொட்ட இடமெல்லாம் மனக் கசப்பு வரும் சார். அதுக்காக கலங்கிடாதீங்க! சின்னதா ஒரு ஸ்மைல்... எல்லா இடங்கள்லேயும் இதைத் தவறாம நுழைஞ்ச உடனே அவுத்து வுட்டுருங்க. ஒரு சிநேக பாவம் கிடைச்சிருமில்ல? அதுக்குத்தான்! பிறகு, பயணத்துல சாக்கிரதையா இருந்துக்கங்க. ஆக்ஸிடெண்ட் ஆவும் வாய்ப்பு தெரியுது. குறைந்தபட்சம் இந்த வாரம் ஒரு தபாவாச்சும் கால்தடுக்கியாவது கீழ விழுவீங்க. கவனம்! கவனம்!

கும்பம் :



என்ன சுகம் இருந்து என்னங்க? தூக்கம் இல்லாம கஷ்டப்படுவீங்க! ஆபீஸ், வியாபார சிந்தனைகளிலேயே ராமுச்சூடும் கழியும். விளைவு? கண் எரிச்சல்! அட, ரெஸ்ட் எடுங்க சார்! ஏன்னா, கிரக நிலைமைப் பிரகாரம் இந்த வாரம் உங்களுக்கு அலைச்சல் ஜாஸ்தி. காரியங்களும் கொஞ்சம் நரசிம்மராவ் வேகத்துலதான் நடக்கும். உங்களுக்கு ஆறுதல் தரக்கூடிய ஒரே விஷயம் - வாழ்க்கைத் துணையோட அன்பும் அரவணைப்பும்தான்.

மீனம் :



புது ட்ரெஸ்ஸு, புது நண்பர்கள் அறிமுகம், புது உறவு, புதிய முயற்சின்னு இந்த வாரம் உங்களுக்குக் கிட்டத்தட்ட புதுப்பிறவிதான். புதுசா எதாச்சும் காரியம் தொடங்கினா ஒர்க் அவுட் ஆயிடும் சார்! ஆனா, ஃபாரின் போற ஐடியாவுல இருக்கறவங்களுக்கு மட்டும் சில தடைகள் வரும். (என்ன, பாஸ்போர்ட் ஆபீஸ்ல பிராணனை வாங்குவான்!) அப்புறம் உடம்பைப் பார்த்துக்கங்க. கொஞ்சம் படுத்தும். குறிப்பா கண், கால்.

காதல் பள்ளி



'காதல்' என்று தொடங்கும் இரண்டு வார்த்தைப் படமென்றால் ஹிட்டாகுமென எண்ணிப் பெரிதாகக் 'கோட்டை' விட்டிருக்கிறார்கள்.

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் - அத்தனையிலுமா சொதப்புவார் பவித்ரன்?

நான்கு இளைஞர்கள் ஒரு பெண்ணிடம் நட்பாக மட்டுமே பழகிய படம். நால்வரில் ஒருவன் மட்டுமே அந்தப் பெண்ணைக் காதலித்த படம், நால்வருமே அவளைக் காதலிக்க, அவள் ஒருவனை மட்டுமே விரும்பிய படம் இவற்றையெல்லாம் கண்டு ரசித்த நம்மை, இந்தப் படத்தின் வித்தியாசமான ட்ரீட்மெண்ட் புல்லரிக்க வைக்கிறது. சுவலட்சுமியைக் காதலிக்கும் (!) நாலு பேரும் அவள் வேறொரு அன்னியனால் கர்ப்பமாயிருக்கிறாள் என்பது தெரிந்ததும், 'அந்தக் குழந்தைக்கு நான்தான் தகப்பன்' என்று கூறி அவளை அடையப் போட்டி போடுகிறார்கள். ஒட்டாத இந்த அபத்தத்தின் காரணமாகத்தான் சுவலட்சுமியைக் காணாமல் விக்னேஷ் எச்சில் மண்சோறு சாப்பிடும் காட்சியிலும், சிறையில் கதறும் காட்சியிலும் சென்டிமெண்ட்டில் கண்கள் கலங்குவதற்கு பதிலாக தியேட்டரில் சிரிப்பு பீறிடுகிறது.

சவசவவென்று நகருகிறது படம் - இடைவேளையைத் தாண்டியும் கூட. கடைசி அரைமணி நேரத்தில் ஒரு வழியாக சின்னதாகக் கதையை சொல்லத் தொடங்கி விடுகிறார் இயக்குனர். தீவிரவாதி, அமலாக்கப் பிரிவினர், குண்டு வெடிப்பு என்று போகிறது கதை.

சென்சார் போர்டில் பால் மணம் மாறாத பாலகர்கள் (மற்றும் பாலகிகள்) உறுப்பினர்களாக இருக்க வேண்டும். வசனம் மற்றும் காட்சிகளில் நீக்கமற நிறைந்திருக்கும் இரட்டை அர்த்தங்கள் மற்றும் ஆபாசம் குமட்டுகிறது.

வழக்கமாக அவர் ஏற்கும் பாத்திரங்கள் ஒரு புறம் இருக்க, இந்தப் படத்திலேயே கூட விசித்ராவின் அறிமுகக் காட்சிகள் மிக அகௌரவமாக அமைந்து விடுவதால் பின்னால் அவருக்கு முக்கியத்துவம் தரும்படி அமையும் காட்சிகள் ஒட்டவேயில்லை.

விக்னேஷின் நண்பர்களாக வரும் புதுமுகங்கள், அசட்டு வசனங்களும், ஓவர் கத்தலுமாக அடிக்கடி நெளிகிறார்கள் - 'சீட்'டில் நாமும். என்றாலும் 'லாரல்' முகமும் வடிவேலுவின் பாணியும் அமைந்த 'பல்லி'யிடம் நகைச்சுவை நடிப்புக்கான சரக்கு இருப்பது பளிச்சென்று தெரிகிறது.

சுவலட்சுமியின் இயல்பான நடிப்பு, கொஞ்சம் இதம். என்றாலும் விழல் - நீர்.

ஆங்கிலப் படங்களை நோக்கி ரசிகர்கள் இப்போது படையெடுக்கக் காரணம் திரையுலக ஸ்டிரைக்கினால் வெளிவர முடியாமல் போன தமிழ்ப் படங்கள் மட்டும் அல்ல. வெளிவந்து விட்ட இது போன்ற படங்களும்தான்.

— ஜி.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi

Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.

Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.

Annual Subscription : India : Rs. 208/-; Overseas : Rs. 1200/- (Air Mail)

Half Yearly Subscription : India : Rs. 104/-; Overseas : Rs. 600/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS (S) M4392/97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka